26 வது ஆண்டில்
கனடாவின் முத்த தமிழ் இதழ்
# விளம்பரம்
VLAMBARAM™
Tel: 416-282-8059
email: vlambaram@sympatico.ca
www.vlambaram.com
www.tamilvanakkam.com

RBC Insurance
அனைத்து காப்புறுதி மற்றும் சேமிப்புத்திட்ட தேவைகளுக்கும்...
Jey Ahamparam
416 301 1733
(for your Home & Auto)

மு.காசிப்பிள்ளை சக புத்திரர்கள்
3228 Eglinton Ave., East, Suite # 3
(Eglinton & Markham)
Scarborough, ON M1J 2H6
Tel. - 416.267.8221
எமக்கு வேறு கிளைகள் எதும் இல்லை

நதி 26 | பாலம் 10 | சமூக முன்னேற்றப்பத்திரிகை | மாதமிருமுறை | இலவசம் | MAY 15, 2016

# அல்பேட்டா மாகாணத்தில் காட்டுத் தீ!

கனடாவின் அல்பேட்டா மாகாணத்தில் ஃபோர்ட் மக்மறி (Fort McMurray) நகரத்திற்கு தென்மேற்கு பகுதியில் 15கி.மீ தொலைவில் 2016 மே 1ஆம் திகதி ஆரம்பித்த தீ வெகுவேகமாக பரவி 230,000 ஹெக்டேர் (568,000 ஏக்கர்) நிலப்பரப்பை தீக்கிரையாக்கிக் கொண்டு சஸ்கச்சுவான் மாகாண எல்லையை



நோக்கி நகர்கிறது. 2016 மே 10 ஆம் திகதி அளவில் தீ பரவும் வேகம் குறைவடைந்து விட்டாலும் தீயை முற்றாக அணைக்க இன்னும் பல கிழமைகள் எடுக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதுவரை இத்தீயினால் எந்த மனித உயிர் இழப்புகளும் ஏற்படாவிட்டாலும் மக்கள் நகரை விட்டு வெளியேறும் போது நடைபெ-பற்ற வாகனவிபத்தில் இருவர் மரணம் அடைந்துள்ளனர். இத்தீவிபத்தின் போது ஃபோர்ட் மக்மறி நகரத்தையும் அதை அண்டிய பிரதேசங்களிலும் 2,432 வீடுகள், மற்றும் கட்டிடங்கள் முற்றாக தீக்கிரையாக்கப்பட்டுள்ளன. 500 கட்டிடங்கள் சிறிதளவு பாதிக்கப்பட்டுள்ளன. தீயணைப்பு படையினரின் தீவிர பாதுகாப்பு நடவடிக்கைகளால் நகரில் உள்ள 94,000 பேரும் பாதுகாப்பாக வெளியேற்றப்பட்டும் நகரின் 90% ஆன கட்டிடங்களும் தீக்கிரையாக்கப்படுவதில் இருந்தும் பாதுகாக்கப் பட்டும் உள்ளன.

இவ்வாறு தீ பரவுவதை தடுக்க நடவடிக்கைகள் மேற்கொண்டிருந்தாலும் தீயினால் ஏற்பட்ட சேதங்களை முற்றாக மீளவும் கட்டி எழுப்ப கிட்டத்தட்ட $9 பில்லியன் டொலர் தேவைப்படும் என கணிக்கப்பட்டுள்ளது. இந்த காட்டுத் தீயினால் ஏற்பட்ட அழிவே கனேடிய சரித்திரத்தில் நடைபெற்ற மிகவும் விலையுயர்ந்த பேரழிவாக கருதப்படுகிறது. இதற்கு முன்னர் நடந்த பேரழிவாக குவிபெக் மாகாணத்தில் 1998 இல் நடை-பெற்ற பனிப்புயல், சரித்திரத்தில் இடம் பெறுகிறது. இப்பேரழிவில் ஏற்பட்ட சேதங்களை மீளக்கட்டி எழுப்ப $2 பில்லியன் டொலர் செலவழிக்கப்பட்டது. இத்தீயின் ஆரம்பத்திற்குரிய காரணங்கள் இன்னமும் கண்டுபிடிக்கப்படாவிட்டாலும் தீ பரவுவதற்குரிய அதிஉயர் சுற்றுபுற சூழல் வெப்பநிலை (32˚c), அதி உலர் கால நிலை (12% relative humidity), பலத்த காற்று (மணிக்கு 72 கி.மீ) என்பன அப்போது இருந்ததே தீ இவ்வாறு கட்டுக் கடங்காமல் பரவுவதற்கு காரணமாகி விட்டது எனக் கூறப்படுகிறது.

இந்த காட்டுத்தீ பரவுதலை கட்டுப் பாட்டுக்குள் கொண்டுவருவதற்கு 1,547 இற்கு மேற்பட்ட தீயணைப்பு படையினர் ஈடுபடுத்தப்பட்டனர். அவர்களுடன் 121 உலங்கு வானூர்த்திகளும், 138 கனரக இயந்திரங்களும், 28 நீர்தாங்கி வானூர்தி களும் ஈடுபடுத்தப்பட்டன. கனேடிய வான் படைக்கு சொந்தமான Hercules விமானங்கள் மக்களை இடம்பெயர உதவி புரிந்தன. அத்துடன் எண்ணை நிறுவனங் களுக்கு சொந்தமான பல தனியார் விமானங்களும் மக்களை இடம்பெயர உதவி புரிந்தன. இந்த தீயணைப்பில் அல்பேட்டா மாகாண தீயணைப்பு படையினருடன் ஒன்ராரியோ, குவிபெக், மனிரோபா மற்றும் நியூபிரவுண்ஸ்விக் மாகாண தீயணைப்பு படையினரும் சேர்ந்து ஈடுபட்டு வருகின்றனர்.

கனேடிய விமானப்படை மற்றும் தீயணைப்பு படையினரின் உதவியுடன் இந்த காட்டுத்தீ பரவுதலை கட்டுப்பாட்டுக்குள் கொண்டு வரமுடியும் என்ற நம்பிக்கையில் றஸ்சியா, அமெரிக்கா, மெக்சிக்கோ, அவுஸ்திரே லியா, தாய்வான் மற்றும் ஸ்ரேல் நாடுகளில் இருந்து வந்த உதவிகளை கனேடிய பிரதமர் ஏற்க மறுத்து அவர்களது

தொடர்ச்சி 03ஆம் பக்கம்...

Raj A. Rasaratnam
Cell: 416-726-8055
Bus: 416-321-6969
HomeLife/GTA Realty Inc

LEXUS OF RICHMOND HILL
I CAN HELP YOU WITH NEW OR PREOWNED LEXUS
INCENTIVES AS MUCH AS $6,000 ON SELECTED NEW LEXUS
COME IN FOR A TEST DRIVE AND RECEIVE A FREE GIFT.
குமார் ஜெகசோதி
Kumar Jegasothy
Pre-owned Sales Consultant

வீடு வாங்கவும் விற்கவும்...
ரவி பரமு
Real Estate Broker
Cell: 416-262-4176
Bus: 416-298-3200
HomeLife/Today Realty Ltd.,
Brokerage*
31 Progress Ave. Suite 210, Toronto
*Independently owned and operated

TD Canada Trust
Supen Subramaniyam
(Manager, Residential Mortgage)
ADVICE WHEREVER WHENEVER
416-844-8692
888-809-9154

Raguvaran Rajaguru
My 1 priority is your satisfaction!
416-712-2006
5-year variable 2.25%

இப்பொழுது 2 இடங்களில்
DENTAL OFFICE
Dr. Iru Vijayanathan,
BDS, FAGD, MFDS, RCPS (Glasg)
DENTAL SURGEON
> Wisdom Tooth Extraction
> Root canal > Dentures
> Gum Treatment
> Dental Implant
> Tooth Fillings
3150 Eglinton Ave. E., Unit 5
Markham & Eglinton
Tel:416.264.3232
3351Markham Rd., #129
Markham & Steeles
Tel: 416.609.2022

NON-MEDICAL INSURANCE
AGE 18-85
• Mortgage Protection Insurance
• Life Insurance • RESP
• Critical Illness • RRSP
• Disability
• Travel Insurance (Super Visa)
ARUN KULASINGAM
FINANCIAL ADVISOR
416-357-2847

# Mortgage and Loans!

MORTGAGE ALLIANCE
TJT Financial
Lic # 10996
Residential & Commercial Mortgage

PURCHASE YOUR HOME WITH 0% & 5% DOWN PAYMENT ALSO

2.45%*

- ⇒ 1ST & 2ND RESIDENTIAL & COMMERICAL
- ⇒ NEW IMMGIRATION PROGRAM
- ⇒ RENEWALS & REFINANCE UP TO 90%
- ⇒ CREDIT CARDS & CREDIT CONSOLIDATION
- ⇒ SECURED LINE OF CREDIT MORTGAGE

* Variable interest rate, Based on approved credit *on approved credit and income

**Pat Pushpakanthan** Mortgage Agent
Lic # M08009670
35 West Pearce street # 31 Richmond hill On L4B3A9 **Dir: 416-894-1187**

## 0.5% Listing commission

Our MLS listing include:
- Free Professional Photography
- Free Professional virtual tour
- Free custom website of your home
- Free Home Staging
- Free Feature Sheets
- Free UTube Video
- Free Online Marketing
, Open house and more..

**Pat Pushpakanthan**
Real Estate Broker **Hall of Famer**
**416-894-1187**

PAT WILL BEAT ANY DEAL*!!

To buy Home, New Condos, commercial, Farms, Lands..
Call Me For Free service!



Century 21
BROKERAGE* AFFILIATE REALTY INC
OFF: 416-290 1200
poomi2025@gmail.com

Profit From 15 years of Real estate Success

*From , valid only upto June 15/16. *Not intended to solicit existing buyers and sellers, under contract




Newer Monarch Condo rented 1800/- investment, South/West Corner Suite With Unobstructed City View. Excellent Layout 876 Sq. Ft.+ 55 Sq. Balcony, Hardwood; Fairview Mall & Subway; Minutes To Hwy 404&401. Concierge, Large Exercise Room, Indoor Swimming Pool, Guest Room, Steam Room, Bbq Deck Fr Entertaining, Designer Decorated Special Occasion/ Party Room With Server Y, Bar Area, Seating Lounge , Flat Scream Tv , Billiard Table

**County Road 47 Rd Ramara on $155 k 99 acres**



Mixed Acreage On Paved (School Bus) Road Near Brechin And Lake

**Ramara Ontario $299k 91 acres**



Mixed Acreage On Paved (School Bus) Road Near Brechin And Lake Simcoe ,Vacant Land

**Yonge & St. John's Sideroad**



Executive Home Hdwd, Ceramics, S/S Appliances, California Shutters, 3-Car Garage & Inground Pool.

**Kingston Rd/ West Of Midland**

Store With Apt/Restaurant



Great Opportunity For Investment Property Or Own To Operate Your



# THINKING OF SELLING, BUYING OR INVESTING

Always committed to work in the client's best interest
Act with Market Conditions
Exposing Your Property to 1000's of Potential Buyers

## Call me to find out how much your home worth.

*Free Market Evaluation without any Obligations*

- ✔ TRUST
- ✔ HONEST
- ✔ GUARANTEE

*We do sell Cottages & Recreational Properties*

**Muthiah Sivabalan**
Sales Representative

*Friendly and Confidential Service Just Call*

**Cell: 416.399.6640**

msbalan78@gmail.com

NOT INTENDED TO SOLICIT PROPERTIES PRESENTLY UNDER CONTRACT



HomeLife/GTA Realty Inc.
Brokerage*
5215 Finch Ave. East, Suite #203
Toronto, ON M1S 0C2
Off: 416.321.6969 Fax: 416.321.6963
"Independently Owned and Operated"

*Higher Standards Agents... Higher Results!*



# Friends MATRIMONY

திருமணத்
உங்கள் தேடலுக்கோர் முற்றுப் புள்ளி...

சனி, ஞாயிறுகளில்
12:00pm-6:00pm
இலவசமாக திருமண
பொருத்தம் பார்க்கப்படும்



- ✔ 5000 மேற்பட்ட பொருத்தமான வரன்கள் உங்கள் தெரிவுக்கு
- ✔ மிக இலகுவாக இணையத்தில் பதிவு செய்யும் வசதி
- ✔ அல்லது தொலைபேசி, தபால், email லூடாக பதிவு செய்யலாம்

info@friendsmatrimony.com
www.friendsmatrimony.com
Choose Your Life Partnar Here

அலுவலக நேரம்: திங்கள் முதல் வெள்ளி 10:30a.m- 7:00p.m

| Sri Lanka | Canada |
|---|---|
| Ph: 94-112-363663 | info: 647-709-1536 |
| No-11- 2/1, 33rd lane, | GTA Square |
| Wellawatta, | 5215 Finch Ave. E. Unit 257 |

# அல்பேட்டா...

## 01ஆம் பக்கத்தொடர்ச்சி

உதவும் மனப்பான்மைக்கு தனது நன்றியை தெரிவித்துள்ளார்.

கனேடியர்கள் காட்டுத்தீயினால் பாதிக்கப்பட்டவர்களுக்கு பொருளாகவும் பணமாகவும் உதவி வருகிறார்கள் என கனேடிய செஞ்சிலுவைசங்கம் தெரிவிக்கிறது. 2016 மே 10ஆம் திகதி வரை $67 மில்லியன் உதவித்தொகை தமக்கு கிடைத்துள்ளதாக கூறும் செஞ்சிலுவை சங்கம் இதில் $51 மில்லியன் பொதுமக்களிடம் இருந்து கிடைத்த தொகை என்கிறது.

கல்ஹரி பாடசாலைகளில் ஃபோர்ட் மக்மறியில் இருந்து இடம்பெயர்ந்தவர்கள் 1,500 பேர் தற்காலிகமாக தங்க வைக்கப்பட்டுள்ளனர். மேலதிகமாக 1,400 பேர் கல்ஹரி பல்கலைக்கழக வதிவிடங்களிலும், 1000 பேர் அல்பேட்டா பல்கலைக்கழக வதிவிடங்களிலும் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

காட்டுத்தீயினால் பாதிக்கப்பட்ட ஃபோர்ட் மக்மறிக்கு ஊடகவியலாளர்களுடன் 2016 மே 9ஆம்திகதி சென்ற அல்பேட்டாவின் முதல்வர் றேச்சல் நோட்லி (Rachel Notley) தெரிவிக்கையில் இந்நகரை சில நாட்களுக்கு முன்னர் கடல் போல் தீ நான்கு பக்கமும் சுற்றி எரித்துக் கொண்டு வந்தது. தீயணைப்பு படை வீரர்கள் அத்தீயை நகருக்குள் பரவவிடாது மிகுந்த போராட்டத்தின் பின்னர் தடுத்துள்ளனர் என்றார். மாகாணமுதல்வருடன் ஃபோர்ட் மக்மறி நகர முதல்வர் Melissa Blake மற்றும் நகர தீயணைப்பு படை தலைவர் Darby Allen உம் தீயினால் பாதிக்கப்பட்ட



நகரத்தை பேருந்துவில் ஊடகவியலாளருடன் சுற்றி பார்வையிட்டனர்.

தனது தீயணைப்பு படையினர் பலமணி நேரம் தொடர்ந்து எவ்வாறு தீயை நகரினுள் பரவவிடாது தடுத்தனர் என்பதை Darby எல்லோருக்கும் விளக்கினார். நகரின் 90% ஆன கட்டிடங்களை நெருப்பிடம் இருந்து பாதுகாத்தது பற்றி கூறிய Darby, இந்த நெருப்புடன் ஒரு பயங்கர மிருகத்துடன் (beast) போராட்டம் நடத்துவது போல் நடத்தினோம். இப்படியான ஒரு காட்டுத்தீயை தான் முன்னொருபோதும் காணவில்லை என்றார்.

நெருப்பால் எரியுண்ட வீடுகளுக்கு அருகாமையில் நெருப்பால் சற்றும் கூட பாதிக்கப்படாத வீடுகளை சுட்டிக்காட்டிய Darby தனது சொந்தவீடு முற்றாக தீக்கிரையாகியும் அருகில் உள்ள வீடுகளுக்கு நெருப்பு பிடிக்காவண்ணம் 22 மணித்தியாலங்கள் தொடர்ந்து நீரை பாய்ச்சிக் கொண்டிருந்த தனது தீயணைப்பு படைவீரர் ஒருவரின் தியாகத்தை மெச்சினார். இரண்டு மணித்தியாலத்தில் வீடு வீடாக சென்று 450 பேரை வெளியேற்றி பாதுகாப்பான இடங்களிற்கு கொண்டு சென்ற பொலிஸ் அதிகாரியின் திறமை பற்றியும் Darby கூறினார்.

ஒவ்வொரு வருடமும் 1,200 இற்கு மேற்பட்ட காட்டுத்தீ அல்பேட்டா மாகாணத்தில் வருகின்றன என அல்பேட்டா பல்கலைக்கழகத்தை சேர்ந்த பேராசிரியர் Mike Flanagan தெரிவித்தார். இவற்றில் 50% ஆனவை உருவாகுவதற்கு மனிதர்களின் தவறுகளே காரணமாகின்றன. மீதி 47% ஆனவை மின்னலால் ஏற்படுகின்றன. வசந்த காலத்திலேயே பெரும்பாலான காட்டுத்தீ உருவாகுகின்றன என்றார். தற்போது அல்பேட்டாவில் 25 இடங்களில் காட்டுத்தீ எரிகிறது. இவற்றில் ஃபோர்ட் மக்மறியைத் தவிர ஏனைய இடங்களில் காட்டுத்தீ தீயணைக்கும் படையினரின் கட்டுப்பாட்டுக்குள் உள்ளது.

மக்மாஸ்ரர் பல்கலைக்கழகத்தை சேர்ந்த வாழ்நாள் பேராசிரியர் Atif Kubursi தெரிவிக்கையில் ஃபோர்ட் மக்மறியை மீளக் கட்டி எழுப்ப செலவாகும் $9 பில்லியன் டொலரையும் காப்பீட்டு நிறுவனங்கள் (Insurance) எப்படியாயினும் தமது மாதாந்த கட்டணத்தை உயர்த்துவதன் மூலம் ஈடு செய்ய முனைவார்கள் என்றார். இதனால் கனடா முழுவதும் காப்புறுதியின் மாதாந்த கட்டணங்கள் இனிவரும் காலங்களில் உயர்வது தவிர்க்க முடியாத ஒன்று என்றார். அதே போல் நாடு முழுவதும் பெற்றோலின் விலை உயர்வும் எதிர்பார்க்கக் கூடியது

தொடர்ச்சி 16ஆம் பக்கம்...



# தமிழ் மக்களுக்கு இன்று யார் பொறுப்பு?

## நேர்காணல் - அரசியல் ஆய்வாளர் நிலாந்தனுடன்



கேள்வி - போருக்குப் பின்னரான சூழ்நிலையில் புலம்பெயர் தமிழர்களின் மனநிலை, உணர்வுகள், கருத்து வெளிப்பாடுகள் என்பன எவ்வாறு உள்ளன?

நிலாந்தன் - இன்னமும் கொந்தளிப்பாகத் தான் உள்ளது. ஆனால், போருக்குப் பின்னர் தாயகத்திற்கு வந்து கள யதார்த்தத்தை அவதானித்து சென்றவர்கள் மத்தியில் கொதிநிலை தணிந்திருப்பதை காண முடிகின்றது. கடந்தகால செயற்பாடுகளோடு தொடர்புடையவர்கள், தாயகத்திற்கு வரமுடியாத நிலையில் உள்ளனர். அவர்கள் மத்தியில் இந்தக் கொதிநிலை காணப்படுகின்றது. நாட்டிற்கு வந்துபோகக் கூடியவர்களிடம் முன்னிருந்த கொதிநிலை பெருமளவில் தணிவடைந் துள்ளது. இது கனடாவில் வாழும் தமிழர்களுக்கு மட்டுமான நிலைமை இல்லை. புலம்பெயர்ந்து ஏனைய நாடுகளில் வாழ்பவர்கள் மத்தியிலும் இதேநிலை காணப்படுகின்றது. குறிப்பாக, தங்களது கடந்த கால அரசியல் நிலைப்பாடு காரணமாக தாயகத்திற்கு வரமுடியாத நிலையிலுள்ளவர்களிடம் தாயகம் குறித்த உணர்வுகள் அதிகமான கொதி நிலையிலேயே உள்ளது.

கேள்வி - புலம்பெயர்ந்து வாழும் தமிழர்கள் தாயகத்தில் முதலீடுகளை மேற்கொள்ள வேண்டும் என்கிற எதிர்பார்ப்பு தமிழர்கள் பலருக்கும் உள்ளது. குறிப்பாக, அண்மையில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனும் இதனைக் கோரியிருக்கின்றார். அவர்களுக்கு இது தொடர்பில் விருப்பம் இருக்கின்றதா? அவர்களுக்கு இதற்கான தடைகள் ஏதேனும் உள்ளதா?

நிலாந்தன் - முதலீடு செய்ய அவர்களுக்கு நிச்சயமாக விருப்பம் இருக்கின்றது. அவர்களிடம் அது தொடர்பான கட்டமைப்பு ஒன்று இன்னும் உருவாக்கப்படவில்லை. அது தொடர்பான தேவை மதிப்பீடுகள் அவர்களிடம் இல்லை. என்னென்ன துறைகளில் முதலீடுகளை செய்யலாம் என்கிற ஆய்வுகள் இல்லை. ஆய்வு களையும் தேவை மதிப்பீடுகளையும் செய்ய வேண்டியவர்கள் தாயகத்தில் இருப்பவர்கள் தான். இங்கிருப்பவர்களும் இன்னும் அதனைச் செய்யவில்லை. தமிழ் தேசியக் கூட்டப்பினரோ, வட மகாணசபையினரோ அதனை செய்வதாகத் தெரியவில்லை. அவ்வாறு செய்தால்தான் அங்கிருப்பவர்கள் இங்கு வந்து முதலீடுகளை மேற்கொள்ள முடியும். முதலீடு செய்ய விரும்புகின்ற சிலர் இங்கு வந்திருக்கின்றார்கள். இங்குள்ள தமிழ் அமைச்சர்களிடம் கதைத்திருக்கின்றார்கள். அவ்வாறு கதைத்தும் அதற்கான நடவடிக்கைகள் எவையும் மேற்கொள்ளப்படவில்லை என அவர்கள் கூறுகின்றனர். அவர்கள் வந்து கேட்டும் இவர்கள் ஏன் அதற்கான அனுமதிகள் குறித்து நடவடிக்கை எடுக்கவில்லை என்று தெரியவில்லை.

கேள்வி - புலம்பெயர்ந்தோர் தாயகப் பிரதேசங்களில் வந்து முதலீடுகள் செய்வதற்கு இங்கு ஒரு பொறிமுறை ஏற்படுத்தப்பட வேண்டும். நீங்கள் குறிப்பிட்டதைப் போல, தமிழ் தேசியக் கூட்டமைப்பு, வட மாகாணசபை இதனை மேற்கொள்ள வேண்டும். ஆய்வுகள் தேவை மதிப்பீடுகள் போன்றவற்றை மேற்கொண்டு மத்திய அரசாங்கத்துடன் பேச்சுவார்த்தை களை மேற்கொள்ள வேண்டும். ஏதேனும் தடைகள் காணப்பட்டால் அவற்றை களைந்து சரியானதொரு வழியை அவர்களுக்கு ஏற்படுத்திக் கொடுக்க வேண்டும். கடந்த, மஹிந்த தலைமையிலான அரசாங்கத்தின் போது, புலம்பெயர்ந்த மக்களுடன் தொடர்பு கொண்டு நிதிகளை பெற்றுக்கொள்வதற்கு தடைகள் இருந்ததாக சொல்லப்பட்டது. தற்போது இந்தத் தடைகள் ஓரளவிற்கு தளர்த்தப்பட்டுள்ள தாக தெரிகின்றது. இப்போது தடை பற்றி இவர்கள் கதைப்பதில்லை. அதேவேளை

தொடர்ச்சி 06ஆம் பக்கம்...




MORTGAGE ALLIANCE
RIGHT BROKER = RIGHT MORTGAGE
Lic # 10530
Corporate Office : 2005 Sheppard Ave E, Suite 200, Toronto, ON, M2J 5B4 Toll Free : 1-877-366-3487

RIGHT AT HOME REALTY INC. BROKERAGE
#1 Brokerage in Toronto
Brokerage Office : 112-895, Don Mills Rd, Toronto, ON, M3C 1W3 Office Phone : 416-391-3232

# மோட்கேஜ் & லைன் ஒப் கிரெடிட்

## அத்தனையும் ஒரே கூரையின் கீழ்



- ⇨ நல்ல ரேட்ல மோட்கேஜ்
- ⇨ லைன் ஒப் கிரெடிட்
- ⇨ ரீபைனான்ஸ்
- ⇨ 2வது, 3வது மோட்கேஜ்
- ⇨ பாங்க்ரப்சி நிலையில் மோட்கேஜ்
- ⇨ நிலம் வாங்க மோட்கேஜ்
- ⇨ கட்டிடம் கட்டுவதற்கு மோட்கேஜ்
- ⇨ எல்லா கடனையும் ஒரே பேமென்டாக்க
- ⇨ எல்லா வகையான ரியல் எஸ்டேட் தேவைகளுக்கும்

மற்றும் உங்கள் தேவை, எதுவாக இருந்தாலும்,

பவர் ஒப் சேல் பிரச்சினையா ?

"மோட்கேஜ் கிளினிக்"
உங்களுக்கு கைகொடுக்க காத்திருக்கிறது.
416-613-2788 / 416-816-9011



## வோக் இன் - சனிக்கிழமை தோறும் 9.00 - 5.00 மணிவரை

ஜெ(Jey) இராசதுரை MBA, BBA (Hon), AMP
Team Leader / Mortgage Agent / Real Estate Sales Representative
FSCO Lic # M 09001428
**Cell : 416-624-4843**



எமது முகவரி
**1504 Markham Rd, Toronto, ON, M1B 2V9**
(Markham & HWY 401)

# தமிழ் மக்களுக்கு...

04ஆம் பக்கத்தொடர்ச்சி

யில் செயற்பாடுகளும் இல்லை..?

நிலாந்தன் - முன்பிருந்த தடைகள் உண்மையில் இப்போது நீக்கப்பட்டிருக் கின்றனவா இல்லையா என்பதை இங்குள்ள தமிழ் தலைமைகள் தான் சொல்ல வேண்டும். அது மட்டுமன்றி புலம்பெயர்ந்த மக்களின் உதவிகள் தேவையா என்பதையும் அவர்கள் தான் கூற வேண்டும். அதற்கு பிறகு நீங்கள் சொன்னதைப் போல ஒரு பொறிமுறையை ஏற்படுத்தி மத்திய அரசாங்கத்துடன் பேச வேண்டும். இதில் என்னென்ன பிரச்சினைகள், தடைகள் உள்ளன என்பது குறித்து அவர்களுடன் விரிவாக கலந்துரையாட வேண்டும். அதற்கு பின்னர் முதலீட்டாளர்களை கவரும் வண்ணம் நிகழ்ச்சிகளை நடத்தி, தமிழ் முதலீட்டாளர்கள் இங்கு வரலாம் என்பதை அறிவிக்க வேண்டும். தமிழ் ‘டயஸ்போரா’வை அபிவிருத்தி நடவடிக்கைகளில் இணைத்துக் கொள்வது குறித்து கொள்கை ரீதியான ஒரு தீர்மானத்தை மேற்கொள்ள வேண்டும். தமிழ் ‘டயஸ்போரா’விற்கு தாயகத்தின் அபிவிருத்தி பணிகளில் முக்கியமான பங்களிப்பு இருக்கின்றதென்பதை உணர வேண்டும். கனடாவில் உள்ள தமிழர் ஒருவர் என்னிடம் கேட்டார் “நான் அங்கு முதலீடு செய்ய விரும்புகின்றேன் அதனை மத்திய அரசினூடாக செய்வதா அல்லது மாகாண அரசினூடாக செய்வதா?” என்று. எனக்கு அதற்கான பதில் தெரியவில்லை. எவ்வாறான முதலீடுகள் மத்திய அரசாங்கத்தினூடாக வரவேண்டும் எவ்வாறான முதலீடுகள் மாகாண அரசினூடாக வரவேண்டும் என்பதற்கு இதுவரை சரியான தெளிவுபடுத்தல்கள் இல்லை. இதில் தமிழ் தலைமைகளுக்கு முழுப்பொறுப்பும் உள்ளது. அவர்கள் இது தொடர்பில் முடிவெடுக்க வேண்டும்.

- விகிர்தன் -

கேள்வி - அரசியல் தீர்விற்கு முன்னதாக, தீர்வு காணப்பட வேண்டிய அடிப்படையான பிரச்சினைகள் இங்கு உள்ளன. பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வாதாரப் பிரச்சினைக்கு முதலில் தீர்வுகளைத் தேட வேண்டும். போரினால் குடும்பத் தலைவர்களை இழந்த குடும்பங்கள் இருக்கின்றன. போரின் போது காயமடைந்து இயங்க முடியாமலுள்ளவர்கள் இருக்கின்றார்கள். பெற்றோரை இழந்த பிள்ளைகள் இருக்கின்றார்கள். இவர்களின் பிரச்சினைகளுக்கு முதலில் தீர்வு வழங்க வேண்டும். இன்று போர் நடைபெற்ற வன்னிப் பிரதேசத்தில் நூற்றுக்கணக்கானவர்கள் இராணுவத்தினர் நடத்தும் பண்ணைகளில் வேலை செய்கின்றார்கள். இதனை தமிழ் அரசியல்வாதிகள் விமர்சிக்கின்றனர் ஆனால், இதற்கான மாற்றுத் தீர்வினை அவர்கள் கண்டறிய முடியாதவர்களாக இருக்கின்றார்கள். இங்கு மிதிவெடியகற்றும் நிறுவனங்களிலும் வன்னியில் அமைக்கப்பட்டுள்ள இரண்டு மூன்று ஆடைத் தொழிற்சாலைகளிலும் நூற்றுக் கணக்கான இளைஞர், யுவதிகள் பணியாற்றுகின்றனர். இவை இல்லையென்றால் இவர்களின் வாழ்வாதார நிலைமை மோசமானதாகவே இருக்கும். புலம்பெயர்ந்து வாழும் முதலீட்டாளர்கள் இங்கு சில தொழிற்சாலைகளை அமைக்கலாம். அற்கான ஒழுங்குகளை தமிழ் அரசியல் தலைமைகள் செய்வதாக தெரியவில்லையே..?

நிலாந்தன் - இதற்கு ஒரு வரியில் பதில் சொல்வதானால், இன்று தமிழ் மக்களுக்கு யார் பொறுப்பு? என்ற கோள்வியைத்தான் கேட்க வேண்டியுள்ளது. இங்கு தமிழ் அரசியல் பிரதிநிதிகள் என்ற வகையில் அவர்களுக்கு அரசாங்கம் வழங்கும் அனைத்து வசதிகளையும் பெற்று அனுபவிக்கின்றார்கள். அதேவேளையில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு வெவ்வேறு நிறுவனங்கள் உதவிகளை செய்ய வருகின்றபோது அவர்களிடம் அவற்றைப் பெற்றுக்கொள்ள வேண்டாம் என்று கூறுகின்றார்கள். இதைவிட குழப்பமான நிலைமைகளும் எங்கள் மத்தியில் உள்ளன. கடந்த 2009 இற்குப் பிறகு, 2015 ஜனவரியில் நடைபெற்ற ஜனாதிபதி தேர்தல் வரையான காலத்தில் இரண்டு முக்கியமான புலம்பெயர்ந்த முதலீட்டு நிறுவனங்கள் மஹிந்த ராஜபக்ஸ அரசாங்திற்குள்ளாக உள்நுழைய முற்பட்ட போதும், தென்னிந்திய சினிமா வட்டாரங்களுக்குள்ளாக உள்நுழைய முற்பட்ட போதும் இங்கு தமிழ் தேசிய அரசியல்வாதிகளால் கடும் எதிர்ப்பு வெளியிடப்பட்டது. ஆனால், 2015 ஜனவரிக்குப் பிறகு அந்த நிறுவனங்கள் ஊடகங்கள் ஊடாகவும், தொண்டு நிறுவனங்கள் ஊடாகவும் தாராளமாக உலாவுகின்றன. 2015இற்கு முன்னர் அவர்கள் வர முற்பட்ட போது, அவர்கள் இனப்படுகொலையின் பங்காளிகள் என்றும், ராஜபக்ஸவின் கூட்டாளிகள் என்றும் கடுமையாக விமர்சிக்கப்பட்டது. கோடாம்பாக்கம் சினிமாவிற்குள் அவர்கள் நுழைந்த போதும் அதனை பகிஷ்கரிக்க வேண்டும் என கடுமையாக இங்கு எதிர்ப்புகள் காட்டப்பட்டன. ஆனால், கடந்த ஓராண்டுகளாக அவர்கள் இங்கு தாராளமாக உலாவுகின்றார்கள் முதலீடுகள் செய்கின்றார்கள். அவர்களது அறக்கட்டளை நிறுவனங்கள் இயங்குகின்றன. இவர்களை ஆட்சிமாற்றத்திற்கு முன்னர் ஒரு மாதிரியாகவும் ஆட்சிமாற்றத்தின் பின்னர் ஒரு மாதிரியாகவும் பார்க்கும் நிலை ஏற்பட்டுள்ளது. அவர்கள் தொடர்பான விமர்சனங்கள் யாவும் தணிந்து விட்டன. இது எப்படி நடந்தது? இங்கு என்ன நடக்கிறது என்றால், பிரச்சினைகளை உண்டாக்கி தங்களை முன்னிறுத்த முயற்சிக்கின்றவர்கள் பலர் பிரச்சினைகளை தீர்க்கவோ, பிரச்சினைகளை தீர்க்க என்ன வழி என்பதை சிந்திப்பதற்கோ தயாராக இல்லை.

தமிழ் மக்களுக்கு யார் பொறுப்பு? என்கிற கேள்வியை ஏன் இன்று கேட்க வேண்டியிருக்கின்றது என்றால், அந்த நாட்களில் ஒரு அரை அரசாங்கத்தை (Semi Government) விடுதலைப்புலிகள் வன்னிப் பிரதேசத்தில் நடத்தினார்கள். புலிகள் தொழில் வழங்குநர்களாகவும் இருந்தார்கள். ஆயிரக்கணக்கானோருக்கு தொழில்வாய்ப்பு வழங்கினார்கள். போர் முடிவுற்றதன் பின்னர் அந்தக் குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன. அவர்களுக்கு பின்னர் கைகொடுத்தவை நீங்கள் முன்னர் குறிப்பிட்ட நிறுவனங்கள்தாம். இங்கு அந்த மக்களின் வறுமையை இவர்கள் சுரண்டுவதாக தமிழ் அரசியல்வாதிகள் விமர்சனங்களை முன்வைக்கின்றார்கள். தொடர்ந்து இவ்வாறான விமர்சனங்களை முன்வைத்துக்கொண்டிருக்க முடியாது. உதாரணமாக 2010 இல் முன்வைத்த விமர்சனங்களை இப்போது முன்வைக்க முடியாது.

கேள்வி - கனடாவில் உரையாற்றும் போது தமிழ் தேசியத்தை கட்டியெழுப்புவது தொடர்பாக ஒரு கருத்தினை கூறியிருந்தீர்கள். தாயகத்திலும், இந்தியத் தமிழகத்திலும், புலம்பெயர்ந்த தளத்திலும் கூட்டிணைந்து தமிழ் தேசியத்தை கட்டியெழுப்ப வேண்டும் என்று. இவ்வாறு தமிழ் தேசியத்தை கட்டியெழுப்புவதன் மூலம் தமிழ் மக்களுக்கான தீர்வுகளை பெற்றுக்கொள்ள முடியுமா?

நிலாந்தன் - நான் அவ்வாறு கூறியது கனடாவிலும் வேறொரு அர்த்தத்தில் பார்க்கப்பட்டது. அதாவது ஒரு அகன்ற தமிழ் தேசியத்தை கட்டமைப்பது குறித்து நான் குறிப்பிட்டதாக பார்க்கப்பட்டது. அவ்வாறில்லை. நான்



சொல்ல வந்தது, ஈழத் தமிழ் தேசியம் பற்றியது தான். ஆனால், ஈழத்தமிழ் தேசியம் என்பது தமிழகத்தினதும் புலம்பெயர் தளத்தினதும் பங்களிப்பின்றி அடுத்த கட்டத்திற்கு செல்ல முடியாது. இந்த அர்த்தத்தில்தான் நான் அவ்வாறு கூறினேன். இதேவேளை, கடந்த ஏழு வருடங்களாக தமிழ் மக்களின் பிரச்சினைகள் தொடர்பில் சிந்திப்பதற்கு ஒரு அமைப்பு ரீதியான செயற்பாடு இல்லை. பிரதான தமிழ் அரசியல் கட்சியினது தலைமைப் பீடம் என்பது ஒரு நிழல் அரசாங்கத்தை செயற்படுத்துவது போன்று அமைந்திருக்க வேண்டும் அவ்வாறான எதுவும் தமிழ் தேசியக் கூட்டமைப்பிடம் இல்லை. உதாரணமாக, போரிலே எத்தனை பேர் கொல்லப்பட்டனர்? எத்தனை பேர் காணாமல் போயுள்ளனர்? காயங்களுக்குள்ளானவர்கள் எத்தனை பேர்? போன்ற விபரங்களை அறிய முற்பட்டால், ஒவ்வொருவரும் ஒவ்வொரு விதமான புள்ளிவிபரங்களை கூறுகின்றனர். இந்த புள்ளிவிபரங்களை திரட்டுவது தொடர்பில் அதனை எங்களது அரசியல்வாதிகள் ஒரு செயற்பாடாக முன்னெடுக்க வேண்டும். இந்த விபரங்கள் தொடர்பில் சரியானதொரு மதிப்பீட்டிற்கு வரவேண்டும். ஆனால், இவர்கள் எதனையுமே பொறுப்பேற்கிறார்களில்லை. மீண்டும், ‘இன்று தமிழ் மக்களுக்கு யார் பொறுப்பு?’ என்ற கேள்வியினையே கேட்க வேண்டியுள்ளது.




APPLEMORE AUTOMOTIVE

உட்புற, வெளிப்புற திருத்த பராமரிப்பு வேலைகளுக்கு என்றும் உங்கள் மத்தியில்

ONTARIO'S DRIVE CLEAN
Accredited Test & Repair Facility

- Detailing
- Motor Shampoo
- Interior Shampoo
- Exterior Wash
- Waxing
- Repairs
- Safety Certification
- Overall Maintenance
- Under Coating
- Rust Proofing

416-285-4998

435 Midwest Road. Unit B5, Scarborough, ON. M1P 3A6

SPECIAL

# அமெரிக்க ஜனாதிபதி தேர்தல் - தற்போதைய நிலவரம்

2016 பெப்ரவரி 15 விளம்பரம் இதழில் இருந்து அமெரிக்க ஜனாதிபதி தேர்தல்முறை நான்கு பிரிவுகளை அடக்கியது எனவும் அவையாவன:

1. Prenomination Phase - ஜனாதிபதி வேட்பாளரை தெரிவு செய்ய முந்திய காலப்பகுதியாகும்.
2. National Conventions Phase - தேசிய மாநாடு இது ஜனாதிபதி மற்றும் உபஜனாதிபதியை வேட்பாளரை கட்சிகள் தெரிவு செய்யும் மாநாடு. (ஜூலை 2016)
3. General Election Phase - தேர்தல் பிரச்சாரமும் பொதுத்தேர்தலும் (நொவம்பர் 08, 2016 வரை)
4. Electoral College Phase - ஜனாதிபதி மற்றும் உபஜனாதிபதியை உத்தியோகபூர்வமாக தெரிவு செய்து அறிவிக்கும் காலம் (நொவம்பர் 08, 2016இல் இருந்து 20, 2017 வரை)



எனவும் அவை நான்கையும் விரிவாகப் பார்த்தோம். 2016 ஏப்பிரல் 15 விளம்பரம் இதழில் இருந்து அமெரிக்க ஜனாதிபதி தேர்தலின் தற்போதைய நிலவரம் பற்றிப்பார்த்து வருகிறோம்.

இதுவரை 2016ஆம் ஆண்டில் நடைபெற உள்ள அமெரிக்க ஜனாதிபதி தேர்தலில் ஜனநாயகக் கட்சியின் சார்பில் நாடு தழுவிய வேட்பாளர்களாக இருப்பவர்கள் இருவர். அவர்கள் Hillary Clinton உம் Bernie Sanders உம் ஆவர். குடியரசுக்கட்சியின் சார்பில் மேலும் இருவர் விலகியபின்னர் ஒருவரே நாடு தழுவிய வேட்பாளராக இருக்கிறார். அவர் Donald Trump ஆவர்.

## ஜனநாயகக்கட்சி

2016இல் அமெரிக்க ஜனாதிபதி வேட்பாளராக வர ஜனநாயகக்கட்சிக்கு 56 மாநிலங்கள் மற்றும் பிரதேசங்களில் இருந்து தெரிவு செய்யப்படும் 4,765 பிரதிநிதிகளில் குறைந்தது 2,383 பேர் ஆதரவளிக்க வேண்டும். 2016 மே 15 வரை நடைபெற்ற 45 மாநிலங்கள் மற்றும் பிரதேசங்களில் இருந்து Hillary Clinton 1,716 பிரதிநிதிகளையும் Bernie Sanders 1,433 பிரதிநிதிகளையும் பெற்றுள்ளார்கள். ஜனநாயகக் கட்சிக்கான அடுத்த தேர்தல் மே 17இல் கென்ராக்கி மற்றும் ஒறகன் மாநிலங்களில் நடைபெற உள்ளன. ஜனநாயகக்கட்சியின் தேசியமாநாடு 2016 யூலை 25இல் Philadelphia, Pennsylvania இல் நடைபெற உள்ளது.

கட்சிமாநாட்டில் பங்குபற்றும் ஜனநாயகக் கட்சி நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் கட்சித் தலைவர்கள் உட்பட சிலருக்கு தாம் விரும்பும் ஜனாதிபதி வேட்பாளரை ஆதரிக்கும் உரிமை உண்டு. அவர்களில் பலர் ஏற்கனவே தாங்கள் யாரை ஜனநாயகக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக தெரிவு செய்ய தமது வாக்குகளை அளிப்போம் எனக் கூறிவிட்டனர். இவ்வாறு கூறியவர்



களுடைய வாக்குகளையும் சேர்த்துப் பார்த்தால் Hillary Clinton இற்கு இதுவரை 2,240 பிரதிநிதிகளின் ஆதரவும் Bernie Sanders இற்கு இதுவரை 1,473 பிரதிநிதிகளின் ஆதரவும் கிடைத்துள்ளன.

இதுவரை 45 மாநிலங்கள் மற்றும் பிரதேசங்களின் தேர்தல் முடிவடைந்து விட்டன. மீதமுள்ள 11 மாநிலங்கள் மற்றும் பிரதேசங்களில் இருந்து தெரிவு செய்யப்பட 1,052 பிரதிநிதிகள் இருக்கின்றனர். இவர்களில் 143 பிரதிநிதிகளின் ஆதரவை (14%) பெற்றாலே Hillary Clinton ஜனநாயகக்கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக அக்கட்சியின் மாநாட்டிற்கு முன்னரே ஊடகங்களால் உறுதிப்படுத்தப்பட்டு விடுவார்.

Bernie Sanders ஜனநாயகக்கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக வர இன்னமும் தெரிவு செய்யப்படவுள்ள 1,252 பிரதிநிதிகளில் 910 பிரதிநிதிகளின் ஆதரவை (87%) பெற வேண்டும். இது நடைமுறைக்கு சாத்தியமற்றது.

## குடியரசுக்கட்சி

2016இல் அமெரிக்க ஜனாதிபதி வேட்பாளராக வர குடியரசுக்கட்சிக்கு 56 மாநிலங்கள் மற்றும் பிரதேசங்களில் இருந்து தெரிவு செய்யப்படும் 2,472 பிரதிநிதிகளில் குறைந்தது 1,237 பேர் ஆதரவளிக்க வேண்டும். 2016 மே 15 வரை நடைபெற்ற 48 மாநிலங்கள் மற்றும் பிரதேசங்களில் இருந்து Donald Trump 1,134 பிரதிநிதிகளை பெற்றுள்ளார்கள். குடியரசுக்கட்சிக்கான அடுத்த தேர்தல் மே 17இல் ஒறகன் மாநிலத்தில் நடைபெற உள்ளது. குடியரசுக்கட்சியின் தேசிய மாநாடு 2016 யூலை 18இல் Cleveland, Ohioஇல் நடைபெற உள்ளது.

2016 மே 03 இல் இன்டியானா மாநிலத்தில் Donald Trump வென்றதை தொடர்ந்து குடியரசுக்கட்சியின் மற்றைய இரண்டு ஜனாதிபதி வேட்பாளர்களான Ted Cruz உம் John Kasich உம் போட்டியில் இருந்து விலகிக் கொண்டனர். இதனால் குடியரசுக்கட்சியில் Donald Trump ஐ தவிர வேறு எவரும் ஜனாதிபதி வேட்பாளராக குடியரசுக்கட்சியின் மாநாட்டுக்கு முன்னர் தெரிவு செய்யப்படுவது தற்போது சாத்தியமற்றதாகி விட்டது.

குடியரசுக்கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக தெரிவு செய்யப்பட தேவையான 1,237 பிரதிநிதிகளில் ஏற்கனவே Donald Trump 1,134 பிரதிநிதிகளின் ஆதரவை பெற்றுவிட்டார். இதுவரை 48 மாநிலங்களினதும் மற்றும் பிரதேசங்களிலும் தேர்தல் முடிவடைந்து விட்டன. மீதமுள்ள 8 மாநிலங்கள் மற்றும் பிரதேசங்களில் இருந்து தெரிவு செய்யப்பட 438 பிரதிநிதிகள் இருக்கிறனர். இவர்களில் 103 பிரதிநிதிகளின் ஆதரவை (24%) பெற்றால் Donald Trump குடியரசுக்கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக அக்கட்சியின் மாநாட்டிற்கு முன்னரே ஊடகங்களால் உறுதிப்படுத்தப்பட்டுவிடுவார்.

## பொதுத்தேர்தல் பிரச்சாரம்

ஜனநாயகக்கட்சியில் இன்னமும் இரண்டு ஜனாதிபதி வேட்பாளர்கள் இருப்பதாலும் அவர்களில் Bernie Sanders தொடர்ந்தும் Hillary Clintonஐ தாக்கி பேசி வருவதாலும் அது ஜனநாயகக் கட்சிக்கு பொதுத்தேர்தல் பிரச்சாரக் காலத்தில [தேசிய மாநாட்டில் (ஜூலை 2016) இருந்து ஜனாதிபதி தேர்தல்வரை (நொவம்பர் 08, 2016)] பாதகமாக அமையுமென ஊடகவியலாளர்கள் தெரிவிக்கின்றனர்.

குடியரசுக்கட்சி ஜனாதிபதி வேட்பாளராக Donald Trump மட்டுமே எஞ்சியிருப்பதால் அவர் குடியரசுக்கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் தான் எனக்கூறிக்கொண்டு இப்போதே பொதுத்தேர்தல் பிரச்சாரத்தில் இறங்கிவிட்டார். அவர் தற்போது ஜனநாயகக்கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக வரக்கூடிய Hillary ஐ எதிர்த்து Bernie பாவிக்கும் வசனங்களை தனக்கு சாதகமாக பொதுத் தேர்தல் பிரச்சாரத்தில் பாவித்து வருகிறார். Donald Trump தான் Bernie இன் தேர்தல் பிரச்சாரக் குறிப்பு களைப் படித்து வருவதாகவும் அவற்றில் Hillary க்கு

சிவ ஞானநாயகன்
vlambaram@sympatico.ca



தொடர்ச்சி 16ஆம் பக்கம்




LAW OFFICE
STEFANO FORTINI
B.A., LL.B., Barrister & Solicitor
3 Catherine Avenue, Aurora, Ontario L4G 1K4
Tel: 416.999.4376
Fax: 905.727.7017
Email: sfortini@rogers.com




# ஒரு வருடமாக நடைபெறும் வித்தியா கொலை வழக்கு துரிதப்படுத்தப்படுமா!

- ஆதித்தன் -



புங்குடுதீவில், மாணவி வித்தியா பாலியல் வல்லுறவிற்கு உட்படுத்தப்பட்டு கொலை செய்யப்பட்ட கொடூரமான சம்பவம் இடம் பெற்று ஓராண்டாகின்ற போதும் அது தொடர்பான வழக்கு தாமதமாகி, இழுபட்டு வருவதாகவே உணர முடிகின்றது.

2015ஆம் ஆண்டு மே மாதம் 13 ஆம் திகதி வித்தியா வன்புணர்விற்குட்படுத்தப்பட்டு கொலை செய்யப்பட்டார். குற்றவாளிகள் என சந்தேகப்பட்டவர்கள் அடுத்தடுத்த நாட்களிலேயே கைது செய்யப்பட்டனர். இதுவரை 13 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டு விசாரணைக்குட்படுத்தப்பட்டு வருவதாக தெரிவிக்கப்படுகின்றது.

ஊர்காவற்றுறை நீதிமன்றில் இந்த வழக்கு விசாரணை நடைபெற்று வருகின்றது. கடந்த 11-05-2016 அன்று பிரதான சந்தேக நபர்கள் ஒன்பது பேர் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டனர். மேல் நீதிமன்ற வளாகத்தில் பொலிஸார் மற்றும் விசேட அதிரடிப் படையினரின் கடும் பாதுகாப்பு வழங்கப்பட்டது. இந்த வழக்கு, ஒரு வருடமாக நடைபெற்று வருகின்ற நிலையில், தொடர்ந்தும் வழக்கை ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் நடத்துவதற்கான அனுமதியைப் பெறும் பொருட்டு மேல் நீதிமன்றத்திற்கு வந்ததாக தெரிவிக்கப்பட்டது. அப்போது, சந்தேக நபர்கள் ஒன்பது பேரும் பிணை வழங்குமாறு விடுக்கப்பட்ட கோரிக்கை மேல் நீதிமன்றத்தினால் மறுக்கப்பட்டது.

இந்த வழக்கின் அடுத்த கட்ட விசாரணைகள் எதிர்வரும் 10.08.2016 இடம்பெறும் என்றும் அன்றைய தினம் சந்தேகநபர்கள் நீதிமன்றத்தில் சமூகமளிக்குமாறும் யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி இளஞ்செழியன் உத்தரவு பிறப்பித்தார். விசாரணைகளை துரிதப்படுத்துமாறும் குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்கு நீதிபதி உத்தரவிட்டார். இந்த வழக்கு விசாரணை விரைவில் நிறைவு பெற்று குற்றவாளிகள் தண்டிக்கப்பட வேண்டும் என்கிற எதிர்பார்ப்பு வித்தியாவின் பெற்றோர் உறவினர்களுக்கு மட்டுமல்லாமல் அனைவருக்குமே உள்ளது. எனினும், இந்த வழக்கு தாமதமாவதற்கு என்ன காரணம் என்று நோக்கும் போது சந்தேக நபர்களின் மரபணு பரிசோதனை அறிக்கை இன்னமும் நீதிமன்றில் சமர்ப்பிக்கப்படாமை ஒரு பிரதான காரணியாக உள்ளது.

ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்றத்தில் நடைபெற்று வரும் இந்த வழக்கு விசாரணையின் போது, பிரதான சந்தேக நபர்கள் ஒன்பது பேரும் மரபணு பரிசோதனை செய்து அறிக்கை சமர்ப்பிக்குமாறு நீதிபதி உத்தரவிட்டு, பின்னர் பல தவணைகளாக வழக்கு விசாரணை நடைபெற்று வருகின்ற போதும், மரபணு பரிசோதனை அறிக்கை நீதிமன்றில் சமர்ப்பிக்கப்படவில்லை. பின்னர், இவ் வழக்கின் முதல் ஒன்பது சந்தேக நபர்களுடைய மரபணு பரிசோதனை அறிக்கை மன்றிற்கு கிடைப்பதற்குத் தாமதம் ஏற்படுவதற்கான காரணம் தெரியப்படுத்தப்பட வேண்டும் என்று அவ் ஆய்வினை மேற்கொண்டு வரும் ஜீன்ரெக் நிறுவனத்திற்கு நீதிமன்றினால் அறிவிக்கப்பட்டிருந்தது.

மரபணு பரிசோதனை ஆய்வுகளுக்கான பணம் உரிய காலப்பகுதிக்குள் செலுத்தப்படவில்லை என்று அவ்வாய்வினை மேற்கொண்டு வரும் ஜீன்ரெக் நிறுவனம் தெரிவித்தது. இதன் காரணத்தினாலேயே மரபணு பரிசோதனையை நிறைவு செய்து அறிக்கை சமர்ப்பிப்பதற்கு காலதாமதம் ஏற்படுகின்றது என்றும் அந்நிறுவனம் கூறியது. இது தொடர்பில் ஜீன்ரெக் நிறுவனத்தினால் அனுப்பிவைக்கப்பட்ட பதில் நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. தொடர்ந்து, இந்த மரபணு பரிசோதனை மேற்கொள்வதற்கான பணத்தினை செலுத்துமாறும், ஆய்வைத் தீவிரப்படுத்தி மன்றிற்கு அறிக்கை சமர்ப்பிக்குமாறும் நீதவான் உத்தரவு பிறப்பித்திருந்தார். பின்னரும், உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு மரபணு பரிசோதனை அறிக்கை நீதிமன்றில் சமர்ப்பிக்கப்படுவது தாமதமாகியே வருகின்றது.

தென்னிலங்கையில் சிறுமி சேயா பாலியல் வல்லுறவிற்குட்படுத்தப்பட்டு கொலை செய்யப்பட்ட வழக்கில், சந்தேகத்தின் பேரில் சிலர் கைது செய்யப்பட்ட போதும் மரபணு பரிசோதனை அறிக்கையின் பின்னரே குற்றவாளி இனங்காணப்பட்டு, ஏனையோர் விடுதலையாகும் நிலை ஏற்பட்டது. எனவே, வித்தியா கொலை தொடர்பிலும் சந்தேக நபர்களின் மரபணு பரிசோதனை அறிக்கை நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்டால் குற்றவாளிகள் இனங்காணப்பட்டு அவர்களுக்கான தண்டனைகளை வழங்கி இந்த வழக்கினை நிறைவு செய்யும் நிலை ஏற்படும். இப்போது இந்த பரிசோதனை அறிக்கையினையே அனைவரும் எதிர்பார்த்துக் கொண்டிருக்கின்றனர். ஆனாலும், தற்போது இந்த வழக்கில் திருப்பமாக சில விடயங்கள் நடைபெற்று வருகின்றன என்பதையும் இங்கு குறிப்பிட வேண்டும்.

முதலில் ஒன்பது பேர் கைது செய்யப்பட்டு, பின்னர் நான்கு பேர் கைது செய்யப்பட்டு இதுவரையில் 12 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டு தடுத்து வைக்கப்பட்டனர். இந்நிலையில், 13வதாகவும் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். இவரை குற்றப்புலனாய்வு பொலிஸார் கடந்த 10ம் திகதி ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் இரகசியமான முறையில் கொண்டுவந்திருந்தனர். அந்தச் சந்தேகநபர் கொலையுடன் தொடர்பு உடையவரா அல்லது சாட்சியாளரா என்பது குறித்த தகவல்கள் இதுவரை வெளிப்படுத்தப்படவில்லை. இந்த நபரின் மூலம் வழக்கில் திருப்பங்கள் ஏற்படலாம் என்ற எதிர்பார்ப்பு உள்ளது. இதேவேளை, கைது செய்யப்பட்டவர்களில் ஒருவரான சுவிஸ் குமார் என்பவரின் விடயம் தொடர்பிலும் சில முடிச்சுகளை அவிழ்க்கும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட சுவிஸ் குமார் யாழ். பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டிருந்த நிலையில், அவர் எவ்வாறு கொழும்பு சென்றார், அவர் யாருடன் தொலைபேசியில் தொடர்பு கொண்டார் என்பது பற்றியும், அவர் தொடர்பான மேலும் பல தகவல்கள் தொடர்பிலும் விசாரித்து அறிக்கை சமர்ப்பிக்கும்படி நீதிமன்றம் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்கு சில தினங்களுக்கு முன்னர் உத்தரவிட்டுள்ளது.

"வழக்கில் சந்தேக நபராகக் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் உள்ள ஒன்பதாவது சந்தேக நபரான சுவிஸ் குமார் யாழ்.பொலிஸ் நிலையத்தில் சரணடைந்தார் எனவும், பின்னர் கொழும்பில் வைத்துக் கைதுசெய்யப்பட்டார் எனவும் அறிந்தோம். குறித்த நபர் யாழ்.பொலிஸ் நிலையத்தில் சரணடைந்திருந்தால் பின்னர் எவ்வாறு கொழும்புக்குச் சென்றார்? கொழும்பில் எவ்வாறு கைதுசெய்யப்பட்டார்? இவை தொடர்பில் உரிய விசாரணை நடத்தி அறிக்கை சமர்ப்பிக்குமாறு நீதிமன்று குற்றப் புலனாய்வுத் திணைக்களத்துக்கு உத்தரவிட வேண்டும்" - என்று சட்டத்தரணி வி.மணிவண்ணன் வாதிட்டார்.

வித்தியாவின் குடும்பத்தினர் நீதிமன்றிற்கு வந்து செல்லும் போதெல்லாம் சந்தேக நபர்களின் உறவினர்கள் வித்தியாவின் குடும்பத்தினரை இகழ்கின்றனர். அவர்களுக்கு அச்சுறுத்தல் விடுக்கின்றனர். அதனால் நீதிமன்றிற்கு வருவதற்கு அச்சமாகவுள்ளதாக அவர்கள் தெரிவித்துள்ளனர் என்றும், சாட்சிகள் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் சந்தேகநபர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றும் அவர் கோரினார். அதன் பின்னர் நீதவான் பின்வரும் கட்டளைகளைப் பிறப்பித்தார்.

சுவிஸ் குமார் யாழ். பொலிஸ் நிலையத்தில் கைது செய்யப்பட்டாரா? அல்லது சரணடைந்தாரா? அவர் தானாகச் சென்று சரணடைந்தாரா? அல்லது வேறு யாராவது பாரப்படுத்தினார்களா? வேறு நபர்கள் பாரப்படுத்தியிருப்பின் அவர்களின் பெயர் விவரங்கள் என்ன? வேறு நபர்கள் எனின் அவர்களுக்கும் சுவிஸ் குமாருக்கும் இடையிலான சம்பந்தம் என்ன? வேறு நபர்கள் எனின் அவர்கள் இந்த வழக்கில் அவ்வாறு செயற்பட வேண்டிய சட்ட தேவைப்பாடு அல்லது காரணம் உள்ளனவா?

சுவிஸ் குமார் சம்பவ இடத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டிருந்தால் அவர் எவ்வாறு கொழும்பு சென்றார்? அதற்கு யாராவது உதவியிருந்தால் அவர்களது பெயர் விவரங்கள் என்ன? யாழ். பொலிஸ் நிலையத்தில் அவர் சரணடைந்திருந்தால் அதற்கான சட்ட ரீதியான குறிப்புக்கள் உள்ளனவா? அந்தக் குறிப்புக்கள் பேணப்பட்டனவா? சரணடைந்திருந்தால் அவர் ஏதாவது நீதிமன்றில் முற்படுத்தப்பட்டாரா? அவர் கொழும்பிற்கு சென்றது பொலிஸ் காவலிலா அல்லது சாதாரணமாகவா? சாதாரணமாகச் சென்றிருந்தால் அவர் பொலிஸாரால் விடுதலை செய்யப்பட்டாரா? அவர் அவ்வாறு விடுதலை செய்யப்பட்டால் யாரால், எந்தச் சட்டப்படி, எந்த ஏற்பாட்டில் விடுதலை செய்யப்பட்டார்?

சுவிஸ் குமார் எத்தனை அலைபேசிகள் பயன்படுத்தினார்? அவரது அலைபேசிக்குரிய அறிக்கைகள் பொலிஸாரால் பேணப்பட்டுள்ளதா? சம்பவம் இடம்பெறுவதற்கு ஒரு வாரத்திற்கு முன்னர் வரையும் சம்பவம் நடந்த பின்னரான ஒரு வாரம் வரைக்கும் அவர் தொடர்பு கொண்டிருந்த அலைபேசிகளின் ஒலிப்பதிவு, ஆவணங்கள் பொலிஸாரால் திரட்டப்பட்டதா? யாராவது

தொடர்ச்சி 16ஆம் பக்கம்...

விளம்பரம்™
VLAMBARAM™

பதிப்பாளர்: ராஜா மகேந்திரன்
பத்திரிகை ஆசிரியர்: சத்தியா மகேந்திரன்
பத்திரிகை முகாமையாளர்: கமல் செல்லையா
ஊடகப்பொறுப்பாளர்: விஜய் செல்லையா
தட்டச்சு: கலா விஜயபாலன்
அலுவலக பொறுப்பாளர்: செல்வி ரஞ்சன்
தாரணி இந்திரராஜ்
பதிப்பு: Canyon Press Inc.

Vlambaram Publications Inc.
GTA SQUARE, 5215 FINCH AVE. E.,
#201, TORONTO, ON M1S 0C2, CANADA
TEL: 416-282-8059 FAX: 416-286-0334
e-mail: Vlambaram@sympatico.ca
Web: www.vlambaram.com / www. tamilvanakkam.com

விளம்பரம் பத்திரிகை 'விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ் இங்' ஆல் வெளியிடப்படுகிறது. விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களே பொறுப்பாளர்கள். பதிப்புரிமை: 2004 விளம்பரம் பப்ளிக்கேஷன்ஸ் இங். விளம்பரத்தில் வெளியாகும் ஆக்கங்களை முழுமையாகவோ, பகுதியாகவோ ஆசிரியரின் எழுத்து மூல அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.

# நிருபிக்கப்பட்ட G7-500 கணித வெற்றி நெறி

**For Gr. 7**

கடந்த **27** வருடத்திற்கும் மேலாக கணிதபாடம் கற்பித்தல் ஏற்பட்ட அனுபவத்தில், தரம் 11, 12இல் பயிலும் மாணவர்கள் மிக அவதிக்குட்படுவதைக் கண்காணிக்கக்கூடியதாக இருந்தது. இவ் இக்கட்டான சூழ்நிலைகளைத் தவிர்க்கவென்றே எமது முழு அனுபவங்களையும் திரட்டி May2015இல் மிகப்பெரிய கணித கல்வி நெறியொன்றான **G8-400** ஆரம்பிக்கப்பட்டது. இத்திட்டத்தின்மூலம் மிகச்சிறப்பான வெற்றிகிட்டியதோடு, மேலும் புதிய அதினுண்மையும் புலப்பட்டது. இப்புதிய அனுபவத்துடன் பல பெற்றோரின் வேண்டுதலினையும் செவிமடுத்ததில் இவ்வருடம் **G7-500** எனப்படும் புதிய கணித பாடத்திட்டம் தற்சமயம் தரம் 7இல் பயிலும் மாணவர்களுக்காக ஆரம்பிக்கப்படவுள்ளது. இத்திட்டத்தின் முழுவிபரங்களை மாணவர்களும் பெற்றோர்களும் அறியும் பொருட்டு ஓர் சிறிய கணித அறிமுகதேர்வு நடைபெறவுள்ளது. ஆர்வமுடைய பெற்றோர்கள் பின்வரும் மின்அஞ்சல்மூலம் மாணவர் பெயர், பாடசாலை, தொலைபேசி இல., இவற்றுடன் முற்பதிவுசெய்யவும்.



அறிமுகத் தேர்வு: **May 21/2016**

பதிவுத் தேதி இறுதிநாள்: **May 16/2016**

மின் அஞ்சல் : **g7.500math@gmail.com**

## New classes for 2016 / 17

- For current Gr.7 **New** — G7-500 — starts: May 23/16
- For current Gr.8 **New** — G8-400 — starts: May 23/16
- For current Gr.10 — G11 & 12 — starts: May 1/16

Entire new program, Helps students score 90's and above in Function(G11) and AF(G12)

*University Level

- For current Gr.11 — G12-100AFCV — starts: May 15/16

**(Advanced Function, Calculus &Vectors)**

The most wanted program for Gr.11. If anyone is thinking of going into higher level University for a life science or Engineering program, You must consider this Program.

*University Level

மேலதிக தகவல்களுக்கு

# Info: 416-666-5515

**MATH WORLD**
MOST ADVANCED TALENTED HELP

# வைக்கோவின் கண்ணீர் கதை!

## தமிழ்நாடு அரசியல்

'பழம் நழுவி பாலில் விழும்' என்று வெளிப் படையாக அறிவித்துவிட்டு, தேமுதிக கூட்டணிக்காக கலைஞர் காத்திருந்த போது, 'பாலும் பழமும் எங்களுக்குத்தான்' என்று சவால் விட்டு, விஜயகாந்தை மக்கள் நலக் கூட்டணியில் இணைத்தபோது, தமிழ்நாடு சட்டமன்றத் தேர்தலின் 'கிங் மேக்காராக' பார்க்கப்பட்டவர் வைகோ. ஒரு மாதம் கழித்து, இந்தத் தேர்தலில் மக்கள் நல கூட்டணி சார்பில் கோவில்பட்டி தொகுதியில் போட்டியிடப் போவதாக அறிவித்திருந்த வைகோ, திடீரென கடைசி நேரத்தில், வேட்பு மனு தாக்கல் செய்ய சென்றபோது மனுதாக்கல் செய்யாமல், "நான் போட்டியில் இருந்து விலகுகிறேன் எனக்கு எதிராக ஜாதிய மோதலை ஏற்படுத்த தி.மு.க. சதி செய்கிறது" என்ற போது, 'மீம்ஸ் மேக்கர்'களின் செல்லப் பிள்ளை ஆகிவிட்டார். சமூக வலைதளங் களில் விஜயகாந்துக்கு அடுத்து இன்று அதிகம் கிண்டல் செய்யப்படும் தமிழக அரசியல் தலைவர் வைகோதான். வைகோவின் இந்த இமேஜ் சரிவுக்கு என்ன காரணம்?

"ஒரு தலைவன் அடிக்கடி உணர்ச்சிவசப் படக்கூடாது உணர்ச்சிவசப்பட்டால் வெற்றி பெற முடியாது. தமிழ்நாட்டு அரசியலில் வைகோ எதிர்த்து அரசியல் செய்யும் திமுக தலைவர் கருணாநிதியும் அதிமுக தலைவர் ஜெயலலிதாவும் மிக நெருக்கடியான நேரங்களில்கூட உணர்ச்சி வசப்படுவதில்லை அல்லது அதனை வெளிக்காட்டிக் கொள்வதில்லை. ஆனால், வைகோ சிறு விஷயங்களுக்கெல்லாம் உணர்ச்சிவசப்படு கிறார். இதுபோன்ற சூழ்நிலையில் எடுக்கும் முடிவுகள் தவறானதாகவே அமைய வாய்ப்பு அதிகம். வைகோ இப்படி உணர்ச்சி வசப்பட்டு தடாலடியாக முடிவு களை எடுப்பது இது முதல்முறையல்ல.




மதிமுக தொடங்கப்பட்ட பின்பான கடந்த 22 ஆண்டுகளில் அவர் எடுத்த பல முடிவுகள் இப்படிப்பட்டவைதான். இதனால், 'சரியான நேரத்தில் தவறான முடிவுகளை எடுப்பவர்' என்ற பெயரையே வைகோவுக்கு கொண்டுவந்து சேர்த்தன.

உணர்ச்சிவசப்பட்ட நிலையில் முடிவுகள் எடுக்கும்போது பக்கத்தில் இருப்பவர்களை வைகோ கலந்து ஆலோசிப்பதும் இல்லை. இப்போதும்கூட போட்டியில் இருந்து விலகும் வைகோவின் முடிவு தொலைக் காட்சி செய்தி பார்த்துதான் மக்கள் நலக் கூட்டணி தலைவர்களுக்கே தெரியும். "வைகோவின் முடிவு எனக்கு அதிர்ச்சி அளிக்கிறது. முடிவை அவர் மறு பரிசீலனை செய்ய வேண்டும்" என்று உடனே விடுதலை சிறுத்தைகள் கட்சித் தலைவர் திருமாவளவன் கேட்டுக் கொண்டார். இது மக்கள் நலக்கூட்டணி உடையப்போகிறது என்ற ஒரு பிம்பத்தை உருவாக்கிவிட்டது. இதுவரை தன் முடிவுகளால் மதிமுகவினருக்கு மட்டும் நெருக்கடிகளை உருவாக்கி வந்த வைகோ, இன்று மற்ற கட்சித் தலைவர்களுக்கும் நெருக்கடிகளை உருவாக்குகிறார்.

மக்கள் நலக் கூட்டணியின் ஒருங்கிணைப் பாளராக இருக்கிறார் வைகோ. எனவே, அவரை மக்கள் அனைவரும் மௌனமாக கவனித்துக் கொண்டிருக்கிறார்கள். மக்கள் மத்தியில் ஒரு நம்பிக்கையை உருவாக்கி னால் மட்டுமே, இந்த சட்டமன்றத் தேர்தலில் வைகோ விரும்பும் அரசியல் மாற்றத்தை ஏற்படுத்த முடியும். ஆனால், 'நந்தவனத்தில் ஓர் ஆண்டி – அவன், நாலாறு மாதமாய்க் குயவனை வேண்டி, கொண்டு வந்தான் ஒரு தோண்டி – மெத்தக், கூத்தாடிக் கூத்தாடிப் போட்டுடைத் தாண்டி' என்னும் கதையாய் இவரே கடைசி நேரத்தில் எல்லாவற்றையும் சிதைக்கிறார்.

இதே வைகோ, மதிமுகவை ஆரம்பிக்க அச்சாரமிட்ட குடவாசல் கூட்டத்தில், 1993ஆம் ஆண்டு, "அரசியலில் உணர்ச்சி வசப்படுவது நல்லது அல்ல... கண்ணீர் விடுவதும் கோழைத்தனம்..." என்று பேசினார். இன்று, சமூக ஊடகங்களில் அதே காரணங்களால் கிண்டல் செய்யப்படு கிறார். மதிமுகவின் இன்றைய நிலைக்கு வைகோவின் இப்படிப்பட்ட தடாலடி முடிவுகளே முக்கிய காரணம்" என்கிறார், பெயர் குறிப்பிட விரும்பாத முன்னாள் மதிமுக தொண்டர் ஒருவர்.

"அண்ணா வழியில் எனக்குப் பிறகு கட்சியை உன்னால்தான் வழிநடத்த முடியும்" என்று ஒரு காலத்தில், திமுக தலைவர் கருணாநிதியால் சொல்லப்பட்ட வர், அக்காலங்களில் வை. கோபால்சாமி என அறியப்பட்ட வைகோ. திமுகவிலிருந்து எம்.ஜி.ஆர். வெளியேற்றப்பட்ட போது நிகழ்ந்ததைவிட பெரிய உடைப்பு, திமுகவிலிருந்து வைகோ வெளியேற்றப் பட்ட போது நிகழ்ந்தது. திமுக தலைமை யின் முடிவை எதிர்த்து வெளியேறிய ஒன்பது மாவட்டச் செயலாளர்களுடன்

**- சிவதாணு -**

1994இல் மதிமுகவை ஆரம்பித்த வைகோ, 22 ஆண்டுகளில் பெரும்பாலானவர்கள் தாய்க் கழகத்துக்கு திரும்பிட, இன்று தனியாக கட்சியை நிலை நிறுத்தப் போராடு கிறார். 2011இல் தேர்தல் புறக்கணிப்பு, இப்போது தான் போட்டியிடவில்லை என இறங்குமுகமாகவே வைகோவின் வரைபு இருப்பதற்கு அனைவரும் சொல்லும் ஒரே பதில், "வைகோ அளவுக்கு அதிகமாக உணர்ச்சிவசப்படுகிறார்" என்பதுதான்.

"வை.கோபால்சாமி என்ற பெயர் திமுக தொண்டனின் உள்ளங்களில் உற்சாகத்தை எழுப்பும் காந்த சக்தியாக ஒரு காலத்தில் இருந்தது. 1980 – 1990கள் காலகட்ட திமுக சுவரொட்டிகளில் பெரியார், அண்ணா, கருணாநிதி படங்களுடன் வைகோ படமும் இடம்பெற்றிருக்கும். அன்று திமுகவின் ஆஸ்தான பேச்சாளராக வைகோ இருந்தார். 18 ஆண்டுகள் மாநிலங்களவை உறுப்பின ராக இருந்த வைகோ நாடாளுமன்றத்தில் பேசிய பேச்சுக்குள் டில்லி தலைவர்கள் மத்தியிலும் அவருக்கு பெரும் செல் வாக்கை ஏற்படுத்தியிருந்தது. "கோபால் சாமி, என்னோடு இருக்கும் 200 எம்.பி.களுக்கு சமமானவர்" இந்திரா காந்தியே சொல்லியுள்ளார்.

இந்நிலையில்தான் டில்லியில் முரசொலி மாறனுக்கும் எதிர்காலத்தில் ஸ்டாலினுக் கும் போட்டியாக வைகோ உருவெடுப்பார் என்று கருதிய கருணாநிதி, வைகோ மீது பல்வேறு பழிகள் சுமத்தி அவரை கட்சியில் இருந்து வெளியேற்றினார். 'எம்.ஜி.ஆரையே அனுப்பியிருக்கிறோம் இந்த கோபால்சாமி எம்மாத்திரம்' என்று கருணாநிதி நினைத்தி ருக்கலாம். ஆனால், அவர் தப்புக்கணக்கு போட்டு விட்டார். திமுக.விலிருந்து எம்.ஜி.ஆர். வெளியேற்றப்பட்ட போதுகூட உடையாத கழகம், வைகோ வெளியேற்றப் பட்டபோது இரண்டாக உடைந்தது.

தொடர்ச்சி 12ஆம் பக்கம்...



# ஒளியின் பிரகாசமா அல்லது படுகுழியா?

எனது நம்பிக்கை என்னைப் படுகுழிக்குள் தள்ளி விடும் அல்லது ஒளியின் பிரகாசத்தை நோக்கி உயர்த்தும்.

நான் தகுதியற்றவன்/தகுதியற்றவள் எனும் உணர்வு உனது இதயத்தில் ஒரு பாரிய துவாரம் போன்றது. நீ எதைச் செய்தாலும் எதனாலும் அத்துவாரத்தை அடைக்க முடியாதது போலவே உனக்குத் தோன்றும். செய்வதையெல்லாம் எவ்வளவோ கஷ்டப்பட்டு நீ செய்யச் செய்ய அத்துவாரம் அகன்று பெரிதாகி ஆழமாகி இன்னும் வேதனையைக் கொடுப்பதாகவே மாறும். இதைத் தீர்த்திட எத்தனை எத்தனையோ விடயங்களைச் செய்தாலும் நீ அடையாளங்காணாத இன்னும் எதையோ செய்ய வேண்டும் எனும் ஏக்கம் உன்னுள் எழத்தான் செய்யும்.

தாம் தகுதியற்றவர்கள் என நினைப்பவர் கள் எப்போதும் தம்மைக் குத்திக் குதறிக் கொண்டேயிருப்பார்கள். அவர்கள் எப்போதும் தாம் இன்னும் கூடிய நல்ல நிலையில் இருக்க வேண்டும். தாம் இன்னும் சிறப்பாகச்செயற்பட வேண்டும், இன்னும் கூடிய அறிவாளிகளாக இருக்க வேண்டும், இன்னும் கூட வளர்ச்சியடைய வேண்டும் என விரும்புவார்கள். எங்கோ இருக்கும் ஏதோ ஒன்று திடீரென தம்மை தகுதியானவராக்கி தம் பெறுமதியை உயர்த்தி விடும் என நம்புவார்கள். ஆனால் அதைத்தேடிக் கண்டுபிடிக்கும் முயற்சியில் கிண்டிக் கிளறி அந்தத் துவாரத்தை அகல பாதாளத்திற்குள் தள்ளி விடுவார்கள். தாங்கள் செய்ய ஆரம்பித்து முடிக்காதவை, ஆரம்பித்து திருப்தியடையாதவை என அவர்களது நீண்ட பட்டியல் அவர்களை முன்னேற விடாது. கடைசியில் இவ்வாறு தாங்கள் தகுதி இல்லாதவர்கள் என நினைப்பவர்கள் தமது தகுதியை நிலைநாட்டி தம்மால் முடிந்தவற்றை யெல்லாம் செய்து களைத்து பின்பு இன்னுமொருவரைப் பிடித்து வைத்துக் கொண்டு அவர் மேல் தம் கைவரிசையை மீண்டும் தமக்குச் செய்ததைப் போலவே காட்ட முற்படுவார் கள். இப்போது அந்தத் துவாரம் ஒரு பெரிய குகையாக மாறிவிடும்.



நான் தகுதி இல்லாதவர் என்னும் உணர்வை நம்பிக்கையினால் மட்டுமே சொஸ்தப்படுத்த முடியும். மற்றவர்கள் சொன்னதைவிட நீ சிறந்தவன் / சிறந்தவள் என நினைத்தால் சிறந்தவராகவே நீ விளையாடுவாய். அற்புதமானவர் என நீ நம்பினால் உனது இதயத்தின் பாரம் உன்மேல் நீ வைத்திருக்கும் நேசத்தாலும் பாசத்தாலும் நிரம்பி விடும். உனது பெறுமதியைப்பற்றி முழுநம்பிக்கை வைக்காதிருப்பது அத்துவாரத்தை ஒரு துணியால் மூடுவதைப் போன்றது தான்.

நீ கவலையீனமாகச் செயற்பட்டால் அத்துணி கிழிந்து அப்பாரிய குழிக்குள் விழுந்து விடுவாய். உன்னைத் தகுதியானவராக்குவதற்காக இன்றுவரை எதை எதையெல்லாமோ தேடித்தேடி நீ செய்து வந்திருக்கலாம். நீ தகுதியானவன்/தகுதியானவள் என்பதை இன்று முற்றுமுழுதாய் நம்பு! அமைதியாக அமர்ந்து உனது இதயத்திற்குள் பிரசன்னமாகும்படி தகுதியை அழைத்து அதை ஆரத்தழுவி அணைத்துக்கொள்.

**தகுதியற்றவர் எனும் குழிக்குள் இருந்து வெளியேறி எனது உண்மை நிலை எனும் ஒளிக்குள் பிரவேசிக்கும் முயற்சியில் இன்று நான் ஈடுபடுகின்றேன்.**

ஆளுமை வளர்ச்சிக்குப் பிரார்த்தனைகள் 241



மேலதிக தகவல்களுக்கு அழையுங்கள் 905-270-1214 416.907.6897

லலிதா புரூடி



# வைகோவின்...

## 10ஆம் பக்கத்தொடர்ச்சி

வைகோவுக்கு அநீதி இழைக்கப்பட்ட தாகவும் கட்சியில் ஜனநாயகம் இல்லை என்றும் உணர்ந்த 9 மாவட்டச் செயலாளர்கள், 400க்கும் மேற்பட்ட பொதுக்குழு உறுப்பினர்கள் வைகோவுடன் வெளியேறினார்கள். வைகோ வெளியேற்றத்துக்குப் பின்பான திமுக, அதிமுக கட்சிகளுடன் ஒப்பிடும் போது கொள்கைப்பிடிப்புள்ள, தலைவன் மேல் தனிப்பட்ட அபிமானம் கொண்ட தொண்டர்களைக் கொண்ட கட்சியாக இருந்தது மதிமுகதான்.

இன்று வைகோ மீது பல்வேறு விமர்சனங்கள் வைக்கப்பட்டாலும் தமிழக அரசியல் களத்தில் இருக்கும் மற்றத் தலைவர்களைவிட சிறந்த மனிதர்தான் வைகோ. இப்போது தேர்தலுக்காக எல்லா அரசியல் கட்சிகளும் மது விலக்கு பற்றி பேசுகின்றன. ஆனால், வைகோ பத்து ஆண்டுகளுக்கு முன்பிருந்தே மதுவை எதிர்த்து போராடி வருகிறார். மதுவுக்கு எதிராக கிட்டத்தட்ட 5000 கிலோமீட்டர் தூரத்துக்கு மேல் இரவு பகலாக நடந்திருக்கிறார். பல்வேறு போராட்டங்களுக்காக 30 முறை கைதாயிருக்கிறார். ஐந்து ஆண்டுகளுக்கு மேல் சிறையில் தன் வாழ்நாளை கழித்திருக்கிறார். காவிரி, முல்லைப் பெரியாறு, மீனவர்கள் பிரச்சினை, ஸ்டெர்லைட், மீத்தேன் உட்பட தமிழகத்தின் முக்கியமான பல்வேறு பிரச்சினைகளுக்காக தொடர்ச்சியாக போராடியவர் வைகோதான். இந்த பிரச்சினைகளுக்காக உயர்நீதிமன்றத்திலும் உச்சநீதிமன்றத்திலும் தானாகவே வாதாடி இருக்கின்றார். சீமைக்கருவேல மரங்கள் அழிப்பு போன்ற அரசியல் கட்சிகள் அதிகம் கவனம் செலுத்தாத பிரச்சினைகளிலும்கூட கவனம் செலுத்தி வழக்கு தொடுத்திருக்கிறார். ஈழப் பிரச்சினையில், ஆதாயத்துக்காக நேரத்துக்கு தகுந்தாற் போல் பேசும் தமிழக அரசியல் தலைவர்கள் மத்தியில் அன்றும் இன்றும் ஒரே நிலைப்பாட்டைக் கொண்டிருப்பவர் வைகோ மட்டும்தான். இதற்காக கிட்டத்தட்ட இரண்டு வருடங்கள் சிறையில் இருந்திருக்கிறார். இப்படியொரு அரசியல் வரலாறு இன்றைய அரசியல் தலைவர்களில் யாருக்கு இருக்கிறது?

இவ்வளவு இருந்தும் கருணாநிதி, ஜெயலலிதாவுக்கு மாற்று சக்தியாக வைகோ உருவாக முடியாமல் போனதற்குக் காரணம் அவரது உணர்ச்சிபூர்வமான நிலைதான். திமுகவில் இருந்து வைகோ வெளியேற்றப்பட ஒருவகையில் காரணமான முரசொலி மாறனுடன் வைகோவை ஒப்பிட்டுப் பார்ப்பது இதனை புரிந்துகொள்ள வழிவகுக்கும். எந்தச் சூழ்நிலையிலும் உணர்ச்சிவசப்பட மாட்டார் முரசொலிமாறன் மாறாக வைகோவோ சின்ன விஷயத்துக்கு எல்லாம் உணர்ச்சிவசப்படுவார். இதனாலேயே ஒருபக்கம் முரசொலிமாறன் முன்னோக்கி செல்ல, வைகோ தன் அரசியல் வாழ்வை தானே முடமாக்கினார்.

மதிமுக கட்சியைத் தொடங்கிய பிறகு ராயபுரத்தில் நடைபெற்ற முதல் நிகழ்ச்சி தொடங்கி, முதல் இரண்டு வருடங்கள் எந்த மேடையாக இருந்தாலும் வைகோ அதை கண்ணீரால் நனைத்துவிடுவார். கட்சித் தலைவர் ஒரு நாள் அழலாம் ஏதாவது முக்கியமான கட்டத்தில் கண் ஓரம் ஈரம் கசியலாம். ஆனால், அன்று தொடங்கி இன்று வரை வைகோ அழுதுகொண்டே இருக்கிறார். வைகோ பேச்சில் ஏதாவது விசேஷம் இருக்கும் அவர் கோபத்தில் ஓர் அர்த்தம் இருக்கும் என்ற நம்பி பின்னால் வந்த இளைஞர்கள், இவர் கண்ணீரைத் தவிர இந்த 22 ஆண்டுகளில் வேறு எந்த மாற்றத்தையும் காணவில்லை.

உணர்ச்சிவசப்பட்ட நிலையில் முடிவுகள் எடுப்பதன் காரணமாக, கருணாநிதியின் அரசியல் சாமர்த்தியத்தில் நூறில் ஒரு பங்குகூட வைகோவிடம் கைகூடாமல் போய்விட்டது. வைகோவின் இன்றைய நிலை மதிமுக ஆரம்பிக்கப்பட்ட புதிதில் மிகுந்த நம்பிக்கையுடன் அவர் பின்னால் சென்ற என் போன்ற அன்றைய இளைஞர்களுக்கு மிகுந்த மனவேதனையளிக்கும் ஒரு விஷயம்" என்கிறார், இன்று 40களின் மத்தியில் இருக்கும் இன்னொரு முன்னாள் மதிமுககாரர்.

1994ஆம் ஆண்டு, மறுமலர்ச்சி திராவிட முன்னேற்ற கழகத்தை வைகோ தொடங்கிய போது, தி.மு.க.வில் இருந்து மட்டுமில்லை, பல கட்சிகளில் இருந்தும் இளைஞர்கள் கூட்டம் கூட்டமாக வைகோவை நோக்கி ஓடினார்கள். "பொது வாழ்வில் தூய்மை... அரசியலில் நேர்மை... லட்சியத்தில் உறுதி" என்ற மதிமுகவின் முதல் கோஷம் வைகோ மீது, தமிழக மக்கள் மத்தியிலும் மிகுந்த எதிர்பார்ப்பை ஏற்படுத்தியிருந்தது. இதனால், "எதிர்காலத்தில் தமிழ்நாட்டின் அசைக்க முடியாத இடத்தில் வைகோ மட்டுமே இருப்பார். எதிர்கால முதல்வர் இவர்தான். கலைஞருக்கு பிறகு தி.மு.க.வே இவரிடம் வந்துவிடும்..." என்றெல்லாம் எத்தனையோ பேச்சுக்கள். அத்தனையும் இன்றளவிலும் பேச்சாகவே இருக்கிறது.

மதிமுக தொடங்கப்பட்ட பிறகு வந்த 1996 சட்டப் பேரவைத் தேர்தலில் திமுக, அதிமுகவுக்கு மாற்றான அணியை உருவாக்கும் முதல் முயற்சியில் இறங்கினார், வைகோ. மக்கள் நலக் கூட்டணி, தேமுதிக, வாசன் என இன்றுபோல் ஒரு பலமான கூட்டணியாக இல்லாவிட்டாலும் இந்திய கம்யூனிஸ்ட் (மார்க்சிஸ்ட்), ஜனதா தளம் ஆகிய கட்சிகளுடன் கூட்டணி அமைத்துப் போட்டியிட்டது ம.தி.மு.க. அந்தத் தேர்தல் வைகோவுக்கு நல்லதொரு தொடக்கமாக இருந்திருக்க வேண்டியது 1991 – 1996 ஜெயலலிதா ஆட்சிக்கு எதிரான எதிர்ப்பலை, திமுக - தமாக கூட்டணி, சூப்பர் ஸ்டார் ரஜினி வாய்ஸ் சேர்க்கையால் கெட்டது. 1996 தேர்தலில் ஜெயலலிதா எதிர்ப்பு அலை அதிமுக வேட்பாளர்களை மட்டுமல்ல மதிமுக வேட்பாளர்களையும் தூக்கி வீசியது.

"வரலாற்றில் சோகம் என்பது ஒருவருக்கு ஒருமுறைதான் வரமுடியும் என்பார்கள். ஆனால், வைகோவுக்கு மட்டும் அது அன்றைய முதல்வர் ஜெயலலிதா. 19 மாதங்கள் சிறையில் இருந்தார். தொடர்ந்து வந்த நாடாளுமன்றத் தேர்தலில் திமுக கூட்டணியில் இடம்பெற்ற மதிமுக 4 தொகுதிகளில் வெற்றிபெற்றது. மத்தியில் காங்கிரஸ் கட்சிக்கு பெரும்பான்மை கிடைக்காத நிலையில் கூட்டணி கட்சிகள் கேட்ட துறைகளில் எல்லாம் மந்திரி பதவிகள் கிடைத்தன. நான்கு எம்.பி.க்கள் பெற்றிருந்த ம.தி.மு.க.வுக்கும் பல அழைப்புகள் வந்தன. ஆனால் வைகோ, "மத்திய அமைச்சரவையில் பதவியேற்கப் போவதில்லை வெளியிலிருந்து ஆதரவளிப் போம்" என்று அறிவித்து, அனைவரையும் ஆச்சர்யப்படுத்தினார். வைகோ மத்திய அமைச்சரவையில் பங்கேற்று கட்சியைப் பலப்படுத்தியிருக்கலாம். அந்த வாய்ப்பை தவறவிட்டுவிட்டார்.



தொடர்கதையாகி விட்டது. 1996 தேர்தல் முடிவு தந்த பின்னடைவிலிருந்து மீள்வதற்குப் பதிலாக அதன்பிறகு அவர் எடுத்த முடிவுகள் எல்லாம் தொடர் பின்னடைவுகளையே ஏற்படுத்திவிட்டன. அடுத்த இரண்டாண்டுகளில் வந்த மக்களவைத் தேர்தலில், எதிரிக்கு எதிரி நண்பன் என்ற முறையில், ஜெயலலிதாவுடன் கூட்டணி வைத்தார் வைகோ. அப்போதே அவரது நம்பகத்தன்மை முதன்முறையாக குலையைத் தொடங்கியது. வாஜ்பாய் ஆட்சியை ஜெயலலிதா கவிழ்க்க, 13 மாதங்களில் மீண்டும் வந்த தேர்தலில், வைகோ எந்த நெருடலும் இல்லாமல், பாஜகவுடன் சேர்ந்து திமுகவுடன் கூட்டணி வைத்துக்கொண்டார். "மகனுக்காக என் மீது கொலைப்பழி சுமத்தி கட்சியில் இருந்து வெளியேற்றி விட்டார்" என்று யார் மீது குற்றச்சாட்டு வைத்து மதிமுகவைத் தொடங்கினாரோ அவருடன் தோன்றி, "தி.மு.க.வும் ம.தி.மு.க.வும் இரட்டைக் குழல் துப்பாக்கி" என்று மேடைக்கு மேடை முழங்கினார். இரண்டாவது முறை மீண்டும் அவரது நம்பகத்தன்மை குறைந்தது. தி.மு.க. விலிருந்து வைகோவை வெளியேற்றிய போது ஐந்து பேர் தீக்குளித்து இறந்தார்கள். அந்த தீக்குளிப்புக்கெல்லாம் என்ன அர்த்தம் என்ற கேள்வி வைகோ பின்னால் நின்றவர்கள் மனதில் எழுந்தது.

அடுத்து வந்த 2001 சட்டசபைத் தேர்தலில் தி.மு.க. கூட்டணியில் இருந்து வெளியேறி தனித்துப் போட்டியிட்டது மதிமுக. ஒரு இடத்தில்கூட வெற்றிப் பெற முடியவில்லை. இந்நிலையில் விடுதலைப்புலிகளை ஆதரித்துப் பேசிய காரணத்துக்காக, வைகோவை பொடா சட்டத்தில் கைது செய்து வேலூர் சிறையில் அடைத்தார், தொடர்ந்து தி.மு.க. கூட்டணியில் இருந்துக் கொண்டே இருந்தார். மேடைதோறும் கலைஞரை புகழ்ந்தார். 2006ஆம் ஆண்டு சட்டசபை தேர்தல் வந்தது. அப்போது நடைபெற்ற திமுக மாநாட்டில்கூட வைகோ பேசுவதாக இருந்தது. வைகோவுக்கு கட்அவுட்கள் எல்லாம் வைக்கப்பட்டிருந்தன. வைகோ வருவார், பேசுவார் என மாநாட்டில் அனைவரும் காத்திருக்க, இரண்டு தொகுதிகள் இழுபறியில் திமுக கூட்டணியில் இருந்து வெளியெறுவதாக அறிவித்த வைகோ, நேராக போயஸ்கார்டன் சென்று அதிமுகவுடன் கூட்டணி அமைத்தார். அந்தத் தேர்தலில் 35 தொகுதிகளில் போட்டியிட்ட ம.தி.மு.க. ஆறு தொகுதிகளில்தான் வெற்றிபெற்றது.

2006ஆம் ஆண்டு முதல் 2011ஆம் ஆண்டு மார்ச் மாதம் வரை அ.தி.மு.க. கூட்டணியில் அமைதியாகவே இருந்தும், தேர்தல் நெருக்கத்தில் கூட்டணியில் இருந்து வைகோவை கழட்டிவிட்டார் ஜெயலலிதா. வைகோவோ இன்னும் ஒருபடி மேலே சென்று தேர்தலையே புறக்கணித்தார். அதுபோன்ற ஒரு தவறையே தற்போது போட்டியில் இருந்து விலகியதன் மூலம் மீண்டும் செய்துள்ளார் வைகோ" என்கிறார் அந்த மூத்தப் பத்திரிகையாளர். தன் அதீத உணர்ச்சிவசத்தாலும் தடுமாற்றத்தாலும் தவறான முடிவுகளாலும் தடம் மாறிய வைகோவை நினைத்தால், அவர் அடிக்கடி சிந்தும் அதே கண்ணீர்தான் நமக்கும் வருகிறது.




சந்திரமௌலீஸ்வர சிவாலயம்

தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்

ஆலயம் திறந்திருக்கும் நேரம்

வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில் காலை 7am - மாலை 9pm வரை

திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm மாலை 5pm - 9pm

விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம்.
ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்

Tel: 416 . 754 . 7338 / 416 .724 .7480

3011 Markham Road, Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarborough

கனேடிய செய்திகளுக்கான
முதன்மைத் தளம்
தமிழ்வணக்கம்.கொம்
www.tamilvanakkam.com


HAMILTON
* Close to MCMASTER University.
* Close to all Facilities
Guaranteed Rental Income
Call for VIP Pricing
Prices Starting From: $250,000
A. Anton Jeeva, FRI
(Broker)
Remax Dynasty Realty Inc., Brokerage*
Dir: 415.575.5055
Office: (905)471-0002 Fax: (905)471-7441
Email: anton.jeeva@gmail.com
Web: www.antonjeeva.com
8 Shadlock St, Unit 7, Markham, ON L3S 3K9
RE/MAX
RE/MAX
Dynasty Realty Inc.


MARKHAM & KINGSTON
CONDO TOWN HOMES
Price Starting From: $299,000
Low Maintenance Fee.
A. Anton Jeeva, FRI
(Broker)
Remax Dynasty Realty Inc., Brokerage*
Dir: 415.575.5055
Office: (905)471-0002 Fax: (905)471-7441
Email: anton.jeeva@gmail.com
Web: www.antonjeeva.com
8 Shadlock St, Unit 7, Markham, ON L3S 3K9
RE/MAX
RE/MAX
Dynasty Realty Inc.

# அத்தனைக்கும் ஆசைப்படு!



## சத்குரு வாசுதேவ்

எந்தவொரு இழப்பையும் வளர்ச்சிக்கான வாய்ப்பாகக் பார்க்க முடியும்!

அண்மையில் சமுத்திரத்தின் மடியில், உறக்கத்தில் கொஞ்சம் புரண்டு படுத்து பூமி, அவ்வளவுதான்...கடலோரங்களில் சில நிலப்பகுதிகள் காணாமல் போயின. பல உயிர்கள் ராட்சத அலைகளால் விழுங்கப்பட்டுவிட்டன. கடலை ஒட்டி வீடுகளை அமைத்தால் பாதுகாப்பு இல்லை என்பதை அலட்சியம் செய்ததற்கு, மீண்டும் சில உயிர்கள் அபராதமாக வசூலிக்கப்பட்டு விட்டன. இலட்சக்கணக்கில் மீன்களை வாரித் தந்தபோது நண்பனாகக் கவனிக்கப்படாத கடல், ஒருமுறை சீறியதால் உடனே எதிரியாகப் பார்க்கப்பட்டுவிட்டது.


Contact: 1 866 424 ISHA (4742)
Email: toronto@ishafoundation.org
Website: www.ishafoundation.org /
**Inner Engineering Program is now online with Sadhguru**: www.innerengineering.org


புத்தாண்டு பிறக்கும் நேரத்தில், இந்தத் துன்பம் மக்களைத் தாக்கி விட்டது. அடுத்தடுத்து பண்டிகைகள் வரும்போது, கொண்டாடலாமா, நாமும் துக்கம் அனுஷ்டிக்க வேண்டுமா என்பது எல்லோர் மனதிலும் உள்ள கேள்வி.

துன்பங்களை அனுபவிப்பவர்கள் மத்தியில் போய் அமர்ந்து, நாமும் துன்பத்தில் சிக்கிப் போக வேண்டும் என்ற அவசியம் இல்லை. எல்லோரும் உட்கார்ந்து அழுது கொண்டிருப்பதற்கான நேரமல்ல இது!

நோய்வாய்ப்பட்டவர்களைக் கவனித்துச் சிகிச்சை தரவேண்டுமானால், அது யாரால் முடியும்? ஆரோக்கியமானவர்களால் தானே! இழந்து தவிப்பவர்களை அந்தத் துக்கத்திலிருந்து மீட்க வேண்டுமானால் யாரால் முடியும்? ஆனந்தமாயிருப்பவர்களால்தானே!

‘என்னது...! அடுத்தவன் வருத்தமாக இருக்கும்போது நான் ஆனந்தமாக இருப்பதா? இது வக்கிரமான குரூரமான சிந்தனை அல்லவா?’ என்ற கேள்வி பீறிட்டு எழும்.

ஏதோவொன்று கிடைத்தால்தான் ஆனந்தம் என்ற நோக்கத்தோடு வாழ்ந்து வருபவர்களுக்கு ஆயிரம் கிடைத்தாலும், கிடைக்காத ஆயிரத்து ஒன்றாவது விடயத்தில் துக்கம் வந்து சேரும். அந்த மாதிரியான ஆனந்தத்தை நான் சொல்லவில்லை.

ஆனந்தமாயிருப்பது என்றால் பட்டாசு வெடித்து, கொண்டாட்டமும் கும்மாளமுமாக இருப்பது என்று யார் சொன்னது?

அன்பாயிருப்பது ஆனந்தம், அழுபவனுக்கு ஆறுதல் சொல்வது. பரிதவிப்பர்களைப் பரிவோடு அணைத்துக் கொள்வது ஆனந்தம். இயலாதிருப்பனுக்கு இதயபூர்வமாகச் சேவை செய்வது ஆனந்தம். சூழ்நிலைக்குத் தகுந்தவாறு எந்தப் பாதிப்புமில்லாமல் தன்னைப் பதப்படுத்திக்கொள்வதுதான் உண்மையான ஆனந்தம்! ஆனந்தம் என்பது பெறுவதில் மட்டுமில்லை. வழங்குவதிலும் இருக்கிறது.

பசியோடு இருக்கும் ஒருவனுக்கு உணவு கிடைத்தால் தான் பலம் என்று விஞ்ஞானம் சொல்லும். ஆனால், ‘பசியோடு இருக்கும் ஒருவன் தனது உணவை அடுத்தவனுக்குக் கொடுத்தால், அதுவே அவனை மேலும் சக்தியுள்ளவன் ஆக்குகிறது’ என்கிறார் புத்தர்.

ஆற்றில் துணிகளைத் துவைத்துக் கொண்டு இருந்த சலவைக்காரன் பார்வையில், பளபளப்பான கல்ஒன்று தென்பட்டது. அதை எடுத்துத் தன் கழுதையின் அலங்காரமாகக் கட்டித் தொங்கவிட்டான் அவன். துணிகளை விநியோகம் செய்ய அவன் ஊருக்குள் போனபோது, அந்தக் கல்லை ஒரு நகை வியாபாரி கவனித்தான்.

‘அந்தக் கல்லை எனக்குக் கொடேன். ஒரு ரூபாய் தருகிறேன்’ என்றான். ‘ஐந்து ரூபாய் தந்தால் தருகிறேன். இல்லையென்றால், அது என் கழுதையின் கழுத்திலேயே தொங்கவிட்டுப் போகட்டும்’ என்றான் சலவைக்காரன். வியாபாரி இரண்டு ரூபாய், மூன்று ரூபாய் என பேரம் பேசிக்கொண்டே இருந்தான்.

அடுத்த கடையில் இருந்தவன் இதைக் கவனித்துவிட்டு, ‘ஒரே விலை! ஆயிரம் ரூபாய் தருகிறேன். அதை எனக்குத் தா!’ என்று பணத்தைக் கொடுத்து, அவசர அவசரமாக அந்தக் கல்லை வாங்கிக் கொண்டான்.

முதல் வியாபாரி வெறுத்துப்போய் சலவைக்காரனிடம் ‘அட முட்டாளே! அது வைரக்கல்லுடா! இலட்ச ரூபாய்க்கு மேல் போகும். அதைப்போய் ஆயிரம் ரூபாய்க்கு விற்று ஏமாந்துவிட்டாயோ! என்றான்.

‘இருக்கலாம். ஆனால் என்னைப் பொறுத்தவரை அது சாதாரக் கல். அதை ஆயிரத்துக்கு விற்றதில் எனக்கு இலாபம் தான்! அதன் மதிப்பு தெரிந்து இருந்தும் ஐந்து ரூபாய் கொடுக்க மனமில்லாமல் பேரம் பேசி, நீதான் முட்டாள்தனமாக அதை இழந்து விட்டாய்!’ என்று சிரித்தான் சலவைக் காரன்.

மதிப்பிட முடியாத மனிதத்தன்மை உங்களுக்குள் இருப்பதை உணர்ந்திருந்தும் அதை வெளிக்கொணராமல் இருக்க இரண்டுக்கும், மூன்றுக்கும் பேரம் பேசும் முட்டாள் வியாபாரியா நீங்கள்?

எந்த இழப்பையும் நம் வளர்ச்சிக்குப் பயன்படுத்துவது தான் புத்திசாலித்தனம். இயந்திர வாழ்க்கையில் சிக்கி, மரத்துப் போய்விட்ட மனிதத்தன்மை மீண்டும் துளிர்த்து எழக் கிடைத்த சந்தர்ப்பமாக இதை நினையுங்கள்.

இறந்து போன இலட்சத்துக்கு மேற்பட்டவர்களின் முகங்கள் உங்களுக்குத் தெரியாது. ஆனாலும் அவர்களை உங்களுக்கு மிக நெருக்கமானவராகச் சில நிமிடிங்களாவது மனதார நினையுங்கள். மரத்துப் போயிருக்கிற உங்கள் பரிவு உசுப்பி எழுப்பப்படுவதை உணர்வீர்கள். அவர்களை இழந்து பரிதவிப்பர்களை இப்போது நீங்கள் பார்க்கும் பார்வையில் தானாகக் கருணை வரும். மிகக்குறுகிய காலத்துக்குள் இந்தத் துக்கம்களையப்பட்டு, அவர்களுக்கு ஆனந்தம் திரும்பும்.


**_4 day Inner Engineering Program_**

*led by an Isha teacher trained by Sadhguru*
*Coming to Toronto in 2 locations – June 9 - 12, 2016*

***TIMINGS:*** Thursday June 9 : 6:30pm – 9:45pm
Friday June 10 : 6:30pm – 9:45pm
Saturday June 11: 8:30am – 7:00pm

***VENUE -*** ***MISSISSAUGA***
Moonlight Convention Centre,
6835 Professional Ct, Mississauga, ON L4V 1X6,

***TORONTO***
Noor Cultural Centre,
123 Wynford Dr, Toronto, ON M3C 1K1

***Email: toronto@ishafoundation.org /Phone: 416 300 3010***
***Online registrations: www.innerengineering.com/live/toronto***






**CEDARGREEN COIN LAUNDRY & DRY CLEAN DEPOT**
**" VERY CLEAN LAUNDRY" Avoid The Rush ..... Come during weekdays!**

• Large laundry Folding Tables, Lots of Space • We offer wash, Dry & fold at .99Cents /lb
**Commercial**
. We Clean Commercial Linens, Aprons, & Towels • We Clean Uniforms Dry Clean or Wash & Dry
. We Clean Towels/Sheets from Daycare, Clinics, Hair Saloon, Nail Spa, Restaurants etc
STORE - TEL : 416.289.7514 / OWNER SAM - CELL: 416.732.9383





**OPEN DAILY 8 am – 11 pm**
**Sat. & Sun 7 Am – 11 pm**

(Near Bellamy & Lawrence – find us in GOOGLE !!) 3340 Lawrence Ave. East, Unit 5, Scarborough, ON M1H 1A7

# சினிமா எளிய மக்களின் அரசியலைப் பேச வேண்டும்

## நேர்காணல் - பாடலாசிரியர் யுகபாரதி ஆதங்கம்



"என்னங்க சார் உங்க சட்டம்" பாடல் பரவலான கவனத்தைப் பெற்றிருக்கிறது. தமிழ்நாட்டில் தேர்தல் நடக்கும் நேரத்தில் வெளியாகியிருப்பது ஒரு காரணம் இன்னொரு காரணம், இந்தப் பாடல் எளிய மக்களின் குரலாக இருப்பது. எளிய மக்களின் ஆதங்கங்களை, எளிய மக்களின் கேள்விகளை, எளிய மக்களின் தேவை களை, எளிய மக்களின் அரசியலை சொல்லியே ஆகவேண்டிய கட்டாயத்தில் நாம் இருக்கிறோம். ஒரு சராசரி பொதுசனத் தின் கோப வெளிப்பாடே இப்பாடல்."

**- சிவதாணு -**

உற்சாகமாகவும் அதேநேரம் கோபமாகவும் பேசுகிறார் பாடலாசிரியர் யுகபாரதி. ராஜு முருகனின் 'ஜோக்கர்' படத்தில் இடம் பெற்றுள்ள, 'என்னங்க சார் உங்க சட்டம்' பாடலுக்கு எதிர்பாராத பக்கங்களில் இருந்தெல்லாம் வாழ்த்துகள் குவிந்து கொண்டிருப்பதால் ஏற்பட்ட சந்தோஷ பூரிப்பு ஒருபக்கம், தமிழ்நாடு தேர்தல் களத்தில் நிகழுபவை மீது கொண்ட கோபம் இன்னொரு பக்கம். சென்னை வளசரவாக்கத்தில் இருக்கும் யுகபாரதி இல்லத்தில் விளம்பரம் இதழுக்காக சந்தித்தோம்.

கட்சி அரசியலைச் சாராத பலரிடமிருந்து இப்பாடலுக்கு நல்லவிதமான விமர்சனங்கள் வந்துள்ளன. ஆண்ட, ஆளும் கட்சி அபி-மானிகள்கூட இப்பாடலை தங்கள் சமூக வலைதள பக்கங்களில் பதிவிட்டிருக்கிறார் கள். இந்தப் பாடல் இப்படியொரு கவனத்தைப் பெறும் என்று எதிர்பார்த்தீர்களா?

நிச்சயம் பெரிய வரவேற்பு இருக்கும் என்று எதிர்பார்த்தோம். ஆனால், இப்படியொரு கொண்டாட்ட வரவேற்பை எதிர்ப்பாக்க வில்லை. நெடிய அரசியல் வரலாறுடைய தமிழ் சமூகம், கடந்த முப்பது நாற்பது ஆண்டுகளாக எந்த கேள்வியும் இல்லாமல் சோர்ந்துவிட்ட சூழலில், இப்படி ஒரு பாடல் வந்திருப்பதை துணிச்சலான முயற்சி என்று பலரும் கொண்டாடுகிறார்கள். மக்கள் சிந்தனைகளுக்கு மரணமில்லை, மக்களைச் சிந்திப்பவனுக்கும் மரணமில்லை என்பதையே இது காட்டுகிறது. திரைத்துறையை வியாபாரமாக மட்டும் பார்க்காமல் மக்களைத் தட்டி எழுப்பும் மகோன்னத கலையாகவும் பார்க்கும் தம்பி ராஜு முருகன், படத்தின் தயாரிப்பாளர்கள் எஸ்.ஆர்.பிரவு, எஸ்.ஆர். பிரகாஷ் மூவருக்கும்தான் இந்தப் பாடல் சாத்தியமானதற்காக நன்றி தெரிவிக்க வேண்டும்.

இந்த பாடல் உருவான சூழலை விளக்க முடியுமா?

'ஜோக்கர்' படத்தின் மொத்தத் திரைக் கதையையும் நானறிவேன். கதையின் ஆரம்பப் புள்ளியில் இருந்து ராஜுமுருகன் என்னோடு விவாதித்திருந்ததால் அதன் சாரம் முழுவதும் எனக்குள் சாறாக இறங்கி இருந்தது. ஒரு திரைப்பட பாடல் என்பதற்கும் மேலே இப்பாடல் மக்களின் பிரதிபலிப்பாக இருக்கவேண்டும் என்று இருவரும் யோசித்தோம். தமிழக நடப்பு சூழலையும் மக்களை ஏமாற்றிக்கொண்டிருக்கும் கார்ப்பரேட் மற்றும் ஊழல் அரசியலையும் காத்திரமாகச் சொல்ல வேண்டும் என்பதே எங்கள் எண்ணமாக இருந்தது. என்னுள்ளே யோசனை ஓடிக்கொண்டேயிருந்த நிலையில், ஒரு நள்ளிரவில் திடீரென பாடலை எழுதி ராஜுமுருகனுக்கு தொலைபேசியில் வாசித்துக் காட்டினேன். "போதும் அண்ணா... இதுதான் நான் எதிர்பார்த்ததும்" என தம்பி பாராட்டினான். எழுதிய வரிகளை எங்கேயும் குறைக்காமல் நறுக்காமல் அப்படியே இசையமைத்தார் ஷான் ரோல்டன். இடதுசாரி அரசியல் மேடைகளில் பாடிவரும் அறந்தை பாவாவும் பெருமாளும் மிக அற்புதமாக பாடியளித்தார்கள். இத்தனை ஆண்டுகால என் திரைப்பாடல் முயற்சியில் நினைத்த இடத்திற்கு வந்திருக்கிறேன் என்று இப்போது திருப்தியாக இருக்கிறது.

பொதுவாக ஒரு பாடலை எழுத எத்தனை நாள் எடுத்துக்கொள்வீர்கள்?

நாள் கணக்கில் நான் எந்தப் பாடலையும் எழுதியதில்லை. அதிகபட்சம் அரைமணி நேரத்தில் இருந்து ஒரு மணி நேரத்திற்குள் என் பாடல் பணி முடிந்துவிடும். அதற்கான சூழலும் ஆர்வமும் அமைவதற்குத்தான் நேரம் பிடிக்கும். முழுமையாக காட்சியை மனதில் இருத்திக்கொண்டு எழுத அமர்ந்தால் இசையோ சிந்தனையோ எனக்கு இடையூறாக இருக்காது. இயக்குநரோ இசையமைப்பாளரோ விரும்பினால் சில திருத்தங்களை செய்துதருவேன். அதுவும் சில நொடிகளில்

தொடர்ச்சி 17ஆம் பக்கம்




**Engineering Drawing Package for Custom Build Home to Obtain Site Plan Approval and Building Permits - $11,995+HST**

Our Engineering Drawing Package for Custom Build Home includes the all the Applicable Drawings, Plans and Reports of the following: Legal Land Survey, Topographical Survey, Arborist Report, Tree Protection Plan, Geotechnical Report, Soil Test for Soil Bearing Capacity, Soil Percolation Test for Stormwater Management, Site Plan, Site Grading & Erosion Control Plan, Stormwater Management Report, Functional Servicing Report, Site Servicing Plan, Architectural Drawings, Floor Plans, Elevations, Cross Sections, Structural Drawings, Plumbing Drawings, Heat Loss / Heat Gain Calculations, HVAC Drawings, Duct Design, Ventilation Design / Calculations, and Landscape Architect Plan.

**We also offer Total Project Management for Custom Build Home, including Site Plan Approval, Building Permits, Arranging Construction Loan, and Construction Management for $22,975+HST**



**சகலவிதமான கட்டிட நிர்மாண வரைபடத் தேவைகளுக்கு நம்பிக்கையுடன் நாடுங்கள்**

**M.பாஸ்கரசிங்கம், P.Eng.**

**Periyathamby Kuruparan** M Sc (Eng) **Meghal Raval** M Sc (Eng)

(416) **332 1743** www.**buildingexpertscanada**.com

# ஒரு வருடமாக...

### 08ஆம் பக்கத்தொடர்ச்சி

அவருடன் தொடர்புகள் கொண்டிருந் துள்ளனரா? அவ்வாறான தொடர்புகள் இருந்திருப்பின் சாதாரண வழக்குப் போன்று பொலிஸார் குறித்த அலைபேசி நிறுவனங்களுடன் தொடர்புகொண்டு அந்தத் தகவல்களைப் பெற்றிருந்தனரா? கேள்விகளுக்குக் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தினர் தனித்தனியே பதிலளித்து அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும். இவ்வாறு, குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்கு நீதவான் உத்தரவிட்டார்.

இவை வழக்கில் சில திருப்பங்களை ஏற்படுத்தலாம். குற்றவாளி என்று சந்தேகிக்கப்படும் ஒருவருக்கு உதவி யவர்கள் பிடிபடக்கூடிய நிலைமையும் ஏற்படும். இவை யாவும் வித்தியா கொலை



இந்த விடயங்கள் தொடர்பில் அதன் பின்னர் பொலிஸாரால் அல்லது குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தால் புலன் விசாரணை மேற்கொள்ளப்பட்டதா? விசாரணை செய்யப்பட்டிருப்பின் பொலிஸ் அல்லது குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கை என்ன? அவ்வாறு ஏதாவது இருப்பின் அவற்றை அடுத்த வழக்கு விசாரணையில் நீதிமன்றில் சமர்ப்பிக்க வேண்டும். இந்தக் வழக்கில் திருப்பங்களாக அமைந்தாலும் கூட, உண்மையில் குற்றவாளிகள் இனங்காணப்பட வேண்டும். அவர்களுக்கு நீதியின்படி கடுமையான தண்டனை வழங்கப்பட வேண்டும். வழக்கு தாமதமாகும் நிலையில், சட்டத்தின் ஓட்டைகளை பயன்படுத்தி குற்றவாளிகள் தப்பிச் செல்ல வழி ஏற்படக்கூடாது என்கிற எதிர்பார்ப்புதான் அனைவரிடமும் உள்ளது.

# அல்பேட்டா...

### 03ஆம் பக்கத்தொடர்ச்சி

என்றார். காட்டுத்தீயினால் எரியுண்ட இடங்களைப் பார்வையிட கனேடியப் வயதுவந்த ஒவ்வொருக்கும் $1,250 உம் சிறுவர் ஒருவருக்கு $500 உம் உடனடியாக வழங்குகிறது. அதேபோல் செஞ்சிலுவைச் சங்கமும் காட்டுத்தீயினால் பாதிக்கப்பட்ட குடும்பங்களின் வயதுவந்த ஒவ்வொருக் கும் $600உம் சிறுவர் ஒருவருக்கு $300 உம் வழங்குகிறது. செஞ்சிலுவைச்சங்கம்



Prime Minister Justin Trudeau, Darby Allen and Rachel Notley

பிரதமர் ஜஸ்ரின் ரூடோ 2016 மே 13இல் ஃபோர்ட் மக்மறிக்கு பயணம் செய்தார். அல்பேட்டா மாகாண அரசு காட்டுத் தீயினால் பாதிக்கப்பட்ட குடும்பங் களின் தமக்கு கிடைத்த உதவித்தொகையான $67 மில்லியனிலில் இருந்து இதற்கு $50 மில்லியனை பாவிக்கிறது.

## றொறன்ரோ தமிழ்ச்சங்கம் மாதாந்த இலக்கிய கலந்துரையாடல்

## "மருத்துவக்கலை பற்றிய பன்முகப்பார்வை"

பிரதம பேச்சாளர்உரை: " தமிழர் மருத்துவம்" - கலாநிதி பால.சிவகடாட்சம்

சிறப்புபேச்சாளர்கள் உரை:

" சித்த ஆயுள்வேதம்" - வைத்திய கலாநிதி ரத்னலீல விஜயநாதன்
"ஹோமியோபதியும் அக்யூபஞ்சரும்" - வைத்திய கலாநிதி போல் ஜோசெப்
"நவீன மருத்துவ ஒப்பீடு" - வைத்திய கலாநிதி இ.லம்போதரன்

ஐயந்தெளிதல் அரங்கு நாள்: 28-05-2016 நேரம்:

மாலை 3:00 முதல் 7:00 வரை

இடம்: றொறன்ரோ தமிழ்ச்சங்கம் - 3A, 5637 Finch Avenue East, Scarborough, M1B 5k9

தொடர்புகளுக்கு: அகில்- 416-822-6316

அனைவரையும்அன்புடன்அழைக்கிறோம்

# அமெரிக்க ஜனாதிபதி...

### 07ஆம் பக்கத்தொடர்ச்சி

எதிராக தேர்தல் பிரசாரம் செய்ய பல நல்ல தகவல்கள் இருப்பதாகவும் NBC செய்தி நிறுவனத்திற்கு கூறியுள்ளார்.

Reuters மற்றும் Ipsos நிறுவனங்கள் சேர்ந்து நடத்திய நாடுதழுவிய கருத்துக் கணிப்புகளின் படி இப்பொழுது ஜனாதிபதியை தெரிவுசெய்யும் பொதுத் தேர்தல் நடைபெற்றால் வாக்காளர்களில் 41% Hillary Clinton ஐயும், 40% Donald Trump ஐயும் ஆதரிப்பார்கள் என கூறியுள்ளனர். 19% தாங்கள் இன்னமும் யாரை ஆதரிப்பதென முடிவுசெய்ய வில்லையெனக் கூறியுள்ளனர். ஜனாதிபதியை தெரிவுசெய்யும் பொதுத் தேர்தலுக்கு இன்னும் ஆறு மாதங்கள் இருப்பதால் யார் ஜனாதிபதியாக தெரிவு செய்யப்படுவாரென தற்போது கூறுவது இலகுவான காரியமல்ல என ஊடகங்கள் தெரிவிக்கின்றன.






# சினிமா எளிய...

15ஆம் பக்கத்தொடர்ச்சி

முடிந்துவிடும். குறிப்பாக இசையமைப்பாளர் இமானோடு இணைந்து பணியாற்றிய அத்தனை பாடல்களும் ஒலிப்பதிவுக் கூடத்திலேயே எழுதி முடிக்கப்பட்டதுதான். அவர் மெட்டமைத்து முடிப்பதற்குள் பாடலை எழுதிவிடுவேன். இரண்டு பேருக்குமே அது எப்படி சாத்தியப்படுகிறது எனத் தெரியவில்லை.

தமிழ் சினிமாவில் அரசியலை மையப்படுத்திய பாடல்கள் மிக குறைவாகத்தானே வருகின்றன. இனிமேல் இந்நிலை மாறுமா?

அரசியலமையப்படுத்திய படங்களும் மிகக் குறைவாகத்தானே வருகின்றன. அரசியல் பாடல்கள் மட்டும் எப்படி அதிகம் வரும்? அரசியல்வாதிகளில் பலர் படமெடுக்க வந்திருக்கிறார்கள். ஆனால், அவர்களில் யாருமே அரசியலை பேசும் படங்களைத் தயாரிப்பதில்லை. சினிமாவை அவர்கள் வியாபாரமாகப் பார்க்கிறார்களே தவிர அரசியலை முன்வைக்கும் களமாக பார்ப்பதில்லை. ராஜுமுருகன், ரஞ்சித் போன்ற ஒருசிலர் புதிய நம்பிக்கையைத் தருகிறார்கள். இவர்கள் போல் இன்னும் நிறைய இளைஞர்கள், ஆரம்ப கால திராவிட இயக்கத் தலைவர்கள் சினிமாவை எப்படி கையாண்டார்களோ அப்பத் கையாளக்கூடியவர்கள், திரைத்துறைக்கு வெளியே இருக்கிறார்கள். அவர்கள் உள்ளே வந்தால் மாற்றம் வரலாம். வருவார்கள் என நம்புகிறேன்.

நிறைய காதல் பாடல்கள் எழுதியவர் நீங்கள் காதலுக்காக வெட்டவெளியில் ஆணவக் கொலைகள் நிகழும் தற்கால தமிழ்நாட்டு சூழலை எப்படிப் பார்க்கிறீர்கள்?

அகத்திணை புறத்திணை என்று நம்முடைய இலக்கியங்கள் சொல்கின்றன. காதல் அகம் சார்ந்தது, அரசியல் புறம் சார்ந்தது. அகமும் புறமும் இல்லாமல் வாழ்வு இல்லை. ஆனால், அகமாக பார்க்கப்பட வேண்டிய காதல் இன்று புறமாக மாறிக்கிடக்கிறது. காதலை அரசியலாகப் பார்க்கிறார்கள். அல்லது காதலில் அரசியல் செய்கிறார்கள். காதல் மணம் புரிந்தவர்கள் சாதியின் பெயரால் சாதி ஆணவத்தின் பேரால் கொலை செய்யப்படுகிறார்கள். இந்த மாற்றம் இதற்கு முன் நாம் காணாதது. நம்முடைய சங்க இலக்கிய பதிவுகளில் காதலுக்காக, கலப்பு மணம்



புரிந்ததற்காக எங்கேயும் யாரும் கொலை செய்யப்படவில்லை. இன்றைய தமிழக அரசியல் சூழல் ஆரோக்கியமானதாக இல்லை. ஓட்டு அரசியலை மட்டுமே மையமாக வைத்து அரசியல் கட்சிகள் செயல்படுகின்றன. எத்தனை இடங்களைப் பிடிப்போம், எப்படி ஆட்சி அமைப்போம் என்பது ஒன்றே அவர்களின் கனவாக இருக்கிறது. மக்களைப் பற்றி சிந்திக்கக்கூடிய தலைவர்கள் அருகிவிட்டார்கள். இருக்கும் ஓரிவரும் போதிய அடையாளமில்லாத நிலையில் ஒடுங்கிக் கிடக்கிறார்கள். சமூக நீதி காற்றிலே பறக்கவிடப்பட்டுள்ளது. சாதி ஆணவக் கொலைகள் தொடர்கின்றன. போதை சூழ்ந்த மாநிலமாக தமிழ்நாடு புரையோடிப்போய்க் கிடக்கிறது. எங்கும் எதிலும் ஊழல் மயம்.

ஒருபக்கம், அமைச்சர்களும் அடிமைகளைப்போல கூனிக் குறுகி கையேந்தி நிற்கிறார்கள். மன்னர் காலத்து கெடுபிடிகள் ஜனநாயகத்தைப் குழி தோண்டி புதைக்கின்றன. இன்னொரு பக்கம், மக்கள் நலன் சார்ந்த அரசியல் பின்னுக்குத் தள்ளப்பட்டு மகன்(கள்) நலன் சார்ந்த அரசியல் முன்வைக்கப்படுகிறது. சொல்லாததையும் செய்யும் இவர்கள் எப்போதுதான் நல்லதைச் செய்வார்களோ? ஒரு துயரமான சூழலில் நாமிருக்கிறோம். களைய வேண்டிய களைகளையும் பிழைகளையும் விட்டுவிட்டு மாற்றம் நிகழும் என்று மக்கள் நம்பிக் கொண்டிருக்கிறார்கள்.






# குழந்தைகளை பராமரிக்கும் தொழிலில் தவறு செய்து சிறைத்தண்டனை விதிக்கப்பட்டவர்கள்!

## கனடிய தகவல் தொடர் 249

இப்படியொரு செய்தி கனேடிய ஆங்கில ஊடகங்கள் பலவற்றில் பிரசுரமாகியிருந்தது. 'Vaughan Daycare Operators Get 30 Days in Jail, Fine after toddler's Death' - ரொறொன்ரோ ஸ்ரார் - மார்ச் 18, 2016. 'வோன் நகரில் குழந்தை ஒன்று பலியாகிய குழந்தைகள் காப்பகத்தின் உரிமையாளர்களுக்கு முப்பது நாள் சிறை'

கணவன், மனைவி, மகள் என மூன்று பேருக்கும் முப்பது நாட்கள் சிறை, இரு வருடங்கள் நன்னடத்தை, $15,500 டொலர் பண தண்டனை, தொழில் செய்யமுடியாத தடை என தண்டனைகள் பரவலாக இருந்தனது.

ஒழுங்கு முறைகள், துப்பரவு என எவையுமில்லாத அந்த இடத்தில் அவர்களின் அசட்டையீனம் ஒரு குழந்தையின் உயிர் இழப்புக்கு காரணமாக அமைந்து விட்டது என்பதே அங்கு முன் வைக்கப்பட்ட குற்றச்சாட்டாகும். அரச அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ளாது தங்கள் வீட்டில் வைத்து குழந்தைகள் காப்பகம் நடத்தியது இச்சம்பவம் தொடர்பான விசாரணையின் போது பகிரங்கப்படுத்தப்பட்டது.

இந்த சம்பவத்தினை தொடர்ந்து குழந்தைகள் பராமரிக்கும் காப்பகங்களுக்கு, அனுமதி பத்திரம் வழங்குவது மற்றும் மேற்பார்வைகள் செய்யும் மாகாண கல்வி அமைச்சு இவை தொடர்பான விடயங்களில் பல கண்டிப்பான மாற்றங்களை செய்துள்ளது.

மாகாண கல்வி அமைச்சர் Ms. லிஷ் சாண்டல்ஸ் (Ms. Liz Sandals) அவர்கள் இங்கு கருத்து தெரிவிக்கும்போது 'அனுமதி பத்திரம் பெற்ற குழந்தைகளைப் பராமரிக்கும் காப்பகமோ அல்லது அனுமதி பத்திரம் இல்லாத தனியார் இடங்களோ எந்த இடமாக இருந்தாலும் அது பாதுகாப்பானதாகவும், சூழல், சுற்றாடல்களுக்கு உகந்ததாகவும் உள்ளதா போன்ற விடயங்களை தங்கள் பிள்ளைகளை அந்த இடங்களில் விட்டுவிட்டு போகும் பெற்றோருக்கு கண்காணிக்கும் பாரிய பொறுப்பு உண்டு. அங்கு பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் ஏற்படுமாக இருந்தால் அரசும், சட்டமும் தலையிட்டு பெற்றோர் சகலரும் சட்டத்தின் முன்பு நிறுத்தப்படுவார்கள்' என எச்சரிக்கையுடன் கண்டிருந்திருந்தார். தவறுகளுக்குரிய பணத்தண்டனையாக $2,000 - $250,000 வரை பல இடங்களில் விதிக்கப்பட்டு, மகாணம் முழுவதுமுள்ள பல குழந்தைகள் காப்பகங்கள் தடை செய்யப்பட்டுள்ளன. ஒரு குழந்தையின் உயிரிழப்பு நடக்கும் அளவுக்கு அசட்டையீனம் உருவாகியிருந்தால் சிறைத்பண்டனை வரை கிடைக்கும் என இவை தொடர்பாக மாகாண அரசின் சட்ட பிரிவுகளில் குறிப்பிடப்பட்டுள்ளது.



அரச அனுமதிப்பத்திரம் பெற்றுத்தான் குழந்தைகளை பராமரிக்கும் தொழில் செய்ய வேண்டும் என்பது நிர்ப்பந்தம் அல்ல. ஆனால் அனுமதிப்பத்திரம் இல்லாது நடத்தும் குழந்தைகள் காப்பத்திகும் சில வரையறைகள் உண்டு.

எந்த கட்டத்தில் குழந்தைகளை பராமரிப்பவர்கள் அரச அனுமதிப்பத்திரம் பெறவேண்டும்?

- இரு வயதுக்கு உட்பட்ட இரு பிள்ளைகளுக்கு மேல் பராமரிக்க வேண்டிய நிலையில் உள்ளவர்கள்.
- 2 - 10 வயதுக்கு இடைப்பட்டவர்களாக இருந்தால், ஐந்து பிள்ளைகளுக்கு மேல் பராமரிக்கும் நிலையில் இருப்பவர்கள்.
- 10 - 13 வயதுக்கு இடைப்பட்டவர்களாக இருந்தால் ஆறு பிள்ளைகளுக்கு மேல் பராமரிக்கும் நிலையில் இருப்பவர்கள். (இங்கு பராமரிப்பவர்களின் சொந்த பிள்ளைகளும் கணக்கில் உள்ளடக்கப்படும்)
- வீடுகளில் குழந்தைகள் காப்பகம் நடத்துபவர்கள் ஒன்றுக்கு மேல் நடத்துவதாக இருந்தால் அனுமதிபத்திரம் பெற வேண்டும்.

மேலும் அனுமதிபத்திரம் எடுத்து குழந்தைகளை பராமரிப்பவர்கள் அல்லது அனுமதி எடுத்து பராமரிக்க வேண்டிய தேவையற்றவர்கள் எவரும் மாகாண அரசின் சட்ட விதிகளை மீறாமல் இருத்தல் வேண்டும். (Provincial day nurseries act)
எந்த நேரத்திலும் தேவைப்பட்டால் மாகாண அரசின் பரிசோதகர்கள் வந்தால் பரிசோதனைக்கு அனுமதிக்க வேண்டும்.

பொதுவாக கனடாவில் அரச அனுமதிப் பத்திரம் பெற்றுக்கொள்ளாது குழந்தைகளை பராமரிப்பவர்களை பின்வரும் வகைக்குள் உள்ளடக்கலாம்.
1. வீட்டுக்கு வந்து ஒரு குறிப்பிட்ட நேரம் குழந்தைகளை பராமரிக்கும் தொழிலை ஊதியத்துடன் செய்பவர்கள்.
2. வீட்டில் தங்கியிருந்து வேலைக்கு என நியமிக்கப்பட்ட பணியாளர். (A nanny who lives with family)
3. தங்களின் வீடுகளில் வைத்து இன்னொருவரின் பிள்ளைகளை பராமரிப்பவர்கள்.

இங்கு குறிப்பிடப்பட்ட மூன்று வகையினரும் மேற்குறிப்பிட்ட வரையறைக்கு மேலே போகும் போது அரச அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ள வேண்டும்.
குழந்தைகள் காப்பகம் நடத்துவோர் மாகாண அரசின் அனுமதிப்பத்திரம் பெற வேண்டுமாயின் தொடர்புகொள்ள வேண்டிய இடம் Child Care Quality Assurance & Licensing Branch
77 Wellesley Street West
P.O.Box 980
Toronto, ON M7A 1N3
Phone - 1-877-510-5333
ஒன்ராரியோ மாகாணத்தில் இயங்கும் குழந்தைகள் காப்பகம் (Types of child care) என்பது பின்வருமாறு வகைப்படுத்தப் படுகின்றன.

1. அனுமதிப்பத்திரம் பெற்று வீடுகளில் நடத்தப்படும் குழந்தைகள் காப்பகம்.



சிவ. பஞ்சலிங்கம் B.Com.,
(Licensed Insurance Broker)
காப்புறுதி சம்பந்தமான ஆலோசனைகளுக்கு:
416.321.0999

தொடர்ச்சி 20ஆம் பக்கம்...

mhc
MOHAN
HOMEOPATHIC CLINIC
& MASSAGE CLINIC

- கழுத்து, முதுகு நோவு
- வாகன விபத்து
- மன அழுத்தம்
- விளையாட்டுக் காயங்கள்
- தலையிடி, தலைவருத்தும்

போன்ற நோய்களிற்கு அழையுங்கள் டாக்டர் ஜே. மோகன்


Dr. J. Mohan
D.H.M.S., N.H.C.

WE OFFER CONSULTATION
REGARDING ALL HEALTH PROBLEMS INCLUDING:

- STRESS
- SKIN PROBLEM
- RESPIRATORY PROBLEMS
- DIGESTIVE PROBLEMS
- VARICOSE VEINS
- BACK PROBLEM /NECK PROBLEM
- TENNIS ELBOW PROBLEM
- TREAT WITH MASSAGE THERAP
- ALLERGIES
- SEXUAL PROBLEMS
- SEXUAL PROBLEMS
- CHOLESTEROL
- TUMOR
- FOOT PROBLEM

HOMEOPATHIC TREATMENT ABOUT FOLLOWING

Cough, Flu, Depression, Anxiety, Asthma
Tonsillitis, Gout, Arthritis, P.M.S, Leucorrhea
Migraines, Hair Loss, Diabetes, Cystitis, Cancer
Prostatitis, Obesity, Hemorrhoids, Stumatitis, Colitis

Also other Acute & Chronic Problems
HOMEOPATHIC PRACTITIONER

TEL: 416-298-7537/416-291-3022

5200 Finch Ave, East Suite 210
At Middle Field, Scarborough, M1S 4Z4

# கீல்வாதம் என்னும் ஆதரைடிஸ்

## நீண்டநாள் வாழ நினைத்ததை அடைய நோய் தடுக்கும் வழிமுறைகள்

# Arthrities

வாத நோய்களில் கீல்வாதம், முடக்குவாதம், எலும்பு அழற்சி (Osteo), பாரிச வாதம், நச்சு வாதம், சந்துவாதம், வலி வாதம், சூதக வாதம் போன்ற பல வகைகளுண்டு.



### நோய் ஏற்படும் இடங்கள்

முழங்கால், முழங்கை, மணிக்கட்டு, கணுக்கால், கைவிரல், முட்டு எலும்புகள், கழுத்து மற்றும் இடுப்பிலுள்ள எலும்புகள் போன்றவற்றில் இந்த நோயின் தாக்கம் ஏற்படும்.

### நோய் வருவதன் காரணங்கள்

நார்ச்சத்து (Fibre) உள்ள உணவுப் பொருட்களை உணவில் சேர்க்காததாலும், புளிப்புவகை உணவுகளை அதிகம் உண்பதாலும், உடற்பயிற்சி இல்லாததாலும், நீண்டநாள் மலச்சிக்கலாலும், முதுமையின் காரணமாக எலும்புகள் தேய்வதாலும், பலவித நோய்களுக்கான மாத்திரைகளை அதிகம் உட்கொள்வதாலும், உடல் எடை அதிகரிப்பதாலும் இந்தநோய் ஏற்படக் காரணமாகின்றது.

### நோயால் வரும் உபாதைகள்

எலும்பு முட்டுகளில் வீக்கம் ஏற்பட்டு மிகுந்த வலியையும், குத்துதல் போன்ற உணர்வையும் உண்டாக்கும், சில சமயங்களில் முட்டுகள் சிவந்து காய்ச்சலும் ஏற்படும். இவ்வாறு வலி ஏற்படும்போது நோயாளிகள் ஓய்வு எடுக்காமல் முட்டுகளை அடிக்கடி அசைப்பதால் முட்டுகளின் இணைப்புகள் தேய்ந்து அதிலிருக்கும்



ஜவ்வும் காய்ந்து நீட்டவும் மடக்கவும் முடியாது போய்விடும்.

### இதன் விளைவுகள்

இந்த ஆதரைடிஸ் நோயானது முதலில் பெரிய முழங்கால், முழங்கை, மணிக்கட்டு, இடுப்பு போன்ற இடங்களில் தான் அடிக்கடி வலியையும் வீக்கத்தையும் ஏற்படுத்துகிறது. இது ஆரம்பத்தில் தெரிவதில்லை. படிப்படியாக இதயத்தின் மூன்று தசைப் பகுதிகளையும் வால்வுகளையும் தாக்கி அவற்றைப் பழுதடையச் செய்கிறது. இதயத்தின் தொழில்பாட்டில் இந்த வால்வுகளுக்கு முக்கிய பங்கு உண்டு. இரத்தமானது ஒரே திசையில் செல்ல இவை சரியானபடி மூடித் திறக்க வேண்டும். வால்வுகள் குறிப்பிட்டபடி இயங்காமல் போனால் இரத்த ஓட்டம் தடைப்பட்டு நம் உடலின் இயக்கம் திசை மாறுகிறது. இதன் காரணமாக காய்ச்சல் அடிக்கடி வந்து போகும். சிறிது தூரம் நடந்தாலும் மேல் மூச்சு வாங்கும். எல்லோரையும் போல் நடக்க முடியாது மயக்கம் வரலாம். இரத்த சோகை (Law Blood Pressure) வர வாய்ப்புண்டு. கால்களும் வயிறும் வீங்கிப்போகலாம்.

### சிகிச்சை முறைகள்

வலியும் வீக்கமும் உள்ள இடத்தில் வாத கோடாரி தைலம், வாத கேசரி தைலம், மகா நாராயண தைலம் என்பனகொண்டு அழுத்தி தேய்த்து விடவேண்டும். வாரம் ஒருமுறை பேதி மருந்து உட்கொண்டு உடலிலுள்ள கழிவுகளை வெளியேற்ற வேண்டும். அப்போதுதான் ரத்தத்திலுள்ள அழுக்குகள் நீங்கி அது சுத்தமாகும். இரத்த ஓட்டம் சீராக இருந்தால் முட்டுவலி குறையும்.

### யோகாசன சிகிச்சைத் திட்டம்

முறைப்படி செய்யும் யோகாசனப் பயிற்சியால் மாறாத நோய்கள் என்று ஒன்றுமில்லை. ஆதரைடிஸ் என்னும் கீல்வாத நோயால் அவதிப்படுவர்களுக்கு யோகாவில் சில சிறப்பான பயிற்சிமுறைகள் இருக்கின்றன. இந்த நோயானது உடலிலுள்ள 44 முட்டுகளையும் தாக்கக்கூடியது. இந்த முட்டுகளை சரிவரி இயக்கும் வர்மப் புள்ளிகளை (Pressure Points) சீராக இயங்க வைப்பதன் மூலம் நோயை முற்றிலுமாக விரட்டி அடிக்கலாம்.

### ஆசனங்கள்

1. விபரீதகரணி
2. கோமுகாசனம்
3. பஸ்ஸி மொத்தாசனம்
4. தனூராசனம்
5. திரிகோணாசனம்
6. புஜங்காசனம்
7. நாடிசுத்தி, சரசுவாசம், கபாலபாதி மூச்சுப்பயிற்சி



இவற்றை ஒரு அனுபவமுள்ள யோகாசன ஆசிரியரின் உதவியுடன் பழகி தினமும் காலை, மாலை என்று ஆரம்ப நாட்களில் செய்துவர வேண்டும்.

### முடிவான தீர்வுதான் என்ன?

மேலே குறிப்பிட்டது போல நோயின் தாக்கத்திற்குள்ளான முட்டுக்களிலுள்ள வர்ம புள்ளிகளை ஒரு குறிப்பிட்ட விசை அளவுக்க அழுத்துவதன் மூலம் அந்த புள்ளிகளிலுள்ள காய்ந்து இறுகியிருக்கும் திரவப் பொருளானது இளகத் தொடங்கும் போது வலியும் வீக்கமும் குறைய ஆரம்பிக்கின்றது. அதேநேரத்தில் அந்த முட்டுகளை இயங்கச் செய்யும் பொருத்தமான பயிற்சிகளையும் நோயாளிகளுக்கு அளிக்க வேண்டும். நோய் பூரண குணம் பெறும்வரை இதனைத் தொடர வேண்டும்.



### உணவுத் திட்டம்

மலச்சிக்கல் இல்லாமல் செய்வதற்கு நார்ச்சத்து (Fibre) அதிகமுள்ள உணவுகளை உட்கொள்ள வேண்டும். பருப்பு மற்றும் கிழங்கு வகைகளைக் குறைத்து பச்சைக் காய்கறிகள், பழங்களை உணவில் சேர்க்க வேண்டும். மாமிச உணவுகளைத் தவிர்ப்பது நல்லது. அதுமட்டுமன்றி ஆயுள்வேத முறையில் பொட்டுக்கடலையை தினமும் ஒரு கைபிடி அளவு உண்டுவருவது சிறந்த பலனைக் கொடுக்கும். ஏனெனில் தேய்ந்த முட்டுகளைத் திரும்பவும் உறுதிபெறச் செய்வதற்கு இந்த பொட்டுக்கடலையின் பங்கு அளப்பெரியது.




ஆரோக்கிய வாழ்வு
Diploma in Yoga Therapy (India)
416.289.2033 after 7:00pm
416.617.5721

உடனுக்குடன் உங்கள் பார்வைக்கு
www.tamilvanakkam.com

ARISTO PEST CONTROL
Set Your Mind At Rest, We Will Get Rid Of The Pest
24HRS / 7 DAYS EMERGENCY SERVICES & ANIMAL REMOVAL



• Cockroach • Bedbug • Animal Control • Mice
• Bird Control • WASPS • Hornets Removal • Rat
Same Day Service - Residential, Commercial, Industrial
We Also Provide No Obligation Inspection For Commercial & Residential Clients
Written Guarantee & Discounted Rates - Call Now 647.339.3926
Government Licensed Exterminator
(We Speak English, Gujarati & Hindi)
info@aristopestcontrol.ca / www.aristopestcontrol.ca

# குழந்தைகளை...

18ஆம் பக்கத்தொடர்ச்சி

(Licensed home child care)

மாகாண கல்வி அமைச்சு இப்பணி செய்வதற்குரிய அனுமதிப்பத்திரம் வழங்குவது வழமையாகும். பொதுவான தனி நபர், தங்கள் வீடுகளில் அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொள்ளாது குழந்தைகள் காப்பகம் நடத்தி வருவது பொதுவாகப் பல இடங்களிலும் நடைபெற்றுக் கொண்டேயுள்ளது. ஆனால் குழந்தைகள் பராமரிப்பு காப்பகங்களை பல வீடுகளில் வைத்து நடத்தி வரும் முகவர் நிறுவனங்கள் (Home child care agencies) அரச அனுமதிப்பத்திரம் பெற்று நடத்தி வருகின்றனது. இம்முகவர்



நிலையங்கள் கல்வி தராதரமும் சம்பந்தப்பட்டதுறையில் பயிற்சி பெற்ற குழந்தைகள் பராமரிப்பு ஊழியர்களை அவரவர் வீட்டுக்கு அனுப்பி குறிப்பிட்ட சில மணி நேரங்களுக்கு குழந்தைகளை பராமரிக்கும் பணிகளை நடத்தி வருகின்றனது. இவ்வாறு அனுப்பப்படுபவர்கள் அரச அங்கீகாரம் பெற்ற பராமரிப்பு உத்தியோகத்தர்களாக (Home Caregivers) இருத்தல் வேண்டும்.

மாகாண கல்வி அமைச்சு இத்தகைய தொழில் செய்யும் முகவர் நிறுவனங்கள், தொழில் செய்யும் இடங்கள், பராமரிப்பவர்களின் தராதரங்கள் யாவற்றினையும் ஒவ்வொரு வருடமும் பரிசீலனை செய்து கொள்கிறது.

2. அனுமதிப்பத்திரம் பெற்று நடத்தப்படும் குழந்தைகள் காப்பகம் (Licensed child care center)

பாடசாலை, சன சமூக மையங்கள் (Community Centres), வழிபாட்டு இடங்கள் (Places of worship) போன்ற இடங்களில் சிறுவர் பாடசாலை போன்று நடத்தப்படும் இடங்கள் ஆகும்.

ஒன்ராரியோ மாகாணம் முழுவதும் மொத்தமாக 5,069 காப்பகங்கள் பல்வேறு இடங்களில் அரச அனுமதிப்பத்திரம் பெற்று நடத்தப்பட்டு வருவதாக புள்ளிவிபரங்கள் தெரிவிக்கின்றன. இவை யாவும் அரச நிபந்தனைகளுடன் நடத்தப்பட்டு வருவதுடன், கண்காணிப்புகளும் கண்டிப்பாக இவைமீது தொடர்ந்தவண்ணனே உள்ளது.

3. பாடசாலை நிர்வாகத்தில் நடத்தப்படும் குழந்தைகள் காப்பகம். (Kindergarten before and after school care)

இது பாடசாலை நிர்வாகத்தின் கீழ் நடத்தப்படும் ஆரம்ப பாடசாலைகளை குறிப்பிடப்படும் ணபாடசாலை ஒழுங்கு விதிகளுக்கு அமைய இவை நடத்தப்படும்.

4. அனுமதிப்பத்திரம் இல்லாத குழந்தைகள் காப்பகம்

அரச அங்கீகாரம், பரிசோதனைகள், கண்காணிப்புகள் என எவையுமில்லாத அவரவர் விரும்பியபடி நடத்தும் குழந்தைகள் காப்பகமே இவை. ஆனால் ஏதாவது முறைப்பாடுகள் வந்தால் கல்வி அமைச்சின் புலனாய்வாளர்கள் நேரடியாக வந்து விடுவார்கள்.

ஓகஸ்ட் 31, 2015 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட புதிய சட்ட விதிகளின்படி (Ontario Child Care & Early Years Act) ஆறு வயதிற்கு உட்பட்ட தங்களின் சொந்த பிள்ளைகள் உட்பட ஐந்து பிள்ளைகளுக்கு மேல் குழந்தைகளை மொத்தமாக பராமரிக்கும் காப்பகம் நடத்தி வருவதாக இருந்தால் அவர்கள் அனுமதிப் பத்திரம் பெற வேண்டும்.

# நாடு பார்த்து வந்தவரே!

பாவினம் - ‘நேரிசை வெண்பா

போரி லேபட்டதுன்பம் போதுமென்றே தந்நாட்டில்
சீரிய வாழ்வின்றித் தேசமெங்கும் - வேரிழந்த
மாமனிதா தாய்நாடு மட்டுமல்ல தன்னினத்தைத்
தேமதுரத் தாய்மொழியைத் தேடு.

தன்னை மறந்தே தவறுகள் செய்கின்றீர்
இன்னலுற்ற மக்கள் இயல்பின்றி - வன்னியில்
மட்டுமல்ல வாழ்விடத்தில் மாற்றாரின் வன்செயலால்
திட்டமிட்ட சீரழிவு தான்.

தேசமெங்கும் வாழ்கின்ற தேசப்பற் றுள்ளவரே
பாசத்தைக் காட்டிடுவீர் பக்குவமாய் - நாசஞ்செய்
ஆள்வோர் அனுசரணை ஆதிக்கம் செய்வோர்க்குத்
தோள்கொடுக்கும் காரணத்தைத் தேர்.



நாட்டின் அபிவிருத்தி நன்கென்பார் நல்லாட்சி
கூட்டமாய்க் கூடிக் குதுகலிப்பார் - வாட்டமுற்ற
மக்களின் வாழ்வையோ மாற்றார் கெடுபிடி
தக்கதென்றும் சொல்கின்றார் தான.

அன்று அனாதைகட்கு இல்லம் சிலவேதான்
இன்று கிராமமெங்கும்  ஏங்குகின்ற - அன்னையர்
ஏற்ற துணையின்றி ஏவல் பிசாசுகள்
கூற்றாய் அமைகின்ற கூர்ப்பு

தார்போட்ட வீதியென்று தப்புக் கணக்கிடுவோர்
சீர்கெட்ட வாழ்வைத்தான் சிந்திப்பீர் - ஓர்ந்துணர்ந்தே
உண்மையைப் பேசி உரிமைக்காய்ப் போராடும்
எண்ணத்தைக் கொள்வீரே ஏற்று.

\- முருகேசு மயில்வாகனன்

# காற்றில் அலையும் கானம்



வளர்த்த ஒரு சேவலையும்
இறைச்சிக்கு விற்றவன்போல்
புலம்புகிறான்
பொழுது
விடியவில்லையென்று

ஆழ்மன வெளிகளைத் துளைத்துள்ள
ஓசோன் ஓட்டைகளால்
சிந்தனைப் பலகையில்
எழுதியுள்ளன
நோய்க்காவும் சித்திரங்கள்

கனவில் தினமும் முகம் புதைத்துத்
தோளில் சாய்கிறாள்
விவாகரத்தான முன்னாட் காதலி

காற்றில் ஆறும் காயங்கள்
வடுவாக எஞ்சும்
நெஞ்சாங்கூட்டு நரம்புகளில்

கானல்கள் தண்ணீராகிக்
கானக மிருக பறவைகளின்
தாகம் தணிக்கின்றன

பார்வையால் பரிசளித்த
கண்கள்
மறுத்ததில்லை
புன்னகைப் பதிலை

உதடுகள்
ஏதோ பேசக்காத்திருந்தன
முடியவில்லை
மௌனம்தான்

முற்றுப்புள்ளி

வேண்டாம் இனியும்
ஓடி ஒளி
விளையாட்டு

சோடிவிரல் பிடித்து
கோடிசுகம் காணலாம்
மறக்காமல்
மறுபிறப்பில் வந்துவிடு

என்னிதயக்
குடிசைக்குள்.



முத்துராஜா

YOGA - MEDITATION CLASSESS

ஆரோக்கிய வாழ்விற்கு வழிகாட்டும் மருத்துவமுறை யோகாசன பயிற்சிகள்




மூட்டுவலி - முதுகுவலி - ஆஸ்துமா - இரத்த அழுத்தம், நீரிழிவு நோய் - பெண்களின் மாதவிடாய் கோளாறுகள் - உடல் எடை - தொந்தி குறைய மற்றும் மன அழுத்தம் போன்றவற்றிற்கு நிவாரணம்.

நீரிழிவு, இருதய நோயாளிகளுக்கு தனிப்பட்ட நேரடி பயிற்சிகள்



GTA Square Mall இல் புதன்கிழமைகளில் காலை 8:00 மணிக்கு வகுப்பு நடைபெறுகின்றது

தொடர்புகளுக்கு: Scarborough - Markham - செல்வ சோதி - 416.289.2033

விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு
www.vlambaram.com / www.tamilvanakkam.com




# தாயகத்தில் தவிக்கும் எமது அன்னையர்க்கு $51,000 வாரி வழங்கிய வள்ளல்கள்!

"அன்னையைப் போல் ஒரு தெய்வம் இல்லை" என்ற முது மொழியினை புதுப்பிக்கும் வகையில் கனடா வாழ் தமிழ் அன்னையர்கள் பலர் ஒன்றிணைந்து தாயகத்தில் வாழும் அன்னையர்களின் எதிர்கால நன்மை கருதி $51,000 திரட்டி உள்ளார்கள். அதாவது 90 பெண்கள் தமக்கென சொந்த தொழிலினை ஆரம்பிப் பதற்காகவே இப்பெருந்தொகை நிதி அனுப்பி வைக்கப்பட உள்ளது.

மாபெரும் கலை நிகழ்ச்சி ஒன்றினை ஏற்பாடு செய்து அதற்கென பல்வேறு தொழில் முகவர்களிடம் நிதி திரட்டியும், முப்பது டொலர் பெறுமதியான நுழைவுச் சீட்டுக்களை விற்பனை செய்தும் இப்பெருந்தொகை நிதி யினை திரட்டி உள்ளமை பெரும் பாராட்டுக்குரிய விடயமாகும். இந்நிகழ்ச்சி 2016 மே 07 இல் ஸ்காபுறோவிலுள்ள "கொன்வென்சன் சென்ரர்" நிலையத்தில் நடைபெற்றது. வெகு கோலாகலமாக நடை-பெற்ற இவ்விழாவில் ஆண்களை விட பெண்களே அதிகளவில் கலந்து கொண்டி ருந்ததை அவதானிக்க முடிந்தது. இந்நிகழ்ச்சிக்கு OHM Development, NS Dental, Nava Law, Lyca TV, Shinol Inc., Mortgages of Canada, Beyond the Limit, Chef Ramanaa, Tet TV, Lankasri Fly, Nira Creations, Abisseka Lloydson ஆகியோர் உட்பட மற்றும் பலர் பல்வேறு விதமான நிகழ்ச்சிகளுக்கான செலவினை ஏற்றுக் கொண்டிருந்தனர்.

"அன்னையர்களுக்கு அன்னையர்கள் (Mothers 2 Mothers) -2016" என்ற குழு ஒன்றினை அமைத்து தீவிரமாகச் செயற்பட்டு சாதனை படைத்துள்ளனர். இக்குழுவின் நிறைவேற்று குழுவினரான திருமதிகள்: ஹரணி சிவலிங்கம், சுமி பிரபாகரன், மதனி கணேஷ், றெஜினா பிலிப்புப்பிள்ளை, மௌறீன் வரதன், நிரா பரராஜ், அபிஷேகா லொயிட்சன், தசி சின்னத்துரை ஆகியோரு டன் திரு. ரமணா, திரு. ராம் மங்களேஸ், பிரசாந்த் சிறிசந்திரமோகன் ஆகியோர் உண்மையிலேயே பாராட்டுக்கு உரியோரா வர். விழா நிகழ்ச்சிகள் இரவு ஏழு மணியளவில் தவில் இசையுடன் ஆரம்பமாகி யது. தமிழ் சமுதாயத்தின் வளர்ச்சிக்காக தம்மையே அர்ப்பணித்த அன்னையர் களுக்கான கீதத்தினை மிஷேல் பிலிப்புப் பிள்ளை பாடினார். அதனைத் தொடர்ந்து கனடா தேசிய கீதம், தமிழ்த் தாய் வாழ்த்து ஆகியவற்றினை செல்வி சுபா பிரான்சிஸ் பாடினார். ஏற்பாட்டுக் குழுவின் தலைவியான ஹரணி சிவலிங்கம் வரவேற்புரை நிகழ்த்தினார். திருமதி சில்வியா பிரான்சிஸ், திரு. ஜேசன் திருஞானம் ஆகியோர் நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்கினார்கள்.

OHM நிறுவன உரிமையாளரான திரு. கண்ணன் உரையாற்றிய போது "ஊரில் இடம்விட்டு இடம் பெயர்ந்து வீட்டு வசதியோ, தொழில் வசதியோ இன்றி பெரும் அவல நிலைக்கு ஆளாகி துன்புறும் அன்னையர் களுக்கு உதவும் பொருட்டே இந்நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டது. "அன்னையர்களுக்கு அன்னையர்" என்ற இந்நிகழ்ச்சியினை "Social Service Network" என்ற சமூக சேவை நிறுவனத்தின் நிறைவேற்று இயக்கு நரான திருமதி சுமி பிரபாகரன் ஏற்பாடு செய்தார். இங்குள்ள பத்தாயிரம் பேர் நிதி உதவி செய்தால் அங்குள்ள ஆயிரம் குடும்பங்களுக்கு உதவி செய்ய முடியும்" எனக் கூறினார்.





திரு. ஆனந்தசங்கரி எம்.பி. உரையாற்றிய போது "இங்குள்ள அன்னையர்கள் அங்குள்ள அன்னையர்களுக்கு உதவி செய்து கௌரவிப்பது பாராட்டுக்குரிய விடயமாகும். அதற்காக இம்முயற்சியை மேற்கொண்ட அனைத்து அன்னையர்களுக்கும் எனது பாராட்டுதலையும், வாழ்த்துக்களையும் நான் தெரிவித்துக் கொள்கின்றேன்" எனக் கூறினார்.

நிகழ்ச்சிக்கு தலைமை தாங்கிய டாக்டர் வசந்தகுமார் உரையாற்றிய போது "தனது 82 ஆண்டு கால வாழ்வில் அறுபது ஆண்டு காலம் தொண்டு சேவையில் ஈடுபட்டு வந்த திருமதி லலிதா புறூடிக்கு சமூக உணர்வுள்ள அன்னைக்கான விருது வழங்க தீர்மானிக்கப்பட்டுள்ளமை பெரிதும் வரவேற் புக்குரிய விடயமாகும். யாழ்ப்பாணத்தில் வாழ்ந்த காலத்தில் "சாந்தி அகம்" என்ற நிறுவனத்தை அமைத்து அதனூடாக சமூக சேவைகளை ஆற்றி வந்தார். ஆங்கிலம், தமிழ் ஆகிய இருமொழிகளிலும் எழுதவல்ல ஆற்றல் கொண்டவர். அவருக்கு "சமூக உணர்வாளர்" என்ற விருது வழங்கப்படுவது மிகவும் வரவேற்கத்தக்கது" எனக் கூறினார். சமூக சேவைகளில் யாழ்ப்பாணத்தில் 1989ம் ஆண்டு முதல் திருமதி லலிதா புறூடியுடன் இணைந்து சேவையாற்றி வந்த வண. சகோதரி விக்ரோறியா ஜேம்ஸ் அவர்களும் இவ்வைபவத்தில் கலந்து கொண்டிருந்தார். கனடா அழகிகளின் கவர்ச்சி நடனத்துடன் விழா நிறைவெய்தியது.

- வீரகேசரி மூர்த்தி -




IP GOLD HOUSE
22K Gold Jewellery - Antique & Stone Jewellery
Wedding Season Sale
REPAIR FREE
உங்களது பழைய நகைகளை எங்களிடம் கொடுத்து மிகவும் சிறந்த விலையில் புதிய நகைகளை பெற்றுக்கொள்ளலாம்.
IP
BRING YOUR OLD JEWELLERY AND GET NEW JEWELLERY FOR BEST PRICE
STONE JEWELLERY $ 48.00 PER GRAM.
NEW COLLECTION OF WEDDING JEWELLERY.
40 New Delhi DR. Unit 56, Markham, ON. L3S 0B5
905-554-5890


Niru
RUS-C
GOLD
INTRODUCING
ROASTED CURRY POWDER
வறுத்த மிளகாய்த்தூள்
சுவையும்
மணமும்
HOT
RUS-C
GOLD
ROASTED
CURRY POWDER
MILD
GOLD
CURRY POWDER
100%
Natural
NO ARTIFICIAL COLOUR
NO ARTIFICIAL FLAVOURS




# தேர்தல்

உஷாரய்யா உஷாரு! உஷாரய்யா உஷாரு!
காலை பிடிச்சி, கையை பிடிச்சி
பல்லைக் காட்டி, பணிவைக் காட்டி
ஓட்டு வாங்க, துட்டு குடுத்து
தோடு குடுத்து, குடத்தைக் குடுத்து
சேலை குடுத்து, வேட்டி குடுத்து
வக்கணையா சிரிச்சி பேசி
வஞ்சகமா வலையை வீசி
வாக்குறுதி அள்ளி வீசி
ஓட்டு கேட்க வாராங்க, உஷாரய்யா உஷாரு.

சாதிக்காரன் என்பாங்க
மதத்துக்காரன் என்பாங்க
கட்சிக்காரன் என்பாங்க
கொள்கைக்காரன் என்பாங்க
பல வருஷப் பதவிக்காக
இலவசங்க குடுப்பாங்க
ஓட்டு வாங்கி ஜெயிச்சிப்புட்டா
ஓடிப் போயிடுவாங்க

தேடி நீங்க போயி நின்னா
திரும்பிப் பார்க்க மாட்டாங்க
வாக்குறுதியைப் பத்திக் கேட்டா
வாயை மூடி சிரிப்பாங்க
அதட்டி நீங்க கேட்டுப்புட்டா
அடியாளு வருவாங்க
பக்குவமா தொகுதி நிதியைப்
பதுக்கி உள்ளே வைப்பாங்க
திட்டங்களைப் போட்டு போட்டு
துட்டு சேர்க்கப் பாப்பாங்க
அஞ்சு வருஷ காலத்துலே
அஞ்சாம ஊழல் செஞ்சி
அஞ்சாறு தலைமுறைக்கு
சொத்து சேர்த்து வைப்பாங்க.



காவல் துறை அவர்களுக்கு
ஏவல் செய்யும், அதனாலே
சட்டமீறல் அவங்களுக்கு
சாதாரண வேலையாம்.
வழக்கு யாரும் போட்டாலும்
வாய்தாவா கேப்பாங்க
நீதிமன்ற தீர்ப்பு வந்தா
மனு போட்டு இழுப்பாங்க.

இவங்களுக்கு பாடம் புகட்ட
இருக்கறது ஒரே வழி.
நல்லவங்களாப் பாத்து
நாம ஓட்டு போடணும்.
விவேகமா சிந்திச்சி
வாக்களிக்க செய்யணும்.
அஞ்சு வினாடி சிந்திச்சி
அழகா ஓட்டுப் போட்டுட்டா
அஞ்சு வருஷம் நிம்மதியா
அக்கடான்னு இருக்கலாம்.

- சிலேடை சித்தர் சேது சுப்ரமணியம்



TBC Toronto Business College
கணக்கியில் கல்வியில் ஓர் முதன்மை நிறுவனம்
Learning Today... Leading Tomorrow

INTERNATIONAL STUDENTS WELCOME
JOB READY
DIPLOMA PROGRAMS
Start May 16th
ACCOUNTING & PAYROLL ADMIN.
Jobs available in plenty
Earn good salary
FOOD SERVICE WORKER (FSW)
Work in Hospitals, Schools , Senior Homes Etc.
PERSONAL SUPPORT WORKER(PSW)
Immediate Job Opportunities
Work in Hospitals, Long Term Care, Senior Homes Etc.
SECOND CAREER
யார் தகுதி உடையவர்கள் ?
★ EI பெற்றுக்கொண்டிருப்பவர்கள்
★ 2005ம் ஆண்டுக்குப்பின் EI பெற்றவர்கள்
★ 5 வருடங்களுக்குள் Maternity / Parental Benefits பெற்றவர்கள் Diploma பாடநெறி ஒன்றைக் கற்கலாம்
Tuition Fees,Books,Living Expenses
Day care & Transportation up to $28000 or more
visit www.secondcareerontario.com
PART TIME COURSES
Windows,Word,Excel,Power Point, Access,QuickBooks,Sage50 Accounting & Accpac 2012
Workshops
Food Handler Certification
First Aid & CPR
- 100% Instructor Led Training
- Small Class Sizes
- Student Friendly Environment
- Ample Free Parking
- Professional & Experienced Staff
- TTC Accessible
- Career Planning & Counselling
416- 451- 6680 / 416-291-5155
4465 Sheppard Ave. East #208
( Sheppard & Brimley ) Scarborough
www.tbcollege.com info@tbcollege.com
(Registered as a Private Career College under the Private Career Colleges Act 2005)

# வருகவருக வசந்தமே

இலைகுழை களைந்து பனிமழையில் நனைந்த
மரம் செடி கொடிகள் யாவும் தளைக்க
பலரது வெறுப்புடன் பனியது விடைபெற
வருக வருக வசந்தமென வரவேற்பாம்
கனடாவின் நிலப்பரப்பில் கனிவளங்கள் பெருகிட



பயிர் இனங்கள் பசுமையுடன் செழித்தோங்க
போர் மேகம் களைய கார்மேகம் மழைபொழிய
வருகவருக வசந்தமென வரவேற்போம்

மண்ணில் புகுந்தும் மரப்பொந்துகளிலும் மறைந்து வாழ்ந்த
மர அணில்கள் வெளிவந்து மரத்துக்குமரம் தாவிப்பாய
பரந்த வானில் பறவைகள் பட்டாம்பூச்சிகள்
பறந்திட வருகவருக வசந்தமென வரவேற்போம்

சுவர்களுக்கிடையில் சிறைப்பட்டிருந்து வயோதிப நெஞ்சங்கள்
வெளியே வந்து வசதியாய் வீதியோரம் நடை பயில
சிறிதளவேனும் சினந்திடா வண்ணம் சில்னென வீசும்
தென்றலோடு வருக வருக வசந்தமென வரவேற்போம்

பாலை வனங்கள் போல் காய்ந்து போயிருந்த சோலைவனங்கள்
மடல்விரித்து மலர்கள் எல்லாம் பூத்துக்குலுங்க அங்கே
காளையர்கள் கன்னியர்களின் காதல் பூத்திட
வருகவருக வசந்தமென வரவேற்போம்



கவிநாதம் பரந்தாமன்

# மழலையின் இனிமை



பட்டு சிட்டு வண்ணாத்திபூச்சி
பறந்து எங்கும் மனதை கிள்ளி
தத்தி தத்தி நடை பயின்று
தடுமாறும் போதும் நெஞ்சம் தவிக்கும்
கொஞ்சம் மழலையில்
இனிக்கும் மொழியில்
இதயம் பறிபோகும்
காதில் மெல்லிசை பாடும்
புன்னகை தவழும் இதழுடன்
கள்ளம் அறியா சிரிப்புடன்
படபடக்கும் விழி கண்டு
பாப்பா உன்னைக் காண
மனம் மயங்குதே
பரவசத்துடன்
அள்ளி அணைக்க
மனம் ஏங்குதே
உன்னை வாழ்த்தி
மகிழுதே



மீரா குகன்
ஜேர்மனி

# வாழ்க்கைப் பயணங்கள் - 17

கொழும்பில் சுறுசுறுப்பான வாகன நடமாட்டம் பம்பலப்பிட்டி தொடர்மாடியில் வாழும் நடாவின் வீட்டில் எப்போதும் சத்தம் எழுப்பியபடியே இருப்பது வழமை. அதுவும் காலை நேரம் 7 மணியில் இருந்து 9 மணி வரையும் மாலையில் 4 மணியில் இருந்து 8 மணி வரையும் அதி கூடிய வாகன இரைச்சல் கேட்டபடி இருக்கும். வழமை போல காலைக் கடன்களை முடித்து நடைப்பயிற்சியும் முடித்து குளித்து விட்டுப் பத்திரிகைகளை வாசித்தபடி இருந்த நடாவை நோக்கி வந்த ராணி "அப்பா உங்களுக்கு கனடா போகப் பிடிக்குமா" என்று கேட்டபடி அருகில் வந்து அமர்ந்தார்.

"ஏனப்பா இப்படி கேட்கிறீர்? அமலாவுக்கு கிட்ட போகப்போறம். அதனால் வரும் மகிழ்ச்சிக்குப் பின்னால் கொழும்பு வாழ்க்கையில் உள்ள சுகம் அடிபட்டுப் போகும்தானே ராணி. உமக்கு போகப் பிடிக்கவில்லையே" என்றார் நடா.

"நான் இங்கை உங்களை மாதிரி வெளியிலை வெளிக்கிட்டுத் திரிகிறேனே. வீட்டுக்குள்ளே இருக்கும் எனக்கு எல்லாம் ஒன்றுதான். உங்களுக்கு கஸ்டமாய் இருக்கும் என்றுதான் எனக்கு யோசனை" என்று சமாளித்தார் ராணி.

"நாங்கள் அங்கை நிரந்தரமாய் இருக்கப் போகவில்லைத்தானே ராணி. நாங்கள் அங்கு போய் இருக்கும் காலத்தில் அமலாவுக்கு ஒரு நல்ல வாழ்க்கையை அமைத்துக் கொடுத்து விடவேண்டும். அதுமட்டும் நாங்கள் அவளுக்குப் பக்கத்தில் இருக்க வேண்டும். அமலா பாவம் தனிய சரியாய்க் கஸ்டப்படுகிறாள்" என்றார் நடா.

"விசா கெதியிலை வந்து விடுமா அப்பா. அமலா எங்களை கெதியிலை கூப்பிட்டு விடவேண்டும் என்று ஆசைப்படுகிறாள் போல கிடக்குது." என்று கேட்டார் ராணி.

"இந்த அலுவல்கள் நேரம் சொல்ல முடியாது. சில மாதங்களில் வந்துவிடும் என்று நினைக்கிறன். எதுக்கும் நாங்கள் இங்குள்ள வேலைகளை முடித்து விட்டால் விசா வந்ததும் வெளிக்கிடலாம்" என்றார் நடா.

"இன்னொரு கலியாணம் பேச அமலா சம்மதிப்பாளோ. நாங்கள் பேசி வைத்த கலியாணம் இப்படிப் போனபின்பு எந்த முகத்தோடு அவளைப் பார்த்து இன்னொரு கலியாணம் பேசுவது." என்று கவலையோடு கூறினாள் ராணி.

"அமலாவுடன் அவசரப்பட்டு ஒன்றும் கதைத்து விடவேண்டாம். நாங்கள் அங்கு போனபின்பு அதுகளைப் பற்றி யோசிப்பம்" என்று நடா சொல்ல ராணியும் "நீங்கள் சொல்வது சரி நான் கவனமாய் இருப்பேன்" என்று பதிலளித்தார் ராணி.

"திருமண முறிவுப் பத்திரங்கள் கிடைத்த பின்பு அமலாவின் பேச்சில் ஒரு மாற்றம் தெரியுது ராணி. மிகுதி எல்லாம் கடவுள் செயல்" என்று சொல்லி ராணிக்கு ஆறுதல் சொன்னார் நடா.

"சரியப்பா நான் பேசிக்கொண்டு இருந்து விட்டன். உங்களுக்கு காலைச் சாப்பாடு கொண்டு வாறேன்" என்று சொல்லி விட்டு சமையலறைக்குப் போக வெளிக்கிட "சரி கொண்டு வாரும். நான் ஒருக்கால் ராமகிருஸ்ண சபைக்குப் போய்விட்டு வாரேன். ஒரு நல்ல சொற்பொழிவு இருக்கு." என்று நடா சொல்ல "சரி சரி நான் கெதியாய் கொண்டு வாறேன். கனடாவுக்கு போனால் இந்தச் சொற்பொழிவுகள் கேட்காமல் கஸ்டப்படப் போகிறீர்கள் என்றுதான் கவலையாய் உள்ளது" என்று சொன்னவாறு சமையலறைக்குள் புகுந்தார் ராணி.

ராணி கவலைப்படுவா என்ற காரணத்தால் பிடிகொடுக்காமல் நடா கதைத்தாலும் கனடாவுக்குப் போகும் விடயத்தில் இருதலைக் கொள்ளியெறும்பு நிலையில் தான் நடா இருந்தார். பணியில் இருந்து ஓய்வுபெற்ற பின்பு தன்னை முழுமையாக ஆன்மீக விடயங்களில் ஈடுபடுத்திக் கொண்ட நடாவுக்கு கொழும்பில் பல்வேறு சேவைகளிலும், பிரார்த்தனைகளிலும் பங்குபற்றி வரும் நிலையில் இருந்து விடுபட்டு வெளிநாடு போகவேண்டிய நிலையை எண்ணிக் கவலையும், தனது பாச மகளுக்குப் பக்கத்தில் போய் இருக்கப் போகின்றோம் என்ற மகிழ்ச்சியும் மாறி மாறி அவர் மனதைப் போட்டுக் குழப்பிக் கொண்டுதான் இருந்தன.

நடா எவ்வளவு தூரம் சமாளிக்கப் பார்த்தாலும் அவர் மனநிலையை மோப்பம் பிடித்து விடும் ஆற்றல் ராணிக்கு இருக்கத்தான் செய்தது. நடாவின் நிலையை அறிந்துதான் ராணியும் இன்று நடாவுடன் பேசியிருக்கின்றார்.

*******

ராமகிருஸ்ண சபைக்குள் சென்று சொற்பொழிவைக் கேட்டுக் கொண்டிருந்த நடா தனது மனப்போராட்டத்தை ஒருபுறம் தள்ளி வைத்து விட்டு சொற்பொழிவில் கவனத்தைச் செலுத்தினார். அந்த நேரத்தில் சொற்பொழிவு நிறைந்த மனநிறைவைக் கொடுத்தது. சொற்பொழிவுக்கிடையில் அமலாவின் நிலைபற்றிய கவலையும் நடாவின் மனதில் சிற்றலைகளாக எழுந்தன.

இதில் 19 வயதும் அதற்கு உட்பட்டவர்களும் தமிழில் எழுதும் சொந்த ஆக்கங்கள் கதை, கட்டுரை, கவிதை எதுவாக இருந்தாலும் தரமானதாயின் பிரசுரிக்கப்படும்.

CUSTOM BUILD HOME
Build Your Personalized Custom Build Home
Starting From $139 / sq ft
Quality ! Price !! Peace of Mind !!!

உங்கள் கனவு இல்லத்தை நனவாக்குவதற்கு
அனுபவம் நிறைந்த, நாணயமான,
தரமான கட்டிட நிபுணர்கள்
Industrial Buildings from $85 / sq ft
TAMB CANADA (647) 877-8262 (TAMB)

# மறைந்து போகும் வீடியோக்கள்

அண்மையில் ரொரன்ரோ தமிழ் மக்களின் அடையாளமாகத் திகழ்ந்த மற்றொரு வீடியோக் கடை தனது கதவுகளை ஆனி மாதத்துடன் மூடிக்கொள்வதாக அறிவித்துள்ளது. 85களின் நடுப்பகுதியில் கனடாவிற்கு தமிழ் மக்கள் புலம் பெயர்ந்த பொழுது அதிகளவு தமிழர் ரொரன்ரோ மற்றும் மொன்றியல் நகரங்களில் வாழ்ந்து வந்தனர். அப்பொழுது அடுக்கு மாடிக் கட்டிடங்களில் வாழ்ந்து வந்த இளைஞர்கள் சிலர் வீடியோக்களை தங்களது அறைகளில் வைத்து விற்பனை செய்யத் தொடங்கினார்கள். அதன் தொடர்ச்சியாக 90களில் ரொரன்ரோ நகரின் பல பாகங்களிலும் வீடியோக் கடைகள் தோன்றின.

1975ல் மேற்கு ஜேர்மனியின் ஹசல் நகரில் முதல் வீடியோக் கடை ஆரம்பிக்கப்பட்டது. இதனைத் தொடர்ந்து 1977 மார்கழியில் லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில் வீடியோக் கடைகள் திறக்கப்பட்டன. 1985ன் நடுப்பகுதியில் பிரபல அங்காடிகள், சில்லறைக் கடைகள் உட்பட்ட பல அங்காடிகளில் வீடியோக்கள் வாடகைக்கு விடப்பட்டன. 1989ல் அமெரிக்காவில் எழுபதாயிரம் அங்காடிகளிலும், கனடாவில் 5,900 கடைகளிலும் வீடியோக்கள் வாடகைக்கு விற்கப்பட்டன. இக்காலகட்டத்தில் ஆரம்பிக்கப்பட்ட புளொக்பஸ்ரர் கடைத் தொகுதி 9,000 கடைகளைக் கொண்டிருந்தன. சுமார் 60,000 தொழிலாளர்கள் வேலை செய்தனர். ரொஜேர்ஸ் நிறுவனமும் சுமார் 500க்கு மேற்பட்ட கடைகளைக் கொண்டிருந்தன. இவற்றை விட பல தனியார் வீடியோக் கடைகளும் ஆரம்பிக்கப்பட்டன

கால மாற்றத்தை விட, தொழில்நுட்ப மாற்றம் வெகு விரைவாக மாறிக்கொண்டு வந்தது. அதன் மாற்றத்தில் டி.வி.டிக்கள் தோன்றின. இந்த மாற்றம் வீடியோக் கடைகளுக்கு பெரும் வருமானத்தை ஏற்படுத்தின. வி.டி.யோ வாடகையை விட டி.வி.டிக்களை பலர் சொந்தமாக வைத்திருக்க வாங்கியும் சென்றனர். இதனை வீட்டில் வைத்திருக்க அதிகளவு இடம் பிடிக்காது என்பது மற்றொரு காரணமாகவுமிருந்தது. தமிழைப் பொறுத்தவரை சினிமாப் பாடல்கள் அடங்கிய டி.வி.டிக்களுக்கு வருமானம் அதிகரித்திருந்தது. இந்த மாற்றம் பழைய, காணாமல் போயிருந்த பல படங்களை பார்க்கும் வாய்ப்பும் கிடைத்தது. அவ்வாறு பார்த்த சில படங்கள் பாலுமகேந்திராவின் சந்தியாராகம் மற்றும் அக்கிரஹாரத்தில் கழுதை, சில நேரங்களில் சில மனிதர்கள், ஒரு நடிகை நாடகம் பார்க்கின்றாள் போன்றன. ஈழத்து திரைப்படங்களான குத்துவிளக்கு, கோமாளிகள் போன்றனவற்றையும் பார்க்கக் கிடைத்தது. சத்யஜித்ரே போன்றோரின் படங்களை ஒரு டொலருக்கு டன்போர்த்தில் உள்ள ஒரு கடையில்




வாங்கக்கூடியதாகவிருந்தது.

அதேசமயம் ரொரன்ரோ பெரும்பாக நூலகங்களும் தம் பங்கிற்கு வி.டி.யோ மற்றும் டி.வி.டிக்களை மக்கள் வீட்டிற்கு கொண்டு சென்று பார்ப்பதற்கு அனுமதித்தது. இதற்காக எந்தவித கட்டணமும் அறவிடவில்லை. திருப்பிக் கொடுக்க காலதாமதமானால் அபராதம் ஒரு நாளைக்கு ஒன்று அல்லது இரண்டு டொலர்களாக அறவிட்டது. பல முக்கிய உலக சினிமாக்களை சீரிய சினிமா என்ற தனிப்பெயரிட்டது வோன் நூலகம். ரொரன்ரோ பெரும் பாகத்தில் இங்குதான் அதிக சிறந்த படங்கள் உள்ளன.

மற்றொரு தொழில்நுட்ப மாற்றம் நெட்பிலிக்ஸ் போன்றனவற்றின் வரவாக அமைந்தது. பலர் வீட்டில் உள்ள தங்களது தொலைக்காட்சிப் பெட்டிகளிலேயே திரைப் படங்களை எந்தநேரமும் பார்க்கக் கூடியதாக மாறி விட்டது. சற்றலைற் மற்றும் இணையத் தளங்கள், யுடியுப் போன்றனவற்றிலும் படங்களைப் பார்க்கும் மாற்றங்கள் ஏற்பட்டன. தமிழ்க் கடைகள் குறிப்பாக சீரியல்கள், படங்களையே நம்பியிருந்தன. இவையும் இணையத் தளங்களில் பார்க்கும் மாற்றம் நிகழ்ந்தது. ரொரன்ரோவில் மட்டும் சுமார் 8 தமிழ்நாட்டு தொலைக்காட்சி நிறுவனங்களின் ஒளிபரப்புக்களை ரொஜேர்ஸ், மற்றும் பெல் மூலம் பார்க்கலாம். இப்பொழுது பொக்ஸ் என அன்பாக அழைக்கப்படும் பெட்டிகளை அதி வேக இணையங்களுடன் இணைப்பதன் மூலம் சுமார் நூற்றுக்கு மேற்பட்ட நிறுவனங்களின் நிகழ்ச்சிகளை பார்க்கக் கூடியதாகவுள்ளது. இது சட்டத்துக்கு மாறானதாகவிருந்தும், அதனையே பலரும் நாடுகின்றனர். அதன் விளைவு பல வீடியோக் கடைகள் தங்களது கதவுகளை மூடிக் கொண்டன.

2011ல் புளொக்பஸ்ரர் கடைகளும் 2012ல் றொஜேர்ஸ் கடைகளும் பூட்டப்பட்டன. ஆனால் இன்று சில தனியார் வீடியோக் கடைகளில் வீடியோக்களை வாடகைக்கு பெறலாம். பெரும்பாலான இக் கடைகள் ரொரன்ரோ நகரின் மையத்திலேயே உள்ளன. 2017ம் ஆண்டளவில் ஒரு சில வீடியோக் கடைகளையே பார்க்க முடியும் என ஒரு ஆய்வாளர் சுட்டிக்காட்டியுள்ளார். தமிழ் வீடியோக்கடைகளைப் பொறுத்தவரை 2017ம் ஆண்டில் எல்லாமே மறைந்து விடுமென எதிர்பார்க்கலாம். ஒரு புதிய தொழில்நுட்பத்தின் வளர்ச்சியில் தோன்றிய வணிக நிறுவனங்கள் அது தோன்றி 40 வருடங்களிலேயே மறைவது சற்று அதிர்ச்சியானதே. ரொரன்ரோவின் பிரபல பத்திரிகை ஒன்று மிகவிரைவில் அழிந்து போகவுள்ள தொழிற்துறைகளை பட்டியலிட்டது. அதில் வருமான வரி கணக்காளர்கள் உட்பட பல துறைகளும் உள்ளடக்கப்பட்டுள்ளன. நிதி ஆய்வாளர்கள் போன்ற தொழிற்துறைகள் பிரகாசமானவையாக மிளிரும் எனவும் எதிர்வு கூறப்பட்டுள்ளது.

தமிழ் வீடியோக் கடைகளின் மறைவு, புலம்பெயர்வில் தமிழ் மக்களின் ஓர் அடையாள இழப்பாகவே காணக் கூடியதாகவுள்ளது. இது ஆரம்பம், இதன் தொடர்ச்சியினை வெகுவிரைவில் காணலாம். இப்பொழுதே நாம் இவ் அடையாளங்களின் முக்கியத்துவத்தையும், முக்கியமான வற்றையும் பதிவு செய்து வைப்போம்.



Math Tutorial322

Answers to tutorial 321

1)The value of $\frac{222\,222\,222\,222\,222}{222}=$ 1001001001001 .The number of digit in the quotient is 13

2)Since $\frac{1}{N(N+1)}=\frac{1}{N}-\frac{1}{N+1}$ then

$\frac{25}{72}+\frac{25}{90}+\cdots\frac{25}{9900}=$

$25[\frac{1}{8.9}+\frac{1}{9.10}+\frac{1}{10.11}+....\frac{1}{99.100}]$

=25[(1/8-1/9) +(1/9 -1/10)+(1/10-1/11)+....+(1/99-1/100)=25(1/8-1/100)]=25(1/8-1/100)=2.875

3)$t_1$=1000, $t_2$=1000(1.06), $t_3$=1000$(1.06)^2$, $t_n$=1000$(1.06)^{n-1}$, we want 1000$(1.06)^{n-1}$> 3000 or

$1.06^{n-1}$> 3 taking log on both sidesn-1> $\frac{log3}{log1.06}$ , n> 19.8

4)Circle one has centre(0,0) and circle two is $x^2+y^2-12x+6y+41$ =0or $(x-6)^2+(y+3)^2=4$, centre is (6 ,-3) and radius 2 The shortest distance between their centres is square root of $6^2+(-3)^2=3\sqrt{5}$, *so the least distance* = $3\sqrt{5}$- 5.

Questions tutorial 322

1)Mary buys gumballs at 4 for 15 cents and sells them at 3 for 15 centc .Find the number of gumballs Mary must sell to make a profit of$3.00(for gr 6&7)

2)Let $l_1: \frac{x+1}{4}=\frac{y}{-7}$=z-3

$L_2: \frac{x-5}{4}=\frac{y+6}{-7}$=z-3 ,$l_1$&$l_2$ are two parallel lines ,the plane A is perpendicular to $l_1$ and contains the point P(-1,0 ,3 ).Determine the equation of A in the form ax+by+cz +d =0 (for gr 12)

3)Given a line y=2x-1 & a curve $y=x^4+3x^2+2x$ ,find the minimum distance between the given line & the curve? (for gr12)

BY MR.S.F.Xavier(Teacher) tel 6473409490/4167322228 e

# வெளிச்சத்திற்கு வரும் வெளிச்சம்

## சுவாரசியமான அறிவியற் தகவல்களைக் கொண்ட தொடர்

இந்த உடனடித் தாக்கம் என்பது, நியூட்டன் கருதியபடி ஒளியானது துகள்களாக இருந்தால், அத்துகளிடையே ஈர்ப்பு விசை இருக்க வேண்டும். மேலும் இந்த உடனடித் தாக்கம் என்ற செயற்பாடுகளும் ஒளியின் ஒவ்வொரு துகளிலும் காணப்படவேண்டும். அப்படியாயின் ஒளித்துகள்கள் நேர்கோடிற் செல்ல முடியாதே! அப்படியாயின் எவ்விதம் அவை நேர்கோட்டிற் செல்கின்றன? பாரதூரமான கேள்விக்கு எளிதான பதில் கிடைத்தது. ஒளித்துகள்கள் மிகவும் சிற-ியன என்பதனால் ஈர்ப்புவிதியின் தாக்கம், அதாவது ஈர்ப்புவிசையின் பருமன் இல்லாதது போல் இருக்கும். அதனால்தான் ஒளி தொடர்ந்து நேரான பாதையில் செல்கிறது என்று கருதினார்கள்.

இன்னமும் கொஞ்சம் இறுக்கமாகச் சிந்தித்துக் பாருங்கள். கதிரவன், விண்மீன்கள் போன்ற திணிவு கூடிய பொருட்கள், ஒளித்துகளை, அவை தமக்கு அருகில் வருகையில் கவரலாம் அல்லவா. இந்த எண்ணம் பலருக்கு ஏற்படவில்லை. ஏன், நியூட்டனுக்கும் கூட ஏற்பட்டதாகத் தெரியவில்லை. அதனால் விண்மீன்களுக்கு அருகாக வருகிற ஒளிக்கதிர்கள் பற்றி யாரும் கரிசனை எடுக்கவில்லை என்றே கருத வேண்டியுள்ளது. அப்படிக் கருதி, ஒளியின் வளையும் வலிமை பற்றிக் கூறியவர்களினது கூற்றுக்கள் கூடப் பெரிதாக எடுபடவில்லை. ஆனால் 20ம் நூற்றாண்டில் அயன்ஸ்ரைன் இவ்விடயம் பற்றி அதிக கரிசனை எடுத்துக் கொண்டார். அவரது கணிப்புகள், பாரமான பொருட்களின் அருகில் ஒளிகதிர்கள் வருகையில் வளைவுறுகின்றன என்பதைக் காட்டின. பின்னர் அது சரியென நிறுவப்பட்டும் காட்டப்பட்டது. இவை பற்றிப் பின்னர் விளக்கமாகத் தெரிந்து கொள்ளுவோம். அதற்கு முன்னராக நியூட்டனின் கருது கோளில் இருந்து ஒளிபற்றிய சிந்தனை எவ்விதமாகப் புதிய வடிவம் எடுத்தது எனப் பார்ப்போம்.

ஒளி, துணிக்கைகளாகச் (துகள்கள்) செல்கின்றது என்ற நியூட்டனின் கருத்து எடுபட்டாலும் அதற்கான எந்தவொரு முழுமையான நிறுவலும் இல்லை. இந்தநிலையில் 19ம் நூற்றாண்டில் இந்தச் சிக்கலுக்கு முற்றுப்புள்ளி ஒன்றினை வைப்பது போல தோமஸ் யங் என்கிற பிரித்தானிய விஞ்ஞானி முக்கியமான ஒரு முடிவினைக் கொண்டு வந்தார், தனது பிர-பலமான 'இருதுளைப் பரிசோதனை' யின் ஊடாக அவரது அந்தப் பரிசோதனையையும் எங்கள் மட்டிற் தெரிந்து கொள்வோம்.






தோமஸ் யங்கின் பரிசோதனையையும், அதன் முடிவாகப் பெற்ற முடிவினையும் அறிந்து கொள்வதற்கு முன்னால் அவரைப் பற்றித் தெரிந்து கொள்வோம்.

முதலில் தோமஸ் யங் ஒரு இயற்பியல்வாதி அல்ல. உண்மையில் இவரொரு வைத்தியர் வைத்தியத் துறையில் இரண்டு சிறப்புப் பட்டங்கள் பெற்றவர். ஆனாலும் ஒரு நல்ல வைத்தியர் என்ற பெயரையோ, கைராசி யான வைத்தியர் என்ற பெயரையோ இவர்



தமது வாழ்நாளிலே பெற்றுக் கொண்டதில்லை. ஆனால் சிறந்ததொரு இயற்பியல் விஞ்ஞானியாக இந்நாட்களில் பாராட்டப்படுபவர். தன்னிடம் கண்சிகிச்சை பெற வந்தவர்களின் கண் குறைபாடுகள் பற்றி ஆராயத் தொடங்கியவர், இக்குறைபாடுகளைத் தீர்த்துக் கொள்வதற்கான வழி முறைகளைக் கண்டு பிடிப்பதற்காக ஒளியினைப் பற்றிய ஆராய்ச்சியில் அதிக கவனம் எடுக்கத் தொடங்கினார். இவருக்கு நியூட்டனின் முடிவுகள் பற்றி அவ்வளவு அக்கறை இருக்கவில்லை. இயற்பியல்வாதியாக இல்லாத 'யங்' ஒளிபற்றிய சர்ச்சைகளில் அதிக அக்கறை கொள்ளாது தன் வழியிலேயே ஆய்வுகளைச் செய்ய, அந்த அழகான முடிவு வந்தது. இனி அந்தப் பரிசோதனை பற்றித் தெரிந்து கொள்வோம்.

### இருதுளைப் பரிசோதனை

ஒருநிற ஒளிக் கதிர்ஒன்றினைத் தடுப்பு ஒன்றின் சிறிய துளையினூடாகச் செல்ல விட்டார். அந்தச் சிறிய துவாரத்தின் ஊடாக மட்டுமே தடுப்பின் மறு பக்கத்துக்கு ஒளி நேராகச் சென்றது. அடுத்து மறுபக்கத்தில் இன்னொரு தடுப்பினை வைத்தார். ஒளியின் ஒரு சிறிய பொட்டு அந்த இரண்டாவது தடுப்பில் விழுந்தது. இனி, அந்தச் சிறிய ஒருநிற ஒளிப் பொட்டு விழுகிற இடத்தில் இன்னமும் சிறியதான இரண்டு சிறிய துளைகளை அருகருகே இட்டார். மறுபக்கத்தில், அந்த இரண்டு துளைகளின் ஊடாகவும் வருகின்ற வெளிச்சங்களை ஒரு திரையில் விழுத்திப் பார்த்தார். அப்பொழுதுதான் அந்த அதிசயம் நடந்தது. நியூட்டன் கூறியபடியே ஒளி துகள்களாக செல்லின் திரையில் இரண்டு ஒளிப் பொட்டுக்கள் தோன்ற வேண்டும். அப்படித் தோன்றினால் ஒளி துகள்கள்தான் என்பதில் மறுபேச்சே இல்லை. ஆனால் திரையில் தோன்றிய வடிவம் வேறாக இருந்தது. இரண்டு ஒளிப் பொட்டுக்களுக்குப் பதிலாக, அழகாகப் பல ஒளிப் பட்டைகள் (கோடுகள்) மாறி மாறித் காணப்பட்டன.

இப்படியாக ஒளிக் கோடுகளை ஏற்படுத்தக் கூடிய தன்மையானது, அலைகளுக்கே உண்டு. இதனை ஐகன் அப்பொழுதே அலைகளுக்கான இயல்புகளாகக் காட்டியிருந்தார். ஒளியின் விடயத்தில் ஐகனால் அப்படிக் காட்ட முடியவில்லை. பல அலைகளின் மேற்பொருந்துகை என்கின்ற இயல்பில் ஆக்கும் தலையீடு என்கிற இயல்பும், அழிக்கும் தலையீடு என்கிற இயல்பும் மாறி மாறி ஏற்பட, ஆக்கும் தலையீடு உள்ள இடத்தில் வெளிச்சமான கோடுகள் தோன்றும். அழிக்கும் தலையீடுகள் உள்ள இடங்களில் வெளிச்சமில்லாத மங்கலான இருண்ட கோடுகள் தோன்றும். இவ்வகையான ஒளியின் தொழிற்பாடுதான் திரையில் வெளிச்சப் பட்டைகளை மாறி-மாறித் தோற்றுவித்தது என்றார் தோமஸ் யங். இரண்டாவது தடுப்பின் இரண்டு சிறிய துளைகளின் ஊடாக வருகின்ற ஒளிக் கற்றைகள், இரண்டு ஒளிமுதல்களில் இருந்து வருகிற ஒளியலைகளாகத் தொழிற்பட்டு ஆக்கும் தலையீடுகளையும், அழிக்கும் தலையீடுகளையும் மாறி மாறி உண்டாக்க இந்த ஒளிப்பட்டைகள் திரையில் தோன்றின என்ற விளக்கத்தை தோமஸ் யங் முன்வைத்து ஒளி அலை வடிவானது என்பதை நிறுவிக் காட்டினார். தோமஸ் யங்கின் உறுதியான இந்த அழகான பரிசோதனை முடிவால், நியூட்டனின் துகள் கொள்கையானது இருநூறு ஆண்டுகளின் பின்னராகக் கைவிடப்பட்டது.

> உங்களது கருத்துக்களை விளம்பரத்திற்கோ அல்லது எனக்கோ தெரிவிக்கலாம். எனது புதிய வெளியீடுகளாகிய புவியீர்ப்புப் பற்றிய வியப்பான விஷயங்கள், வியத்தகு விண் மீன்கள் ஆகிய நூல்களை விளம்பரம் காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

தோமஸ் யங்கின் இருதுளைப் பரிசோதனை உத்தியானது மிக அற்புதமானது. இயற்பியல் விஞ்ஞானிகளால் பெரிதும் விரும்பப்படுவது. இந்நாட்களில் உள்ள உயர் தொழில்நுட்ப வசதிகளுடன் பல நுணுக்கமான பரிசோதனைகள் செய்யப்பட்டுப் பல ஆச்சரியமான முடிவுகளைப் பெறுகின்றார்கள். இப்பரிசோதனையில், மிக அருகருகான, மிகச் சிறிய துளைகள் என்பதுதான் நுணுக்கமான விடயம். விஞ்ஞான மூளைகள் இவற்றினைப் பல உத்திகளைப் பாவித்து தனியொரு அணு, அதனிலும் சிறியதான இலத்திரன் போன்ற கண்களுக்குத் தெரியாத சிறிய துகள்கள் நுழைந்து செல்லக் கூடியதான துளைகளைக் கூடச் செய்து, பரிசோதனைகள் செய்கிறார்கள். குவாண்ரம் உலகினருக்கு இன்னமும் இந்த இருதுளைப் பரிசோதனை நல்ல உபயோகமான ஒன்றாகத் தான் இருக்கின்றது.

தோமஸ் யங் இயற்பியலில் பெரும் திருப்பத்தை ஏற்படுத்திய விஞ்ஞானிதான். ஆனால் இயல்பியலில் அவரொரு மருத்துவக் கலாநிதி. அதுவும் இரட்டை மருத்துவக் கலாநிதி. அதாவது மருத்துவத் துறையின் இரு பகுதிகளில் மருத்துவக் கலாநிதி பட்டம் பெற்றவர். மனிதர்களின் பார்வையில், நிறங்கள் தொடர்பான ஆய்வினைச் செய்து கொண்டிருந்த வேளையில் இப்படித்தான் இந்த இயற்பியல் விடயம் இவரிடம் சிக்கிக் கொண்டது. தோமஸ் யங் ஒரு சிறந்த மருத்துவராக மிளிராத போதிலும் இயற்பியலில் இன்றும் ஒளிர்விடும் விண்மீனாகத்தான் திகழ்கின்றார்.

மேலும் வரும்...


- கனி -
416.261.1348
leptons@hotmail.ca




# EDUCATION

## Review Questions16-10

### PHYSICS 12

The tires of a truck reduces its speed uniformly from 100km/h to 60km/h in 72 revolutions. How much more time is required for the truck to stop completely.
The diameter of the tires 1.2m.

### ADV. FUNCTIONS 12

Determine a translation that will transform the graph of $f_{(x)} = log_2 x$ on to the graph of $g_{(x)} = log_2 \frac{1}{8} x$

## Answer Key : 16-09

### CHEMISTRY 11

$Ca^{2+} + XO_3^{2-} \rightarrow CaXO_3$

$n\,(ca^{2+}) = 0.78 \times 0.025 = 0.0195$ mol

Assume that molar mass of $X = x$

Molar mass of the compound

$= (40.08 + x + 3 \times 15.99)$

Mass $= (88 + x)(0.0195) = 1.96;\ x = 12,$

X = carbon

### CALCULUS 12

(i)

$f(x) = \ln\left(\frac{x^2}{x^2+1}\right)$ at $x = 1$

*Ans : tangent line Y + ln 2 = 1(x -1)*

(II) Determine $\frac{d_x}{d_t}$, when $xy^2 = 32$

$y = 4$ *and* $\frac{d_y}{d_t} = 8$

*Ans:* Differentiating with respect to t, we get

$$1\frac{d_x}{d_t} y^2 + x.2y\frac{d_y}{d_t} = 0$$

$$xy^2 = 32;\ y = 4$$

$$x.4^2 = 32;\ x = 2$$

$$1\frac{d_x}{d_t} 4^2 + 2 \times 2 \times 4 \times 8 = 0$$

$$\frac{d_x}{d_t} = -8$$

(ii)




$x^2 + y^2 = 5^2$

Differentiate $2x\frac{d_x}{d_t} + 2y\frac{d_y}{d_t} = 0$

$$\frac{d_x}{d_t} = \frac{-y\,d_y}{x\,d_t}$$

*when* $y = 4,$

$x^2 + 4^2 = 5^2$

$x = 3m \quad \frac{d_y}{d_t} = -1\ m/s$

$$\frac{d_x}{d_t} = \frac{-4.(-1)}{3} = \frac{4}{3} m/s$$

### BIOLOGY 12

- Cancer cells rapidly dividing and abnormally reproducing.
- Cell division occurs followed by DNA replication.
- Chemical analogues that mimic the structure of nucleotides will prevent DNA polymerase and therefore the DNA replication will be prevented.
- Thus cancer cells won't be able to reproduce/ further division.

### PHYSICS 11

A window washer pulls himself upwards..




(i) $\sum F_y = F_T + F_T - F_g = ma$

$2F_T - F_g = 0$

$$F_T = \frac{F_g}{2} = \frac{72 \times 9.8}{2} N$$

$F_T = 350N$

$2F_T - F_g = ma$

$$F_T = \frac{ma + F_g}{2}$$

$$F_T = \frac{72 \times 1 + 72 \times 9.8}{2}$$

Answer key
16-10 - next issue
☎ 647 341 3975
Dr. K.A. Srikrishnaraj

KEEN TUTORING CENTRE




Ajax | Markham | Scarborough

Classes in Various Genres:

Bharathanatyam
Bollywood
Gaana

irudaya DANCE COMPANY

"NATTIYAKALAMANI"

Nivatha Moothathamby
Keerthana Arulanandarajah

- Arangetra Students of Sri Vasu Sinnarasa (Director of Sathangai Narthanalayam)
- Graduates of Annamalai University Canada Campus
- University Dance Team Choreographers
- Performed on numerous platforms in Ontario



For further questions please contact us at:
(647) 967-1994    (416) 319-0164

Are you interested in buying an investment property?



You know, You can have one + one






How Much? Don't Ask....    Call me

Ragu

416-450-6833



# ஒவ்வாமை என்கின்ற அலர்ஜி




அலர்ஜி எனப்படும் ஒவ்வாமை ஒரு நோயோ இல்லையோ, பல நோய்களுக்கு அதுவே காரணமாகி விடுகிறது. நீங்கள் பார்த்திருப்பீர்கள், ஒரு நாளுக்குள் குறைந்தது நூறு தும்மல் போடுகிறவரை, கண்ணில் இருந்து நீர் ஒழுகும், மண்டை ஒரேடியாய்க் கனத்துப் போகும், அவருடைய பிரச்சனை என்ன? பூவின் மகரந்தத் தூள்கள் காற்றில் பறந்து வந்து மூச்சு வழியாய் உள்ளே போய்விட்டிருக்கும். அக்காலம் அவருக்கு நரக வேதனைதான்.

சிலருக்கு ஆண்டு முழுதும் பிரச்சனை. மகரந்தத் தூள் மாதிரி ஒரு சிறிய பூச்சியின் ஒரு சிறிய துகள், உணவு, மருந்து, ரசாயனப் பொருள், இறால், மீனின் ருசி, சாதாரண தூசு என்று பல உருவங்களில் ஒவ்வாமை அவர்களைத் தாக்கி விட்டிருக்கும். மூச்சுத் திணறல் மனிதரை உலுக்கி எடுத்துவிடும்.

பெற்றோரில் ஒருவருக்கு ஒவ்வாமை இருந்தால் அவரது குழந்தைகளில் ஒருவருக்கு ஒவ்வாமை வர வாய்ப்பிருக்கிறது. பெற்றோர் இருவருக்கும் ஒவ்வாமை இருந்தால் ஒன்றுக்கு மேற்பட்ட பிள்ளைகளுக்கு ஒவ்வாமை வரும்.

## ஒவ்வாமை என்பது என்ன?

உடலுக்கு ஒத்துப் போகும் சில பொருட்கள் திடீரென்று ஒத்துப் போகாமல் போவது அலர்ஜி. தேவையில்லாத நேரத்தில் நோய் எதிர்ப்பு சக்தி வேலை செய்வதால் ஒவ்வாமை உண்டாகிறது.

மூக்கு அலர்ஜி – ஓயாத தும்மல்.

நுரையீரல் அலர்ஜி – ஆஸ்துமா இவற்றுடன் உணவுப் பொருட்களில் (பால் மீன் முட்டை கோதுமை) அலர்ஜி, மருந்துகளில் (ஊசி, மாத்திரை) அலர்ஜி, கண் காது அலர்ஜி என பல வகைகள். சிலருக்கு காற்றிலும் அலர்ஜி.

காரணிகள் : தூசுப் பூச்சி : இதுவே அலர்ஜிக்கு பிரதான காரணம். தூசுவில் வாழும் இந்த உயிரி காற்றில் கலந்து நம் வீடுகளைத் தாக்கும். மிகவும் ஆபத்தானது.

பூச்சிகள் : பூச்சிகளின் உடல் உறுப்புகளும், கழிவுகளும் காற்றில் மிதந்து நம் மூச்சுக்குள் போகும்.

பூஞ்சை காளான் : பயிர், புல், உணவு, தோல் பொருட்கள், தளபாடங்களில் உள்ளன.

உமி : காற்றில் அடித்து வரப்படும் உமி பலவித ஒவ்வாமையை ஏற்படுத்தும். தும்மல், ஜலதோஷம் சமயத்தில் பிரச்சனை தீவிரமாக இருக்கும்.

உணவு : அரிசி, பருப்புகள், மீன், தேங்காய், சோயா.

அறிகுறிகள் : தலைவலி, மூக்கில் இருந்து நீர் ஒழுகல், வாந்தி மயக்கம், சிலருக்கு உடல் சில்லிட்டுப்போகும், தூக்கமின்மை, படுக்கையில் சிறுநீர் கழித்தல், தலைவலி, நெஞ்சு வலி, படபடப்பு, எப்போதும் பரபரப்புடன் காணப்படுதல், பிறப்புறுப்புகளில் நமைச்சல்.




சிகிச்சை

முதலில் அலர்ஜிக்கான மூல காரணம் எது எது என்று இனம் காண வேண்டும். அடுத்து எது காரணமானதோ அதைத் தவிர்க்க வேண்டும். மூன்றாவதாக உடல் நலத்தை எதிர்ப்புச் சக்தியை மேம்படுத்திக் கொள்வது. ஐயத்துக்குரிய உணவுப் பொருட்களை இரண்டு வாரத்துக்கு ஒதுக்கி விடுவதன் மூலம் காரணத்தைக் கண்டுபிடிக்க முடியும். நாடித்துடிப்பு சோதனையும் உதவும். உண்பதற்கு முன் நாடித் துடிப்பைச் சோதிக்க வேண்டும். சாப்பாட்டில் ஒரு உணவு மட்டுமே இடம் பெறச் செய்யவும். உண்ட பிறகு அரை மணி நேரம் கழித்து மீண்டும் நாடித்துடிப்பைச் சோதிக்கவும். ஓரளவு எகிறியிருந்தால் அது இயல்பு என்று இருந்துவிடலாம். 16 கூடுதல் துடிப்புகள் வரை இயல்பு தான். நாடித்துடிப்புகள் 84 ஐக் கடந்து விட்டிருப்பின் உண்டு கழிந்து ஒரு மணி நேரமும் அதே அளவு இருப்பின் உங்களுக்கு ஒவ்வாமை இருக்கிறதென்று தீர்மானிக்கலாம்.

அலர்ஜியைத் தடுக்கவும், முறியடிக்கவும் சிறந்த வழி, எதிர்ப்புச் சக்தியை வளர்த்துக் கொள்வதுதான். அப்போது எந்தக் காரணி பற்றியும் கவலைப்பட வேண்டியிராது. சிகிச்சையின் தொடக்கத்தில் நான்கைந்து நாட்கள் பழச்சாறு மட்டுமே பருகி உபசாவம் இருக்க வேண்டும். அதன் பிறகு ஒற்றை உணவு கொள்ளலாம். ஏதாவது ஒரு பழம் அல்லது காய்கறி, கேரட், திராட்சை, ஆப்பிள். இது ஒரு வாரத்துக்குத் தொடரப்பட வேண்டிய திட்டம். பிறகு, இன்னொரு அயிட்டத்தைச் சேர்க்க வேண்டும். நான்கு வாரங்களுக்குப் பிறகு புரத உணவை அறிமுகப்படுத்தலாம். புதிதாய்ச் சேர்த்த உணவு ஒவ்வாமையை ஏற்படுத்தியதாய் தெரிந்தால் அதை நிறுத்தி விட்டு, புதிய உணவு ஒன்றை முயற்சிக்கலாம். இப்படியாக அலர்ஜி ஏற்படுத்தும் எல்லா பொருட்களையும் உணவில் இருந்து அகற்றி விடலாம்.

உடம்பில் காரப் பொருள் சேமிப்பில் இருக்க வேண்டும். தவறான உணவுகள் களைப்பு, மன அழுத்தம், உறக்கமின்மை காரணமாய் ஏற்படும் அமில நெருக்கடியை அது சமாளிக்கும். உணவில் தவிர்க்கப்பட வேண்டியவை காபி, டீ, சாக்லெட், கோலா பானங்கள், மது, சர்க்கரை, இனிப்புகள், இறைச்சி, மீன், கோழி, பால், புகையூட்டியவை, உப்புள்ளவை, ஊறுகாய்கள், நிறமூட்டிய, சுவையூட்டிய உணவு, புகையிலையை எந்த வடிவிலும் பயன்படுத்தக் கூடாது. இவை நச்சுப் பொருட்கள் சேரவோ, அட்ரினல் சுரப்பு தூண்டப்படவோ காரணமாகிவிடுகின்றன. அல்லது கணைய நீர் உற்பத்தியில் சிரமத்தை ஏற்படுத்தி விடும். இரத்த சர்க்கரை அளவு சீர்கெடவும் நேரும்.

வைட்டமின் சி உடம்புக்கு தேவையான எதிர்ப்புச் சக்தியை வழங்கும். பி5 அலர்ஜியில் அவதிப்படுகிறவர்களுக்கு நிவாரணமளிக்கும். அலர்ஜிக்கு எதிரான தன்மைகள் கொண்ட வைட்டமின் E சத்தையும் போதிய அளவு உட்கொள்ளலாம். ஆமணக்கு எண்ணெயில் ஐந்து சொட்டுகள் எடுத்து சிறிதளவு பழச்சாறு அல்லது தண்ணீர் கலந்து காலையில் வெறும் வயிற்றில் பருகுவது சிறந்த பலனை அளிக்கும். மன உளைச்சல் காரணமாக அலர்ஜி ஏற்பட்டிருப்பின் இளைப்பாறுதல், உடற்பயிற்சி, தியானம், மனக் கட்டுப்பாடு உதவும். யோகாசனங்களில் யோக முத்திரை, அர்த்தமத்ஸ்யேந்திராசனா, சர்வாங்காசனா, சவாசனா, ப்ராணயாமம் பலனளிக்கும்.

கவனத்திற்கு

**- சி.எஸ். தேவநாதன் -**

ஒருவருக்கு இன்ன பொருள்தான் என்றில்லாமல் எந்தப் பொருள் வேண்டுமானாலும் ஒவ்வாமையை ஏற்படுத்தலாம். ஒருவர் தனக்கு ஒவ்வாமை ஏற்படுத்தும் பொருளைக் கண்டிப்பாக தவிர்க்க வேண்டும். அந்த முன்னெச்சரிக்கை நடவடிக்கை அவருக்கு அலர்ஜி, ஆஸ்துமா, இழுப்பு வராமல் தடுத்து உதவும்.

குடும்பத்தில் ஏற்கனவே ஒருவர் அலர்ஜியில் பாதிக்கப்பட்டிருந்தால், அந்தக் குடும்பத்தின் மற்ற உறுப்பினர்கள் அலர்ஜி பற்றி மிகவும் எச்சரிக்கையாக இருப்பது நல்லது. ஆனால் ஒருவருக்கு ஒவ்வாதது இன்னொருவருக்கும் ஒவ்வாமல் போய்விடும் என்பதில்லை. எனவே அவர்கள் வீண் கவலைக்குள்ளாக வேண்டாம்.

குழந்தைகளுக்கு பஞ்சடைத்த பொம்மைகளை விளையாடக் கொடுக்கக் கூடாது. கூடிய வரை ஐஸ்கிரீம், சாக்லெட் உண்ண அனுமதிக்கக் கூடாது. வீட்டில் உள்ள நாய், பூனை, முயல் போன்ற செல்லப் பிராணிகளுடன் விளையாடுவதை அறவே தவிர்க்க வேண்டும். படுக்கை அறை சுத்தமாக, நிரம்ப சாமான்கள் இல்லாததாய் இருக்க வேண்டும்.

எண்ணெயில் பொரித்த மசாலா உணவுகள் கூடாது. வயிறு முட்டச் சாப்பிடுவது தவறு. இரவு உணவை எளிமையாக, நேரத்தோடு முடித்துக் கொள்ள வெண்டும். பலமான விருந்துகளில் கட்டுப்பாடாக உண்ண வேண்டும். இரவில் பால் சாப்பிடுவதைத் தவிர்த்து விடலாம்.

யோகாசனம், தியானம், மன அடக்கம், மூச்சுப் பயிற்சிகள் மூலம் உதர விதானத்துக்கு வேலை கொடுத்து மார்புத் தசைகளுக்கு ஓய்வளிக்கலாம்.

மேற்கண்டவைகளைக் கவனமாகக் கடைப்பிடித்தால், அதுவே ஒவ்வாமையில் தடுப்பு நடவடிக்கைகளாய் அமையும்.

கனேடியச் செய்திகளுக்கான
முதன்மைத் தளம்
தமிழ்வணக்கம்.கொம்
www.tamilvanakkam.com

நகைச்சுவைத் தொடர் 333

# ராசம்மா ராச்சியம்

கலகலப்பு தீசன்



தமிழக தேர்தல், சர்வதேச விளையாட்டுப் போட்டி நடப்பதை எத்தனைபேர் ஆர்வமாக லீவு போட்டு பார்ப்பதுபோல் அரசியல் ஆர்வலர்கள் தமிழக தேர்தல் செய்திகளை எல்லா ஊடகங்களிலும் மாறி மாறி ரசித்துக் கொண்டிருந்தனர்.
ஐ பொட் அகிலா உலகர் வீட்டில் மாறி மாறி ஐ பொட் சார்ஜ் செய்து இலவச செய்திகளை உலகர் குழாமுக்கு நேரடி அஞ்சல் செய்துகொண்டிருந்தா.



தமிழக தேர்தல் 234 தொகுதிகள். சினிமா தொடர்புடைய 3 பேர் முதல்வருக்காக போட்டியிடுகின்றனர். 16ம் திகதி வாக்களிப்பு ஆரம்பம். 19ம் திகதி முடிவுகள்.



வீட்டுக்கு வீடு, வீதிக்கு வீதி, கிராமத்துக்கு கிராமம், மாவட்டத்திற்கு மாவட்டம் கோடிக்கணக்கான (பதுக்கப்பட்ட அடாவடியாக சேர்க்கப்பட்ட) பணம் மீண்டும் மக்களுக்கு இரவுபகலாக விநியோகிக்கப்படுகிறது. தேர்தல் ஆணையம், லஞ்ச ஒழிப்பு பிரிவு பொலிசார், ரகசியப் பொலீசார், பொதுமக்கள் பண விநியோகத்தைப் பிடிப்பதற்கு பலவித முயற்சிகள் எடுத்த வண்ணமுள்ளனர். ஆளையாள் மாற்றி வசை பாடுவதும் விட்டபிழை விடாத பிழைகளை மைக் போட்டு சொல்வது கட்சிக்கொள்கைகள் ஆகிவிட்டன.

இஞ்சை ஜெயலலிதா புது தெறி சாறி உடுத்திருக்கிறா என்றா செக்கண்ட் புளோர் செல்லம்மா. (புதுப்படங்கள் வரும்போது அதன் பெயரில் சாறி வருவது வழக்கம்)



மின்சாரத்தை துண்டித்துவிட்டு கருணாநிதி ஸ்ராலின் தொண்டர்கள் பணம் விநியோகிக்கின்றனர் - அதிரடிச்செய்தி.

“என்னதான் நடக்கும் நடக்கட்டுமே...இருட்டினில் நீதி...மறையட்டுமே தன்னாலே வெளிவரும் தயங்காதே..” பணத்தோட்டம் படத்தில் எம்.ஜி.ஆர் பாடும் பாடல் உலகர் காதுக்குள் ரீங்காரமிட்டது.



இன்னும் சில மணித்தியாலங்கள்தான் யார் வெல்லுவினமோ பாப்பம் பாப்பம் என பெருமூச்சு விட்டா ஆட்டிலறி அன்னம்மா.

ஆர் வந்தாலும் மதுக்கடையெல்லாம் இல்லாமல் செய்வதாகச் சொல்லியிருக்கினம். பாவம் பெரும் குடி...மக்கள்
“நல்லாரைக் காண்பதுவும் நன்றே நலமிக்க நல்லார் சொல் கேட்பதுவும் நன்றே”
பாடசாலைகளில் அறிஞர்கள், பெரியோர்களின் மேடைப்பேச்சு, பொன்மொழிகளை சொல்லி உதாரணம் காட்டி கல்வி புகட்டினர்.
பலமே வாழ்வு. பலவீனமே மரணம் - விவேகானந்தர்.

கிழட்டு முட்டாள் ராஜாவாய் இருப்பதைவிட புத்திசாலியான ஏழைக்குழந்தையாய் இருப்பது சிறந்தது - யேசுநாதர்

நீ வெற்றிபெற்றால் பிறருக்கு நின்றுகொண்டு விளக்கத்தேவையில்லை. நீ தோற்றால் அங்குநின்று உன் தோல்விக்கான காரணங்களை விளக்கிக் கொண்டிருக்கக் கூடாது.
- ஹிட்லர்



ஆனால் இன்று
இலங்கை நாடாளுமன்றத்தில் அடி பிடி. நாடாளுமன்றப்பிரதிநிதிகள் தற்காலிக இடைநிறுத்தம். சகிக்க முடியாத வார்த்தைப்பிரயோகம்.
தற்பொழுது உகண்டா ஜனாதிபதியின் பதவியேற்பு வைபவத்திற்கு சென்றிருக்கும் முன்னாள் ஜனாதிபதி (பின்னால் பல குற்றச்சாட்டை எதிர்நோக்கியிருக்கும்) ராஜபக்ச ஏனைய மந்திரிகள் கைது செய்யப்படுவதும் சிறையில் இருப்பதும் சர்வசாதாரணம் ஆகிவிட்டது.

பாடசாலை சுற்றாடலில் போதை வஸ்து விற்பனை, வாள்வெட்டு கும்பல். சட்டம் என்ன செய்யமுடியும்?

காணி நிலம் வேண்டும் பராசக்தி, காணிநிலம் வேண்டும்.

நீதி தேடும் நிதிப்பிரிவு முன்னாள் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பசில் ராஜபக்ச 4 மாடிக்கட்டடம் கட்ட வாங்கிய (அபகரித்த) காணியின் பத்திரங்களின் கையொப்பங்கள் முரண்பாடு காரணமாக கைது செய்யப்பட்டு நிபந்தனையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார். (மாடிமேலே மாடி கட்டி கேடி....(மன்னிக்கவும்) கோடி கோடி சேர்த்து வைத்த சீமானே - காதலிக்க நேரமில்லை )

அல்பேட்டாவில் போட் மக்முறே பகுதியில் ஏற்பட்ட காட்டுத்தீ கணக்கிட முடியாத நிலப்பரப்பு, பச்சைப்பசேல் என்றிருந்த மரங்கள், வீடுகள் சாம்பலாகின. எத்தினை தீயணைக்கும் படை வாகனங்கள் படையினர் ஹெலிகொப்டர் ஏனைய உதவும் பிரிவினர். என்னமாதிரி இருந்த இடம் எப்பிடிக்கிடக்கு பாருங்கோ என பேப்பரைக் காட்டினா ஆட்டிலறி அன்னம்மா. எத்தனை கோடி டொலர் பெறுமதியான சொத்துக்கள் நட்டமாம் என்றா செக்கண்ட்புளோர் செல்லம்மா. எரிகிற வீட்டில் பிடுங்கியது லாபம் என்பது போல அந்த இடத்திலும் களவு செய்கிறது ஒரு கூட்டம்.



எந்த வெளிநாட்டு உதவியும் தேவையில்லையென கூறிவிட்டார் பிரதமர் ரூடோ. உதவுவதாக கூறி பல உலகநாடுகள் அந்த நாட்டு ரகசியங்களை அறிந்து தமக்கு தகவல் சேகரிப்பதில் கவனம் எடுக்கின்றனர் என உலகர் முருகேசருடன் கதைத்தபோது உலகண்ணை எங்கடையாக்கள் முந்தியே சொல்லி வைச்சவை
“பிச்சை வேண்டாம் நாயைப்பிடி”
உதவியும் வேண்டாம் உபத்திரவமும் வேண்டாம் எனும் நிலைதான்.



இலங்கைக்கு உணவுப் பொதியைத் தந்த இந்தியப்படைதான் முள்ளிவாய்க்கால்வரை தமிழர் உயிருக்கு முழுக்குப் போட்டது. அதை நினைத்துத்தான் மற்றவர்களின் உதவி வேண்டாம் என உதறி விட்டாரோ?

அன்னம்மாக்கா உலகண்ணை எல்லா கோவிலுக்கும் போறவர். தேர் இழுக்க தான் அமளி துமளியாக தேங்காய் அடிக்கிறவர். ஆனால் இனி கவனமாக இருக்கவேணும் என்று சொல்லி முடிக்கமுன் ஐ பொட் அகிலா... தனது ஐ..பொட்டை தனது விரல் வித்தையால மாறி மாறி அடித்து ஓ..யேஸ் தேங்காய்க்குள் இளனி, தேங்காய் சொட்டு (தேங்காய்ப்பூ) இருக்கும். ஆனால் கனேடிய அமெரிக்க எல்லையில் தேங்காய்க்குள் கஞ்சா கடத்தியவர்களை சுங்க அதிகாரிகள் கண்டு பிடித்துள்ளனர்.

தமிழ்நாட்டிலை காசு கடத்தல், அமெரிக்காவிலை (தேங்காய்க்குள்ளை) கஞ்சா கடத்தல்.
பருத்தி (பஞ்சு) வளர்த்தவன் பசியில் வாடுகிறான்.
கஞ்சா வித்தவன் காசுடன் வாழுகிறான்.
“பாதை மாறும் போதை வேண்டாம் பண்பைக்காப்போம் கலகலப்பு.”

வியாபாரத்திற்கு அழகு விளம்பரம் செய்தல். ஆனால் விசித்திர விளம்பரங்கள் எத்தனை?

கடந்தவாரம் சர்ச்சைக்குரிய வீதி விளம்பரம் ‘ரெக்ஸ் அன்ட் ட்றைவ்’ என ஒரு மரணச்சடங்குகள் நடத்தும் நிறுவனம் விளம்பரம் செய்திருக்கிறது.
(கடந்தவருடம் இந்தவருடம் நடைபெற்ற வீதி விபத்துக்கள் காயப்பட்டோர் இறந்தோரின் எண்ணிக்கையில் செல்போன் பாவனை முக்கிய காரணியாக உள்ளது.)

மே..15..31




18 போர்க் குற்றநாள் (2009)

20. றிச்மண்ட் ஹில் பிள்ளையார் தேர்

20. டைரக்ரர் பாலு மகேந்திரா பிறந்தநாள் (1934…2014)



22. 1958…இலங்கையில் இனக்கலவரம். சிங்களக் காடையர்களால் (அரச உதவியுடன்) பல தமிழர்கள் கொல்லப்பட்டு, சொத்துக்கள் உடைமைகள் தீக்கிரையாக்கப்பட்டன.

22. சிலோன் 1972 ‘ஸ்ரீ லங்கா’ எனப்பெயர் மாற்றப்பட்டு குடியரசென பிரகடனப்படுத்தியது.

23. ‘விக்ரோறியா டே’ விடுமுறை நாள்.




25. நவாலியூர் சோமசுந்தரப்புலவர் பிறந்தநாள். (1878−1953)

25. ஆத்மஜோதி நா.முத்தையா நினைவுதினம். (1918−1995)



25. சர்வதேச காணாமல் போன குழந்தைகள் தினம்.

26. 1958 கொழும்பில் இனக்கலவரம். வீடுகள் தீக்கிரை, சொத்துகள் சூறையாடப்பட்டதுடன், பலர் கொல்லப்பட்டனர்

31. 1981 மே யாழ்ப்பாணம் பொது நூலகம் பொலீசாரால் அரச உதவியுடன் எரியூட்டப்பட்ட நாள்.

31. புகையிலை எதிர்ப்பு நாள்.








## யோகா சோதிடம்

• கிரகப்பொருத்தம் பார்த்தல் • சுபமுகூர்த்தம் கணித்தல்

• பலன் பார்த்தல் னூாசத ைசஹாச தஓ யஓழ

ஙஓதஹ ஒன யஓழர அனனவைாரசஅரய.• சாதகக் குறிப்புக் கணித்தல்

# எங்களுக்கு அமைதி தேவை

## We Need Peace

"அமைதிக்கு எங்களின் தேவை இல்லாது இருக்கலாம்" ஆனால் எங்களுக்கு அமைதி தேவையென சர்வதேசரீதியில் அமைதியின் தூதுவர் எனப் புகழ்பெற்ற பிறேம் றாவத் அவர்கள் கூறுகின்றார். எப்பொழுது அமைதி எங்களின் உள்ளத்தில் நடனமாடுகின்றதோ அப்பொழுது நாம் அழகானவர்களாவோம்".

இந்தியாவில் பிறந்த, பிறேம் றாவத் தனது பதின்மவயது காலத்தில் இருந்தே உலகெங்கும் பிரயாணம் செய்து மக்களிடம், "நல்லதொரு வாழ்வை வாழவே எல்லோரும் விரும்புகின்றார்கள், அமைதி ஒரு விருப்பத் தெரிவல்ல, அது ஒரு அடிப்படையான முக்கிய விடயம்," எனக் கூறுகின்றார். அத்துடன் அந்த அடிப்படை விடயம் அங்கு இல்லாவிட்டால், அப்போது எமது வாழ்வில் நாம் எதைச் செய்தாலும் அது சிரிப்பிற்கிடமானதாக இருக்கலாம். உங்களிடம் அழகாகச் செதுக்கப்பட்ட கிற்றார் ஒன்று, முத்துக்கள் பதிக்கப்பட்டு, சுருதி கூட்டுவதற்காக தங்க திருகிகளைக் கொண்டு, மிகச் சிறந்த மரத்தினால் செய்யப்பட்டதாக இருந்தும் அதில் தந்திகள் இல்லாவிட்டால் எப்படி இருக்கும்? என்று கற்பனை செய்து பாருங்கள். இந்த கிற்றாரினால் உங்களால் என்ன செய்ய முடியும்? மேளம் அடிப்பது போல் அதை அடிக்கலாம், அதைக்கொண்டு ஒருவரின் தலையில் அடிக்கலாம், அதை ஒரு மேசைபோல் உபயோகப் படுத்தலாம். அது மென்மையானதாக இல்லாவிடில் நீங்கள் அதன்மேல் அமரலாம். அடிப்படையில் உங்களால் என்ன செய்ய விருப்பமோ அதை இக்கிற்றாரில் செய்யலாம். ஒரே ஒரு விடயத்தைத் தவிர. அதை இசைக்க முடியாது. அதில் தந்திகள் இல்லாவிட்டால், அந்த ஒரே ஒரு விடயத்தைத்தான் உங்களால் செய்ய முடியாது. உங்களால் எல்லா விடயங்களையும் செய்யமுடியும், ஆனால் அவையெல்லாவற்றிற்குமாக இந்தக் கிற்றார் உருவாக்கப்படவில்லை. அது இசைப்பதற்காக மட்டுமே உருவாக்கப் பட்டுள்ளது.

அதேபோலவே, "அமைதி இன்றி, எமக்கு எவையெல்லாவற்றையும் செய்ய விருப்பமோ அவையெல்லாவற்றையும் செய்யலாம், ஆனால் அதற்காகவா நாம் படைக்கப் பட்டுள்ளோம். அதற்காகவா நாம் இங்கிருக்கின்றோம். அமைதியை அனுபவிப் பது எங்கள் அடிப்படை தேவையில்லையா? அந்த அமைதியை அனுபவிப்பதற்கான வழியொன்றைப் பற்றி – ஒரு தடவை அல்ல ஆனால் ஒவ்வொருநாளும் அனுபவிப்பது பற்றி திரு. றாவத் பேசுகின்றார். ஒவ்வொருவரும் தேடும் அமைதியானது எமக்குள்ளேதான் இருக்கின்றதென்றும், அதற்காக யார் தாகமாக இருக்கின்றார் களோ அவர்களை அக்கிணற்றிற்கு தன்னால் அழைத்துச் செல்ல முடியு மென்றும் அவர் கூறுகின்றார்.

அந்தப் பிரயாணம் எப்படி ஆரம்பிக்கும்.? "உங்கள் உள்ளத்தின் ஆழத்தில் இருந்து அதை விரும்புவது, நிறைவடைவதற்கு விரும்புவது, அத்துடன் அறிந்து கொள்வதற்கு, நிச்சயமற்ற முறையில் அல்ல, உங்கள் அந்த விருப்பம் நிறை வேற்றப்படும். ஞானத்தை விரும்புங்கள், நீங்கள் தேடும் அந்த ஞானம் உங்கள் உள்ளேயே உள்ளது என்பதை அறிந்து கொள்ளுங்கள் என அவர் கூறுகின்றார்.

ஒரு வழியில் நான் உங்களுக்குச் சொல்லுவதெல்லாம்: தயவுசெய்து உங்கள் கிற்றாருக்கு தந்திகளைப் பூட்டுங்கள்." திரு. றாவத் அவர்கள் பொது நிகழ்ச்சிகளின் போது அவர் வழங்கும் அமைதியின் அனுபவம் பற்றிய வினாக்களுக்கு அடிக்கடி விடையளிப்பதுண்டு.

கேள்வி. : அமைதியைக் காண வேண்டு மானால் இந்த உலகைத் துறக்கவேண்டும் என்று பலர் கூறுகின்றார்கள், அத்துடன் என்னைப் பொறுத்தவரை இந்த உலகில் எவ்வளவோ அழகான விடயங்கள் உள்ளன. இம் முரண்பாடுபற்றி உங்களால் என்ன கூறமுடியும்?

பிரேம் றாவத்: நாம் எல்லோரும் அழகை விரும்புகின்றோம். நீங்கள் ஒரு ரோஜாவை அழகானதாகக் காணலாம். நீங்கள் உண்மையிலேயே அந்த ரோஜாப் பூ உங்களைக் கவரத் தெண்டிப்பதாக எண்ணுகின்றீர்களா? அந்த ரோஜாப் பூவிற்கு உங்களைத் தேவையில்லை. நீங்கள் அதை கசக்குவீர்கள். நீங்கள் அதை பேரழிவிற்கு உள்ளாக்குவீர்கள். அத்துடன் நீங்கள் ஒரு நல்ல மகரந்தச் சேர்க்கையாளரும் அல்ல. நீங்கள் சுற்றிச் சுற்றிச் சென்று ஒவ்வொரு ரோஜாப் பூவாகச் சென்று உங்கள் தலையை அதில் வைப்பதில்லை. ஒரு தேனீயால் மகரந்தச் சேர்க்கையை சிறப்பாகச் செய்ய முடியும். ரோஜாப் பூவில் உள்ள சகலதும் அந்த தேனீக்கானது தான், அந்த வண்ணத்துப்பூச்சிக்கானதுதான், அவற்றினால் தான் அதன் மகரந்தச் சேர்க்கையை நடத்தமுடியும். ஆகவே ஏன் நீங்கள் அதை அழகானதாகக்

தொடர்ச்சி 40ஆம் பக்கம்

### Words of Peace

பிறேம் றாவத் பற்றி மேலும் அறிந்து கொள்ள:

1.877. 707 3221 Toll free
416 431 5000 தமிழ்
416 264 7000 ஹிந்தி
www.wopg.org www.tprf.org



# சுண்டெலியும்...

33ஆம் பக்கத்தொடர்ச்சி

தெரிவிக்க இதுதான் நல்ல நேரம் என சுண்டெலியும் நினைத்தது. அது நாயின் கட்டுகளை தனது கூரான பற்களால் கடித்து அவிழ்த்து விட்டது. நாயும் சுண்டெலியிடம் தான் முன்னர் சிரித்ததிற்கு மன்னிப்பு கேட்டது.

சுண்டெலியும் தான் முதல் கூறியபடி செய்யக்கூடியதாக இருந்தது என சந்தோசப்பட்டது. அன்று முதல் நாயும் சுண்டெலியும் சேர்ந்து உணவை தேடச் சென்றன.

**நீதி - உருவுகண்டு எள்ளாமை வேண்டும் உருள் பெருந்தேர்க்கு**
**அச்சாணி அன்னார் உடைத்து**
**- திருக்குறள்.**

# பெருங்குடல்...

32ஆம் பக்கத்தொடர்ச்சி

கொள்ளல், தொலைபேசித் தொடர்புகளை ஏற்படுத்தல், நூல்களை வாசிப்பது பலன்தரும்.

எவரும் சில முன் நடவடிக்கை எடுத்தல் வேண்டும். 50 வயதுக்கு பின்பு Colonoscopy என்னும் பரிசோதனை செய்தல் வேண்டும். குடும்பத்தில் உள்ளவர்கள் யாருக்காவது இந்நோய் உள்ளதா? என அறிதல் வேண்டும். ஆபிரிக்கா, அமெரிக்கா, அமெரிக்க இந்தியர்கள் இப்பரிசோதனையை கட்டாயம் செய்தல் வேண்டும். வித்தியாசமான பழங்கள், மரக்கறிகள் உண்ண வேண்டும். பழங்கள், மரக்கறிகளை உண்ண வேண்டும். மது அருந்துவதனை தவிர்த்தல், புகைத்தலை நிறுத்துதல், உடல் பயிற்சி செய்தல், எடை கூடாமல் பார்த்து கொள்வது முக்கியமாகும். சில வைத்தியர்கள் அஸ்பிரின், Celebrex போன்ற மருந்துகளையும் வழங்குவர். இதில் சில பக்க விளைவுகளும் உள்ளன என வைத்தியர் கூறக்கூடும்.

கனடாவில் 'Canadian Society of Colon and Rectal Surgeons' நிறுவனம் மூலம் மிகச் சிறந்த நிபுணர்களை அறிய முடியும். அதேபோன்று Canadian Cancer Societyயும் பல விசேட ஆய்வுகளை மேற்கொண்டுள்ளது. எல்லோருடைய கருத்தின்படி 'Adenocarcinoma' என்ற வகை புற்றுநோயே 95% வீதமான



அளவில் உள்ளது. எதிராக மிகவும் அருமையான புற்றுநோய்களாக Small Cell Carcinoma, Melanoma, Soft Tissue Sarcoma என்பன உள. இதனை ஆரம்பநிலையில் குணமாக்கி விட முடியும்.

கனேடிய புற்று நோய் நிறுவனம் இப்புற்று நோயாளிகளின் உடலியல், மன எழுச்சி, ஆன்மீகம் என்பவற்றிற்கான பல சேவைகளை செய்து வருகிறது. சுயமதிப்பு, சுய பிரதிமை என்பவற்றினையும் விளக்கி வருகிறது. பல புதிய ஆய்வுகளையும் செய்து வருகிறது.

# எங்களுக்கு...

39ஆம் பக்கத்தொடர்ச்சி

காண்கின்றீர்கள். உங்களில் ஏதோ ஒன்று அழகானது உள்ளது. அத்துடன் அது அழகுடன் தொடர்புபடுகின்றது, அது அழகாக இருக்க விரும்புகின்றது. ஆகவே நான் சொல்லுவதெல்லாம் உங்களின் உள்ளே உள்ள அழகையும் கண்டுகொள்ளுங்கள் என்பதுதான்.

கேள்வி: நான் அமைதியை உணர விரும்புகின்றேன், ஆனால் உண்மையில் நான் அடிக்கடி அதிகம் கோபப்படுவதுண்டு. இவ் உணர்வுகளில் இருந்து வெளிவர உங்களால் உதவ முடியுமா?

பிரேம் ராவத்: ஒவ்வொரு நாளும் உங்களின் உள்ளே அமைதியை நீங்கள் எடுத்துச் செல்கின்றீர்கள். அந்த அமைதியை அறிந்து கொள்ள, அந்த அமைதியை உணர - அதுதான் அந்த உண்மைநிலை. உங்கள் கோபத்தின் குமுறல் அல்ல. பயம், ஐயம். இவ்விடயங்கள் உண்மையானவையா? உண்மையானவைதான். ஆனால் அவற்றின் உண்மை நிலையானது இருளைப் போன்றது. உண்மையானதொன்றின் உண்மை நிலை இல்லாதபோது ஏற்படுவதாகும். அதுவாக அதில் எதுவுமே இல்லை. அது ஒளி இல்லாததைப் போன்றது. நான் என்ன? நான் நடைபெற்றுக்கொண்டிருக்கும் ஒரு தொழில். மூலச் சொல் தொழில் அல்ல. நடந்து கொண்டிருக்கும் என்பதுதான் மூலச் சொல். அமைதியானது உங்கள் உள்ளத்தில் தான் வாசம் செய்கின்றது என்பதை நீங்கள் அறிந்திருக்கவேண்டும். இதுதான் நீங்கள் : உங்களுக்குத் தரப்பட்டுள்ளது இதுதான்.

# உலக பொதுமொழி - சிரிப்பு

சிரிப்புப்பாதி அழுகைபாதி சேர்ந்ததல்லவோ மனிதஜாதி, உள்ளத்தில் உவகை ஊற்றெடுக்கும் போது உருப்பெறுவது தான் உண்மையான சிரிப்பு. முறுவல் என்றும் நகை என்றும் அது அழைக்கப்படுகின்றது. புன்முறுவல் அமைதியான காதல் மனைவியின் கனிவான சிரிப்பு அதுவாகும். அடக்கமான சிரப்பாகும். முகத்திற்கு பொலிவையும் ஒளியையும் உண்டு பண்ணுவது சிரிப்பாகும். இருந்தும் தொடாமல் சுட்டுவிடுவதும் சிரிப்பாகும். சிந்திக்கத் தெரிந்த மனித இனத்திற்கே சொந்தமானது சிரிப்பு. பருவ வயதினர் ஒன்றுகூடி களித்திடும் போது சிரித்து மகிழ்கின்றனர். இதனால் சிரிப்பு ஒரு தொற்று வியாதியாகவும் மாறி விடுகின்றது. அது உள்ளங்கள் ஒன்றிணையவும் வழி செய்து விடுகின்றது. பல் வரிசையின் ஒளி பருவயதினரை ஈர்த்து விடுகின்றது.

தேவயானையின் புன்னகையை தனது முதல் பாட்டில் குறிப்பிட்டுள்ளார் அருணகிரியார். அது திரு நகை எனப்பட்டது. 'முத்தைத்தரு பத்தித் திருநகை, அத்திக்கிறை சத்திச்சரவண' என்பதுதான் பாடல். 'முத்தைத் தரு பத்தித் திருநகை' என்பதுதான் பாடல் முதல்வரி. பற்களின் ஒளி, அவற்றின் வரிசை இரண்டையும் சேர்த்து முத்தை-முத்து, பத்தி-வரிசை, அத்தி-தேவயானை. முத்தை நிகர்த்த பல் வரிசையால் புன்னகை புரியும் தேவயானையின் கணவன் முருகன் என்பதே இதன் பொருள். பற்களின் ஒளி சிரிப்பின் சிறுங்காரத்தை விஞ்சி விடுகின்றது.

அம்பிகையின் அழகினை வர்ணிக்கும் லலிதா சகஸ்ரநாமம்' 'மந்தஸ் மித ப்ரபா பூரமஜ்ஜத் காமோ மானஸா' என்று அவளது சிரிப்பின் அழகை இயம்புகின்றது. பனிமுறுவல் துவளப் பொறாது துடியிடை சாய்க்கும் துணைமுலையாள்' என்று அபிராமி அந்தாதி செப்புகின்றது. மயிலிறகின் தண்டுப் பகுதியின் வெண்மை அம்பிகையின் பல் வெண்மைக்கு உவமையாகக் கூறப்பட்டுள்ளது. 'சீதையின் புன்முறுவலை' புதியதோர் முறுவல் பூத்தாள் என்று கம்பர் வர்ணித்துள்ளார்.



ஆர்வம், பற்று, நட்பு, கனிவு, கரிசனை, மகிழ்ச்சி இவை ஏற்படும் போது புன்னகை இயல்பாகவே பூக்கும். கள்ளம் கபடமற்ற உள்ளம் வெள்ளைச் சிரிப்பின் பிறப்பிடம். கள்ளம் கபடமற்ற சிரிப்பு மழலைச் சிரிப்பு. அது அனைவரையும் ஈர்த்து விடுகின்றது.

மகிழ்ச்சியை உண்டு பண்ணும் சிரிப்பு சிலவேளைகளில் மனவருத்தத்தையும் உண்டுபண்ணி விடுகின்றது.

ஆணவச்சிரிப்பு, அலட்சியச் சிரிப்பு, சாகச்சிரிப்பு, சங்கீதச்சிரிப்பு, கள்ளச்சிரிப்பு, நகைச்சுவைச் சிரிப்பு என சிரிப்பின் வகைகள் பலவாம்.

பார்வைக் கண்ணாடியை முகத்தில் மாட்டிக் கொள்வதைப் போன்று சிலர் புன்னகையை முகத்தில் மாட்டிக் கொள்கின்றார்கள். வரவேற்பாளர்கள், விற்பனையாளர், செய்தியாளர், தொலைக்காட்சி அறிவிப்பாளர் மயக்கும் மோகினிகள் இந்த வகையினராகும். இதனை லாவகமாகச் செய்வதில் இவர்கள் கை தேர்ந்தவர்கள்.

அன்னியரைக் காணும்போது ஒரு புன்னகையை உதிர்த்து விடுவது உங்கள் நற்பண்பினை உணர்த்தும். அது உள்ளத்தின் நிழற்படமாகும். சிரிப்பு ஒரு நல்ல நோய் நிவாரணியுமாகும். 'வாய்விட்டு சிரித்தால் நோய்விட்டுப் போகும்'. சிரித்து வாழுங்கள் சிரிக்க வாழ்ந்திடாதீர்கள்.

சிவனின் சிந்திய சிரிப்பால் திரிபுரங்கள் எரிந்தன என்பது வரலாறு. "Smile is the language of the heart"



நா. க. சிவராமலிங்கம்

# 400 ஆண்டுகள் கண்ட கனவு பனாமா கால்வாய்



பனாமா கால்வாய் (Panama Canal) பசுபிக் பெருங்கடலையும் அத்திலாந்திக் பெருங்கடலையும் பனாமா ஊடாக இணைக்கும் செயற்கைக் கால்வாய் ஆகும். இக்கால்வாய் பனமா நாட்டுக்குள்ளால் சில மலைப் பள்ளத்தாக்குகள் சில குளங்கள் சில வாவிகள் என்பனவற்றை இணைத்துச் செல்லுகிறது. இது அமைக்கப்படும் முன்னர் கப்பல்கள் சுமார் 13,000 மைல் தூரத்தை கடல்வழியாக தென் அமெரிக்கக் கண்டத்தைச் சுற்றியே செல்ல வேண்டி யிருந்தது. அதுவும் அவ்வளவு சுலபமாக அமைந்து விடுவதில்லை. சவால்கள் நிறைந்த பயணம். பல நேரங்களில் பல விபத்துகளைச் சந்திக்க வேண்டி இருந்தது.




பதினாறாம் நூற்றாண்டிலேயே இத்தகைய கால்வாய்க்கான எண்ணம் சில நாடுகளிடம் இருந்தது. 1880 ஆண்டில் பிரான்சு தலைமையில் கால்வாய் வெட்டும் பணி தொடங்கியது. இங்கு நிலவிய கடுமையான வெப்பமும், மஞ்சள் காமாலை - ஹெபடைடிஸ் (Hepatitis), கோலரா, மலேரியா போன்ற கொடிய நோய்களால் இக்காலக்கட்டத்தில் சுமார் 25,000 தொழிலாளர்கள் உயிரிழந்தனர். இம்முயற்சி தோல்வியில் முடிவடைந்தது.

1904 ஆண்டில் அமெரிக்கா மீண்டும் இப்பணியைத் தொடங்கி 1914 ஆண்டில் பனாமா கால்வாய் திறக்கப்பட்டது. பிரெஞ்சு, அமெரிக்க முயற்சிகளில் மொத்தமாக 27,500 தொழிலாளர் இறந்ததாக மதிப்பிடப்பட்டுள்ளது. இக்கால்வாய் 50 மைல் அல்லது 80 கிமீ நீளமும் 2.5 தொடக்கம் - 12.5 மீட்டர் வரையில் ஆழமும் 91.5 மீட்டர் வரையில் அகலமும் கொண்டதாகும். 400 ஆண்டுகள் கண்ட கனவு நிறைவேறினால் எப்படி இருக்கும். இதை உலகம் முழுவதும் உள்ள கப்பல் மாலுமிகளும், கடல் பயணிகளும், கடல் வணிகர்களும் 1914 ஆம் ஆண்டு முதல் தடவை அனுபவித்தனர். அமெரிக்கக் கண்டத்தில் அட்லாண்டிக் கடலில் இருந்து பசிபிக் கடலுக்கும், பசிபிக் கடலில் இருந்து அட்லாண்டிக் கடலுக்கும் இடைப்பட்ட சுமார் 13,000 மைல் தூரம் 5,200 மைல் தூரமாக சுருங்கியது.

பசுபிக் பெருங்கடலும் அத்திலாந்திக் பெருங்கடலும் கடல் நீர் மட்டம் சிறிது வித்தியாசம் உண்டு. இணைக்கும் செயற்கை கால்வாயின் நில மட்டம் உயர்ந்து உயர்ந்து சென்று பின்னர் குறைந்து குறைந்து செல்லும். இதனால் இதனூடாகச் செல்லும் கப்பல்களை ஏற்றி, ஏற்றி, இறக்கி, இறக்கி பயணிக்க வேண்டியுள்ளது. இங்கு கப்பலை ஏற்றி, இறக்க கையாளப்படும் முறை மிக எளிதானது. ஏற்றி, இறக்கும் அந்தப் பகுதியை அடைப்புகள் (Lift Locks) என அழைப்பர். இந்த இடத்தில் ஒரு கப்பலை அடைத்து வைத்துக் கொள்ளக்கூடிய நீள அகலம் கொண்ட சில தொட்டிகள் இருக்கும். நீரை தேவையான போது நிரப்பி கப்பலை டீசல் ரயில் இன்யின்கள் (diesel locomotives) மற்றும் வலுவான இழுவை படகுகள் (Tugboats) உதவியினால் உள்ளே இழுத்து கப்பலை உள்பகுதியில் நிறுத்தி வைத்து கதவுகளை மூடி, மற்றைய தொட்டியிலுள்ள நீரை கப்பல் இருக்கும் தொட்டிக்குள் வடியவிடுவதனால் நீர்மட்டம் உயர கப்பலும் உயரும். இப்படியாக நீர் நிரப்பப்பட்டு கப்பல் தேவையான அளவு தூக்கப்படுகிறது. பின்பு மறுபுறம் கதவுகள் திறக்கப்பட்டு கப்பல் உயரமான அடுத்த தொட்டிக்கோ அல்லது கால்வாயின் உயரமான பகுதிக்கு நகர்த்தப்படுகிறது. இதேபோன்று கப்பலை இறக்குவதற்கும் கப்பலை அடைப்பிற்குள் விட்டு பின் பகுதியை அடைத்துவிட்டு மறுபுறம் அடைப்பு திறக்கப்பட்டு கப்பல் கடல் பதிவான மட்டத்தை அடையும்படி செய்கின்றனர்.

அடைப்பு (Lift Lock Station) நிலையங்கள் பகலில் தான் இயங்கும். கப்பல்கள் அடைப்புகளை கடப்பதற்கு காலையில் வரிசையில் காத்து நிற்பது ஒருவித அழகைத் தரும். கப்பல்களை ஏற்றி, இறக்கி அடைப்புகளை (Lift Locks) விட்டு அகலும் வரை நிகழும் வேலைகளை அவதானிக்கும் போது இன்னொருவித அனுபவம் கிடைக்கிறது. ஒரு அடைப்பை மட்டும் கடக்க சராசரி 60 நிமிடங்கள் பிடிக்கின்றன. பனாமா கால்வாயை காத்திருந்து மொத்தம் 3 அடைப்புகளையும் பனாமா கால்வாயையும் கடக்க சராசரி 9 மணித்தியாலம் பிடிக்கும். பனாமா கால்வாயை சபதம் பிடித்து விரைவாகக் கடக்க 2 மணித்தியாலம் 41 நிமிடம் எடுத்தாக சாதனை பதிவில் உள்ளது. சராசரி 40 கப்பல்கள் தினமும் கால்வாயை பாவிப்பதாயும் வருடம் ஒன்றிற்கு 12,000 - 15,000 கப்பல்கள் கால்வாயை பாவிப்பதாயும் பதிவாகியுள்ளது.




கடல் பயணிகளும், கடல்வணிகர்களும் பனாமா கால்வாயால் பயணம் மேற் கொள்ளுகிறார்கள். பனாமா கால்வாய் உல்லாசப்பயணக் கப்பல்கள் (Panama Canal Cruise Ships) பல சேவையில் உண்டு. இதன்போது கால்வாய் இரு மருங்கிலும் உள்ள இயற்கை அழகையும் மத்திய அமெரிக்க நாடுகளான Mexico, Guatemala, Honduras, Nicaragua, Costa Rica, Panama இவற்றில் சிலவற்றையும் கரிபியன் நாடுகளான Jamaica, Cayman Islands இவற்றில் சிலவற்றையும் கண்டு களிக்கும் சந்தர்ப்பங்களும் கிட்டுகிறது. ஒருமுறை பனாமா கால்வாயை கடந்த ஒருவரை மீண்டும் போகத் தூண்டும் பயணம் இது.

- சுந்தரம் இந்திரராஜா -




JRS AUTO TECH
OPEN 24 HOURS
7 DAYS A WEEK
MECHANICAL & ELECTRICAL REPAIRS FOR ALL MAKES & MODELS
Free Inspection & Diagnostics
Complete Car & Truck Care
Licensed Mechanics
Insurance Work Done
All Fluid Top Ups & A/C Repairs
Fuel Injection Service & Muffler/ Turbos
Courtesy Drop Off & Pick Up Available
Purchase Any Oil Change And Receive A Free Voucher For Basic Car Wash
SENIOR'S SPECIAL
Free Shuttle Available for Seniors
TIRE SPECIALS
NEW TIRES FROM $75
USED TIRES FROM $35
FREE OIL CHANGE WITH RUST PROOFING
$99 Car
$120 SUV
BRAKE JOB
STARTING FROM
$159
WATER PUMP TIMING BELT & LABOR
STARTING FROM
$450 Most Cars
$550 Most Vans
Castrol
REGULAR OIL CHANGE
$29.95
CASTROL OIL CHANGE
$39.95
SYNTHETIC OIL CHANGE
$49.95
SUV'S SYNTHETIC SPECIAL WITH FLUID TOP-UP PACKAGE FOR
$149.95
TRANSMISSION FLUSH
Starting From...
Imports
$74.95
Radiator Flush
$79.95
Domestic
$149.95
ENGINE CHECK WITH FREE DIAGNOSTICS
CHECK
LEXUS
FREE DTC Code Run and Inspection
2655 Lawrence Ave. East, Unit 5
(Midland & Lawrence, rear of the building)
CALL SUBAS DIRECT → 416-206-9489
Tel: 416-628-4399
Email: jrsautotech@hotmail.ca
Like, Share & Follow us at www.facebook.com/jrsautotech
*Prices subject to change. Valid with flyer.
Cannot be combined with any other offers.

# New Project By CONCORD

CONCORD ADEX

## "LAKE FRONT"

Lakeshore & Bathurst



SPECIAL INCENTIVE

VIP Packages for HomeLife/GTA Realtors & their Clients

Price Starting From Mid $ 200,000



HOMELIFE HIGHER STANDARDS

Tel: 416-321-6969

கனவு உங்களுடையது
பொறுப்பு எங்களுடையது

## HomeLife/GTA Realty Inc. Brokrage*

5215 Finch Ave. East Siute 203 Toronto ON. MIS 0C2

* INDEPENDENTLY OWNED AND OPERATED



















Free Real Estate Class - Call: 416.321.6969










விளம்பரம் பத்திரிகையை இணையத் தளத்தில் வாசிப்பதற்கு
www.vlambaram.com
www.tamilvanakkam.com

